விலை : 20.00
பக்கங்கள்:இருபத்து நான்கு
website : www.valampurii.lk
Viber : 076 636 3378

# வலம்புரி
Valampurii

E-mail: valampurii@yahoo.com,
valampurii@sltnet.lk

SPEED
PURIFIED DRINKING WATER
சுத்தமான குடி தண்ணீர்
மொத்தமாகவும் சில்லறையாகவும்
பெற்றுக் கொள்ள
மங்கல நிகழ்வுகள், வீடுகள்,
ஹோல்கள் (Hall)
விசேட விலைக்கழிவு
வழங்கப்படும்.
ஸ்ரீமுருகன்
தொலைத் தொடர்பகம்
303, கே.கே.எஸ் வீதி,
யாழ்ப்பாணம்.
021 222 5392

சங்கு 18 வள்ளுவர் ஆண்டு 2048 மாசி 19 வெள்ளிக்கிழமை (03.03.2017) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 074

# ஐ.நாவின் கோரிக்கையை உடனே நிராகரித்தேன்

## சர்வதேச நீதிபதிகளை உள்விடேன்; முடிவு மாறாது என ஜனாதிபதி மீளவும் பேச்சு



(கொழும்பு)

நாட்டில் இடம்பெற்ற போர்க்குற்றங்கள் மற்றும் மனித உரிமை மீறல்கள் தொடர்பான விசாரணையில் சர்வதேச நீதிபதிகள் இடம்பெற வேண்டும் என்ற ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் ஆணையாளரின் வலியுறுத்தலை, தான் 24 மணி நேரத்திற்குள் உடனடியாகவே நிராகரித்துவிட்டதாக தெரிவித்துள்ள ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன, தம்மால் தூய்மையான அரசியல் நிர்வாகத்தினை முன்னெடுக்க முடியும் எனவும் நம்பிக்கை தெரிவித்துள்ளார்.

23ஆம் பக்கம் பார்க்க....

## ஏ 35 வீதியில் தீ தணல்கள்!



24ஆம் பக்கம் பார்க்க....

## தமிழக மீனவர்கள் 13 பேர் கைது!

(நெடுந்தீவு)

இலங்கை கடற்பரப்பில் அத்துமீறி மீன்பிடியில் ஈடுபட்டார்கள் என்ற குற்றச்சாட்டில் தமிழக மீனவர்கள் 13 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இவர்கள் நேற்றைய தினம் இரு வேறு கடற்பரப்பில்வைத்து இலங்கை கடற்படையினரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

தமிழக மீனவர்கள் 9 பேர் வடமராட்சி வெற்றிலைக்கேணி கடற்

24ஆம் பக்கம் பார்க்க....

## வெலிக்கடை சிறை மோதல் விவகாரத்தில் அதிகாரிகள் காப்பாற்றப்படுகின்றனர்

### கைதிகள் உரிமைகாக்கும் அமைப்பு குற்றச்சாட்டு

(கொழும்பு)

2012 ஆம் ஆண்டு வெலிக் கடை சிறைச்சாலையில் ஏற்பட்ட மோதல்களின் போது இறந்த கைதிகளுக்கு நஷ்டஈடு பெற்றுக்கொடுப்பதன் மூலம் அரசாங்கம் சம்பவத்திற்கு பொறுப்புக் கூற வேண்டிய நபர்களை மூடி மறைக்க முயற்சித்து வருவதாக சிறைக் கைதிகளின் உரிமைகளை காக்கும் அமைப்பு குற்றம்சாட்டியுள்ளது.

இந்த சம்பவத்தின் போது பலியான 10 கைதிகளுக்கு தலா இருபது லட்சம் ரூபாய் நஷ்டஈடு பெற்றுக்கொடுக்க அமைச்சரவை தீர்மானித்துள்ளது.

அதே போன்று காயமடைந்த 20 கைதிகளுக்கு தலா ஐந்து லட்சம் ரூபாய் நஷ்டஈடு பெற்றுக்கொடுக்கவும் தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது.

இது குறித்து கருத்து தெரிவித்த சிறை கைதிகளின் உரிமைகளை காக்கும் அமைப்பின் தலைவர்

23ஆம் பக்கம் பார்க்க....




## நாகபடுவானில் கிடைத்த தமிழரின் தொன்மைச்சான்று

யாழ்.பல்கலைக்கழக தொல்லியல் இணைப்பாளர் பேராசிரியர் ப.புஸ்பரட்ணம் தலைமையிலான குழுவினர்

நாகபடுவானில் மேற்கொண்ட தொல்லியல் ஆய்வு

ஆச்சரியம் தரும் சின்னங்கள்

பூர்வீக வரலாற்று ஆதாரங்கள்

நாளை உங்கள் வலம்புரியில் வாசிக்கத் தவறாதீர்கள்.

## போர்க்குற்றங்களில் ஈடுபட்ட இராணுவத்துக்கு தண்டனை

### நிச்சயம் வழங்கப்படும் மகிந்த அமரவீர



(கொழும்பு)

போர்க்குற்றங்களில் ஈடுபட்ட இராணுவத்தினருக்கு நிச்சயம் தண்டனை வழங்கப்படுமென மீன்பிடித்துறை மற்றும் கடற்றொழில் துறை அமைச்சரும் ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பின் பொதுச் செயலாளருமான மகிந்த அமரவீர

23ஆம் பக்கம் பார்க்க....

## எழிலன் உள்ளிட்ட காணாமலாக்கப்பட்டோர் வழக்கு ஒத்திவைப்பு

(மல்லாவி )

இராணுவத்திடம் சரணடைந்த எழிலன் மற்றும் அருட் தந்தை பிரான்ஸில் ஜோசப் உள்ளிட்ட 12 பேரின ஆட்கொணர்வு மீதான வழக்கு விசாரணை மீண்டும் ஒத்திவைக்கப்பட்டுள்ளது.

வன்னியில் இடம்பெற்ற இறுதிக்கட்ட போரின் போது இராணுவத்தினரிடம் சரணடைந்த நிலையில்

23ஆம் பக்கம் பார்க்க....

## ஐ.நா மனித உரிமை ஆணையாளரை சந்தித்தார் அமைச்சர் மங்கள சமரவீர



24ஆம் பக்கம் பார்க்க....

## மறியலில் இருந்த குடும்பஸ்தர் மரணம்

(யாழ்ப்பாணம்)

நீதிமன்றத்தால் பிணை வழங்கப்பட்டிருந்தும் பிணை எடுப்பதற்கு யாரும் முன்வராத நிலையில் சிறையில் இருந்த குடும்பஸ்தர் ஒருவர் சுகவனம் காரணமாக யாழ் போதனா வைத்தியசாலையில் உயிரிழந்துள்ளார்.

நெல்லியடி தொண்டமனாற்றை சேர்ந்த மூன்று பிள்ளைகளின் தந்தையான சரவணமுத்து வேலுப்பிள்ளை (வயது 61) என்பவரே மேற்

24ஆம் பக்கம் பார்க்க....

## பன்றிக்காய்ச்சல் தாக்கம் சிகிச்சை பலனின்றி இளம் தாய் மரணம்

(மல்லாவி)

வவுனியா மாவட்ட பொது வைத்தியசாலையில் பன்றிக் காய்ச்சல் நோய்க்கு சிகிச்சை பெற்று வந்த இளம் தாயொருவர் சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளதாக வைத்தியசாலை பணிப்பாளர் கு.அகிலேந்திரன் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில்,

கடந்த பெப்ரவரி மாதம் 22, ஆம் திகதி பன்றிக் காய்ச்சலுக்கு இலக்காகி வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்று வந்த நிலையில் சிகிச்சை பலனின்றி இளம்

23ஆம் பக்கம் பார்க்க....

நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

## இந்திய விபூதி விற்பனைக்கு

எம்மிடம் இந்திய ஸ்ரீ சக்தி விலாஸ் ஜவ்வாது வாசனை விபூதியை (1kg), மொத்தமாகவும் (ரூ.100), சில்லறையாகவும் (ரூ.110) பெற்றுக்கொள்ளலாம். (சி-7701)

**சிவா நறுமணப் பூங்கா**

இல.288, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
(சிக்னல் லைற்றுக்கு அருகில்)


## தீப்பற்றியது ஆட்டோ

(கொழும்பு)

புறக்கோட்டை பகுதியில் நேற்றுக் காலை ஆட்டோ ஒன்று திடீரென தீ பரவலுக்குள்ளாகியுள்ளது.

குறித்த தீ பரவலுக்கு இயந்திரக் கோளாறு காரணமாக இருக்கலாமென பொலிஸார் தெரிவித்தனர்.

ஆட்டோவில் பரவிய தீ அணைக்கப்பட்டுள்ள நிலையில், ஆட்டோ முழுமையாக சேதடைந்துள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

குறித்த விபத்தினால் உயிராபத்துக்கள் எதுவும் பதிவாகவில்லையென பொலிஸர் தெரிவித்தனர். (இ-7)

## சங்கானை பனை தென்னை வள அபிவிருத்தி கூட்டுறவுச் சங்கம் (வ/து)

**கிளை நிலையங்கள் கட்டுவதற்குரிய கூலிக்கான கூறுவிலை கோரல்**

மேற்படி சங்கத்தின் கிளை நிலையங்களான 58, 60 புதிதாக அமைப்பதற்குரிய கூலிக்கான கூறுவிலையினை சங்க தலைமை காரியாலயத்தில் வழங்கப்படும் விண்ணப்படிவத்தினை மீளளிக்கப்படாத ரூபாய் 100.00 செலுத்தி பெற்று பூரணப்படுத்தி எதிர்வரும் 25.02.2017 இற்கு முன்பு சங்க தலைமை காரியாலயத்தில் ஒப்படைக்குமாறு கோரப்பட்ட விளம்பரம் கால நீடிப்பு செய்யப்பட்டு 15.03.2017 வரை விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் என்பதை தெரியப்படுத்தி கொள்கின்றேன்.

குறிப்பு : சங்க பணிப்பாளர்கள், சங்க அங்கத்தவர்களின் விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது.

**தலைவர்**
**பனை தென்னை வள அபிவிருத்தி கூட்டுறவுச் சங்கம் பிரதான வீதி, சங்கானை.**
(8097)

## மு/சிலாவத்தை தமிழ் வித்தியாலயம்

பணி வியந்து விழாப் பூணும்

## சேவை நலன் பாராட்டு



திருமதி
**வி.விகிர்தபாலன்**
SLTS - I
உப அதிபர்
மு/சிலாவத்தை தமிழ்
வித்தியாலயம்

Best Wishes

**வாய்மையின் சொந்தக்காரி**

தேன் மொழியால் தாய்மொழி கற்பிக்கும்
வாய்மையின் சொந்தக்காரி...
அகவை அறுபதை நீர் எட்டினாலும்!
அயராத உம் பணிக்கு
அகவை ஏது....?
மாணாக்கர் மனதறிந்து

வகிபாகம் பல ஏற்கும்
விகிர்தபாலன் நீங்கள்
விட்டுச்செல்லும் பணி தொடர
விதைகள் பல காத்திருக்கு...!
விதைகள் அவை விருட்சமாக
வழிகாட்டும் உம் சுவடு...!

எமது பாடசாலையில் உப அதிபராகக் கடமையாற்றி இன்று (03.03.2017) வெள்ளிக்கிழமை ஓய்வுபெறும் திருமதி வி.விகிர்தபாலன் அவர்கள் வளம் பல பெற்று விண்போற்ற வாழவென மனதார வாழ்த்துகின்றோம்.

*வாழ்த்துக்களுடன் :*
அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள், கல்விசாரா ஊழியர்கள்
(8099)

## ஐடியலின் இதய அஞ்சலி



| தோற்றம் | மறைவு |
|---|---|
| 28.07.1940 | 02.03.2017 |

அமரர்
**வேலாயுதர் இலகுநாதன்**

எமது கல்வி நிறுவன சிரேஷ்ட விஞ்ஞான ஆசான் திரு.இ.செந்தூர்ச்செல்வன், I.C.T ஆசான் திரு.இ.சிவச்செல்வன் அவர்களின் தந்தையாரின் பிரிவுச் செய்தி கேட்டு துயர் அடைகின்றோம். அன்னாரின் இழப்பால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

**ஐடியல் அக்கடமி சமூகம்**

சீரணிச்சந்தி, சண்டிலிப்பாய். (8095) 681/B, K.K.S வீதி, யாழ்ப்பாணம்

## மரண அறிவித்தல்



## வேலாயுதர் இலகுநாதன்

இல.99, புங்கன்குளத்தினை பிறப்பிடமாகவும் ஓடை ஒழுங்கை, வண்ணார் பண்ணையினை வசிப்பிடமாகவும் கொண்ட வேலாயுதர் இலகுநாதன் நேற்று (02.03.2017) வியாழக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற திரு.திருமதி வேலாயுதர் தம்பதிகளின் கனிஷ்ட புத்திரனும், காலஞ்சென்ற திரு.திருமதி ஐயம்பிள்ளை தம்பதிகளின் மருமகனும், தங்கமுத்து (பவளம்) அவர்களின் பாசமிகு கணவரும், செந்தூர்ச்செல்வன் (ஆசிரியர், யா/உடுவில் மகளிர் கல்லூரி), சிவதர்சினி (அ/தி உத்தியோகத்தர், யாழ்.கல்வி வலயம்), சிவச்செல்வன் (ஆசிரியர், யா/நெடுந்தீவு றோ.க.மகளிர் கல்லூரி) ஆகியோரின் பாசமிகு தந்தையும், பரமேஸ்வரி, றஜிந்தன் (உள்ளக கணக்காய்வுப் பகுதி, வடபிராந்திய போக்குவரத்து சபை) ஆகியோரின் அருமை மாமனாரும், வர்ஷினி, அபிஷேக், விஹிர்தன் ஆகியோரின் பாசமிகு பேரனும், காலஞ்சென்றவர்களான சின்னத்தம்பி,வள்ளியம்மை, நாகம்மா, தனுக்கோடி, சுப்பிரமணியம், கதிராசிப்பிள்ளை ஆகியோரின் சகோதரனும், அன்னம்மா, அன்னலட்சுமி மற்றும் காலஞ்சென்றவர்களான தங்கரத்தினம், அப்பாப்பிள்ளை தர்மலிங்கம் ஆகியோரின் மைத்துனருமாவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று (03.03.2017) வெள்ளிக்கிழமை நண்பகல் 12 மணியளவில் அன்னாரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைகளுக்காக கோம்பையன்மணல் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

**25/15B, ஓடை ஒழுங்கை,**
**வண்ணார்பண்ணை, யாழ்ப்பாணம்.** (8094)

**தகவல் :**
**குடும்பத்தினர்**

## வலிகாமம் கிழக்கு பிரதேசசபை கோப்பாய் உப அலுவலகம் ஆதனப் பெயர்மாற்ற அறிவித்தல்

வலிகாமம் கிழக்கு பிரதேசசபை கோப்பாய் உப அலுவலகத்திற்குட்பட்ட வட்டாரம் 06, வச்சாவளை ஒழுங்கை, ஆதன இலக்கம் 41.43 என்ற இலக்கத்தைக் கொண்டதும் "கிரியமந்தனை" நிலப்பரப்பு 24-ம் கொண்ட கிராமசேவையாளர் பிரிவு : J/260, கோப்பாய் தெற்கு, கோப்பாயில் அமைந்துள்ள ஆதனத்தில் உரிமையாளர் பெயர் வி.முத்துக்குமாரசாமி என ஆதனப்பதிவேட்டில் பதியப்பட்டுள்ளது.

வலிகாமம் கிழக்கு பிரதேசசபை கோப்பாய் உப அலுவலகத்திற்குட்பட்ட வட்டாரம் 06, அதிகாரி ஒழுங்கை, ஆதன இலக்கம் 09.11 என்ற இலக்கத்தைக் கொண்டதும் "கஞ்சாறிசீமா" நிலப்பரப்பு 16ம் குழி 17ம் கொண்ட கிராமசேவையாளர் பிரிவு : J/260 கோப்பாய் தெற்கு, கோப்பாயில் அமைந்துள்ள ஆதனத்தில் உரிமையாளர் பெய[ர்] வி.முத்துக்குமாரசாமி என ஆதனப்பதிவேட்டில் பதியப்பட்டுள்ளது.

குறித்த இவ்விரு ஆதனங்களும் முத்துக்குமாரசாமி 07.05.83 இல் மரணசாதனம் எழுதாமல் தனது ஆதனங்களை விட்டு இறந்துள்ளார். இவ் ஆதனத்தை முத்துக்குமாரசாமி வன்னியசேகரமும், வன்னியசேகரம் புனிதவதியும் தந்தையார் இறந்தபின்பு ஏறக்குறைய 30 வருடங்களுக்கு மேலாக தமது ஆட்சியிலும் உடமையிலும் இருப்பதால் தாமே சட்டப்படி உரித்தாளர்கள் ஆவோம் என பிரசித்த நொத்தாரிஸ் இலங்கை குடியரசின் யாழ்ப்பாண மேல்நீதிமன்ற வலய பிரசித்த நொத்தாரிஸ் இராசேந்திரன் வசந்தசேனன் முகதாவில் 10131 இலக்க 2014.08.15 ஆந் திகதிய வெளிப்படுத்தல் உறுதியின்படி வெளிப்படுத்தியுள்ளனர்.

வடமாகாணம் யாழ்ப்பாணம் மாவட்டம், வலிகாமம் கிழக்குப்பகுதி கோப்பாய் கோவில்பற்று கோப்பாய் தெற்கு இறை "கிரியமந்தனை" என்னும் பெயருள்ள நிலப்பரப்பு 24ம், உத்தரவு பெற்ற நில அளவையாளர் ம.சிற்றம்பலத்தால் 26.08.2007 திகதிய 2113ம் இலக்கத்தில் தயாரித்த படத்தில் துண்டுகள் 1,2,3 என காட்டப்பட்டது.

வடமாகாணம் யாழ்ப்பாணம் மாவட்டம், வலிகாமம் கிழக்குப்பகுதி கோப்பாய் கோவில்பற்று கோப்பாய் தெற்கு இறை "கஞ்சாறிசீமா" நிலப்பரப்பு 16ம் குழி 17ம் கொண்ட உத்தரவு பெற்ற நில அளவையாளர். சிற்றம்பலத்தால் 09.03.2014 ஆந் திகதிய 3705ம் இலக்கத்தில் தயாரித்த படத்தில் துண்டுகள் 1,2,3 என காட்டப்பட்டுள்ளது.

இவ்வாதனங்களானது முத்துக்குமாரசாமி வன்னியசேகரம், முத்துக்குமாரசாமி மகள் புனிதவதி என்ற பெயருக்கு ஆதனப் பதிவேட்டில் பதிவது தொடர்பாக ஆட்சேபனைகள் தெரிவிப்பவர்கள் யாராவது இருப்பின் உரிய ஆவணங்களுடன் 14 நாட்களுக்குள் எழுத்து மூலம் அறியத்தருமாறும் அவ்வாறு உரிமை கோராதவிடத்து குறித்த ஆதனமானது முத்துக்குமாரசாமி வன்னியசேகரம்,

முத்துக்குமாரசாமி மகள் புனிதவதி என்பவர்கள் பெயருக்கு பெயர்மாற்றம் செய்ய உரிய நடவடிக்கை எடுக்கப்படும் என்பதுடன் இந்த ஆதனம் பெயர் மாற்றம் செய்வதால் வரக்கூடிய எப்பொறுப்பிற்கும் வலிகிழக்கு பிரதேசசபை பொறுப்பாளி அல்ல என்பதை தெரிவித்துக் கொள்கிறேன்.

**யு.ஜெலீபன்**
**செயலாளர்,**
**வலி கிழக்கு பிரதேசசபை, புத்தூர்.**
**02.03.2017**
(சி-7699)

# மூடநம்பிக்கை அதிகரித்துவிட்டது

# சுதந்திரத்தை உச்சளவில் பயன்படுத்தி நாட்டிற்கு பாதிப்பை ஏற்படுத்த வேண்டாம்

## ஜனாதிபதி மைத்திரி வலியுறுத்து

(கொழும்பு)

சுதந்திரமான ஜனநாயக சமூகத்தில் போராட்டங்களையும், ஆர்ப்பாட்டங்களையும் நடத்த முடியும் என்பதுடன் விமர்சனங்களையும் முன்வைக்க முடியும் என ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தெரிவித்துள்ளார்.

இந்த ஜனநாயக சுதந்திரத்தை உச்சமாக பயன்படுத்தி நாட்டிற்கு பாதிப்பை ஏற்படுத்த வேண்டாம் எனவும் ஜனாதிபதி வலியுறுத்தியுள்ளார்.

லக்சந்த செவன தொடர் மாடி வீட்டுத் திட்டத்தின் இரண்டாம் கட்டத்தை மக்களுக்கு வழங்கி வைக்கும் நிகழ்வில் நேற்று கலந்து கொண்டு உரையாற்றும் போதே ஜனாதிபதி இதனைக் கூறியுள்ளார்.

நாடு என்ற வகையில் நம்பிக்கையுடன் சிந்திக்க வேண்டும் என்ற போதிலும் இலங்கையில் மூடநம்பிக்கையான எண்ணங்கள் அதிகரித்துள்ளன.

இந்த மூட நம்பிக்கை காரணமாக மக்கள் தவறாக வழிநடத்தப்படுகின்றனர். மூட நம்பிக்கைகளுக்கு ஊடகங்களிலும் தற்போது அதிக இடம் வழங்கப்படுகிறது.

இப்படியான நிலைமையில் ஜனநாயகத்தையும் சுதந்திரத்தையும் தவறாக பயன்படுத்தி நாட்டிற்கு சேதத்தை ஏற்படுத்த வேண்டாம் எனவும் ஜனாதிபதி கேட்டுக் கொண்டுள்ளார். (இ-7)


**நீரிழிவுப் பாதிப்புக்களுக்கு ஆயுர்வேத மருத்துவம்**

ஆரம்ப - நாட்பட்ட நீரிழிவுப் பாதிப்புக்கள் அதிகதாகம், அதிக பசி, அடிக்கடி சிறுநீர் வெளியேறுதல், இளைப்பு, களைப்பு, நரம்புப் பாதிப்புக்கள் (Diabetic neuropathy), கை - கால் விறைப்பும் உணர்வற்ற நிலையும் (Numbness of hands and legs), சமிபாட்டுக் குழப்பம், மலச்சிக்கல், அதிக இரத்தக் கொலஸ்ரோல், உயர் இரத்த அழுத்தம், இதய இரத்தக் குழாய் அடைப்பு (Coronary heart disease), இதய வலி (Chest pain / Angina) சிறுநீரகப் பாதிப்புக்கள் (Diabetic nephropathy), சிறுநீரில் ஏற்படும் கிருமித் தொற்றுக்கள் (Renal infections), மற்றும் சிறுநீரில் அதிகளவு புரோட்டின், யூரியா அதிக அளவில் காணப்படுதல் போன்ற நீரிழிவுப் பாதிப்புக்களிற்கு ஆயுர்வேத முறைப்படி மருந்து, உணவு, வாழ்க்கை முறை போன்ற ஆலோசனைகளுடன் சிகிச்சை பெறலாம்.

**ஆலோசனைகளுக்கு அனுமதி பெற தொலைபேசியில் தொடர்பு கொள்ளவும்.**

(சி-7709)

Dr. R.LAKSHMANA IYER (D A M (cey), D M G (ind)
Regd - (7966,Dep Ayu - 6-3/1/2541)
மங்களபதி சித்த ஆயுள்வேத வைத்தியசாலை
41/5, அரச வீதி (சங்கிலியன் வீதியின் உள்ளே)
நல்லூர் - யாழ்ப்பாணம்,
Tel. 021 205 4066 / 077 872 5251



# 16,479 டெங்கு நோயாளர்கள் இரண்டு மாதங்களில் கண்டறிவு

## 24 பேர் உயிரிழப்பு!

(கொழும்பு)

இவ்வருடத்தின் கடந்த இரண்டு மாதத்துக்குள் 16 ஆயிரத்து 479 டெங்கு நோயாளர்கள் கண்டறியப்பட்டுள்ளதாக சுகாதார அமைச்சு அறிவித்துள்ளது. இவர்களில் 24 பேர் மரணம் அடைந்துள்ளதாகவும் அமைச்சு தெரிவித்துள்ளது. இருப்பினும் ஜனவரி மாதத்துடன் ஒப்பிடுகையில் பெப்ரவரி மாதத்தில் இந்த நோயாளர்களின் எண்ணிக்கை குறைவடைந்துள்ளதாகவும் அமைச்சு சுட்டிக்காட்டியுள்ளது.

## 45 ஆவது பிரதம நீதியரசராக பிரியசாத் டெப் சத்தியப்பிரமாணம்



இலங்கையின் 45ஆவது பிரதம நீதியரசராக, உயர் நீதிமன்றத்தின் சிரேஷ்ட நீதியரசர் பிரிய சாத் டெப், ஜனாதிபதியின் முன்னிலையில் சத்தியப்பிரமாணம் செய்து கொண்டார். முன்னாள் பிரதம நீதியரசர் கே. ஸ்ரீபவன் ஓய்வு பெற்றதைத் தொடர்ந்து அரசியலமைப்பு சபையின் பரிந்துரைக்கு அமைய பிரியசாத் டெப் ஜனாதிபதியினால் நியமிக்கப்பட்டுள்ளார்.

பதவியேற்பு நிகழ்வு நேற்றுக் காலை ஜனாதிபதி செயலகத்தில் இடம்பெற்றதாக ஜனாதிபதியின் ஊடகப்பிரிவு அறிவித்துள்ளது. (இ-3)

## அநுர சேனநாயக்கவுக்கு 16வரை விளக்கமறியல்



ரக்பி வீரர் வசீம் தாஜுடீனின் படுகொலை சம்பவம் தொடர்பில், கைதுசெய்யப்பட்ட முன்னாள் சிரேஷ்ட பிரதிப் பொலிஸ்மா அதிபர் அநுர சேனநாயக்கவை எதிர்வரும் 16 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு கொழும்பு மேலதிக நீதவான் நேற்று உத்தரவிட்டுள்ளார்.

ரக்பி வீரர் வசீம் தாஜுடீன் கொலை வழக்கில் அநுர சேனநாயக்க மற்றும் நாராஹேன்பிட்ட குற்றவியல் பிரிவின் பொறுப்பதிகாரி சுமித் பெரேரா ஆகியோர் கைது செய்யப்பட்டிருந்த நிலையில், முதலாம் சந்தேக நபரான சுமித் பெரேரா பிணையில் விடுவிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (இ-7)


**குடற்புண்ணிற்கு (அல்சர்) நிரந்தரசிகிச்சை**

**Special Treatment for Gastric Ulcer**

சடுதியாக அல்லது நாட்பட்ட நிலையில் ஏற்பட்ட இரைப்பை, சிறுகுடல் விரணங்கள் (Acute or Chronic Gastric & Peptic Ulcer),வயிற்றுவலி, வயிற்றில்எரிவு, சமிபாட்டுவேளைவலி, அடிக்கடி பசியுணர்வு, நெஞ்செரிப்பு, புளித்தஏப்பம், வாயில் மணம், காலையில் பித்தவாந்தி அல்லது வாந்தியுணர்வு, உணவில் வெறுப்பு அல்லது பசியின்மை, தொடர் விக்கல், கல்லீரலில் அதிகொழுப்பு, ஈரல் வீக்கம் (Fatty & Enlarged Liver), மற்றும் மலச்சிக்கல் அல்லது அடிக்கடி மலம்கழிக்கும் உணர்வு (Irritable Bowel Syndrom), உடற்பலவீனம், அமைதியின்மை, களைப்பு போன்ற பிரச்சினைகளுக்கு மருத்துவ ஆலோசனைகளுடன் கூடிய சிகிச்சை களால் நிரந்தர குணம்பெறலாம்.

**ஆலோசனைகளுக்கு அனுமதி பெற தொலைபேசியில் தொடர்பு கொள்ளவும்.**

(சி-7709)

Dr. R.LAKSHMANA IYER (D A M (cey), D M G (ind)
Regd - (7966,Dep Ayu - 6-3/1/2541)
மங்களபதி சித்த ஆயுள்வேத வைத்தியசாலை
41/5, அரச வீதி (சங்கிலியன் வீதி எதிரில்)
நல்லூர் - யாழ்ப்பாணம்,
Tel. 021 205 4066 / 077 872 5251


## பாதாள உலக குழு தலைவர்கள் போன்று செயற்படும் அரசியல் தலைவர்கள்-இசுறு

அரசியல்தேவைக்கு அமைய செயற்பட்டதே மாலபே தனியார் மருத்துவப் பல்கலைக்கழகத்தின் நெருக்கடிக்கு பிரதான காரணம் என மேல் மாகாண முதலமைச்சர் இசுறு தேவப்பிரிய தெரிவித்துள்ளார்.

மீகொடை பிரதேசத்தில் நேற்று முன்தினம் நடைபெற்ற பொதுக் கூட்டம் ஒன்றில் பேசும் போதே அவர் இதனைக் கூறியுள்ளார்.

இன்றைய அரசியல் தலைவர்கள் பாதாள உலக குழுக்களின் தலைவர்கள் போன்று செயற்படுவதன் காரணமாக பிரதேச அபிவிருத்திக் கூட்டம் ஒன்றை கூட நடத்த முடியாத அளவிற்கு சிரமம் ஏற்பட்டுள்ளது எனவும் முதலமைச்சர் கவலை வெளியிட்டுள்ளார். (இ-7)

## பேராதனைப் பல்கலைக்கழகத்தின் 15 மாணவர்களுக்கு விளக்கமறியல்

பேராதனைப் பல்கலைக் கழகத்தின் விவசாய பீடத்தின் புதிய மாணவர்கள் எட்டு பேரை நிர்வாணப்படுத்தி துன்புறுத்தி பகிடிவதைக்குட்படுத்திய 15 மாணவர்களையும் விளக்கமறியலில் வைக்குமாறு நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

குறித்த மாணவர்களை எதிர்வரும் 16 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

பகிடிவதை குறித்து பல்கலைக்கழக உயர் அதிகாரிகளுக்கு முறைப்பாடுகள் கிடைக்கப் பெற்றதையடுத்து, பகிடிவதை புரிந்தவர்கள் எனச் சந்தேகப்படும் 15 மாணவர்களை பேராதனை பொலிஸார் கைது செய்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (இ-7)

# பட்டச்சான்றிதழ் வழங்கும் நிகழ்வு


கோப்பாய் ஆசிரியர் பயிற்சிக் கலா சாலையில் 2014/2015 கல்வியாண்டில் கற்று பரீட்சையில் சித்தியடைந்த ஆசிரிய பயிலுநர்களுக்கான ஆசிரியர் பயிற்சி பட்டச் சான்றிதழ் வழங்கும் நிகழ்வு நாளை 4ஆம் திகதி சனிக்கிழமை இரு அமர்வுகளாக நடைபெற உள்ளது. முதலாவது அமர்வில் சான்றிதழ் பெறும் ஆசிரியர்களை காலை 7.30 மணிக்கும், இரண்டாவது அமர்வில் சான்றிதழ் பெறும் ஆசிரியர்களை மு.ப 11.30 மணிக்கும் கலாசாலைக்குச் சமுகமளித்து தங்கள் வரவினை உறுதிப்படுத்திக் கொள்ளுமாறு கலாசாலையின் முதல்வர் V.கருணைலிங்கம் கேட்டுள்ளார். (செ)

# மாட்டுடன் மோதுண்டு மோ.சைக்கிள் விபத்து

## சிறுவன் படுகாயம்

(மல்லாவி )

மாங்குளம் பொலிஸ் நிலையப்பிரிவிற்குட்பட்ட மாங்குளத்தில் இருந்து துணுக்காய் செல்லும் வீதியில் (மாங்குளம் புகையிரத நிலையத்திற்கு அண்மையாக) ஒரு மோட்டார் சைக்கிளில் 04 பேர் பயணித்த நிலையில் அவர்கள் வீதியில் சென்ற மாட்டுடன் மோதி விபத்துக்குள்ளானதில் 08 வயது சிறுவன் ஒருவன் படுகாயமடைந்து ஆபத்தான நிலையில் மாங்குளம் ஆதார வைத்தியசாலையில்



அனுமதிக்கப்பட்டுள்ளனர். படுகாயமடைந்த சிறுவன் பின்னர் மேலதிக சிகிச்சைகளுக்காக கிளிநொச்சி மாவட்ட வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டுள்ளதாகவும் மாங்குளம் பொலிஸ் நிலையத் தகவலில் தெரிவிக் கப்பட்டுள்ளது.

இச்சம்பவம் நேற்று வியாழக்கிழமை இரவு 07 மணியளவில் நடை பெற்றுள்ளது.

இது தொடர்பில் மேலும் தெரிய வருவது.

மாங்குளம் நகரப் பகுதியில் இருந்து வன்னி விழான்குளம் 06, ஆம் கட்டை பகுதியில் உள்ள தமது வீட்டுக்குச் செல்வதற்காக ஒரு மோட்டார் சைக்கிளில் 8வயது சிறுவன் உட்பட 04 பேர் பயணித்துள்ள நிலையில் வீதியில் சென்ற பசு மாட்டுடன் மோட்டார் சைக்கிள் மோதி விபத்துக்குள்ளானதில் மோட்டார் சைக்கிள் சிதறுண்டு சேதமடைந்ததுடன், அதில் பயணித்த பிரஸ்தாப சிறுவன் படுகாயம் அடைந்துள்ளான்.

ஏனையவர்கள் சிறு காயங்களுடன் தப்பியுள்ளதுடன் பசுமாட்டின் காலொன்றும் முறிவடைந்துள்ளது.

இந்த விபத்துச் சம்பவத்தில் வன்னி விழான்குளம் 06, ஆம் கட்டை பகுதியைச் சேர்ந்த இரத்தினசபாபதி - இந்துசன் (வயது - 08) என்ற சிறுவனே படுகாயமடைந்து ஆபத்தான நிலையில் மருத்துவமனையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டவராவார். (செ-15)

## மு/கோம்பாவில் விக்னேஸ்வர வித்தியாலயம்

# பழைய மாணவர் சங்க பொதுக் கூட்டம் - 2017

மேற்படி கூட்டமானது பாடசாலை மண்டபத்தில் 05.03.2017 ஞாயிற்றுக்கிழமை மு.ப 10.00 மணிக்கு நடைபெற இருப்பதால். சகல பழைய மாணவர்களையும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் கேட்டுக் கொள்கிறோம்.

குறிப்பு :- பல முக்கிய விடயங்கள் கலந்துரையாடப்படவுள்ளன

அதிபர்,
மு/கோம்பாவில் விக்னேஸ்வர வித்தியாலயம்,
புதுக்குடியிருப்பு. (C - 7711)

ஓம் விஸ்வ பிரம்மனே நமஹ

# மரண அறிவித்தல்



## பொன்னுத்துரை கருணாகரன்

### (சுரேஸ்)

யாழ்ப்பாணம் மல்லாகத்தை பிறப்பிடமாகவும் கனடா டொரொன்டோவை வசிப்பிடமாகவும் கொண்ட பொன்னுத்துரை கருணாகரன் அவர்கள் 02.03.2017 அன்று யாழ்ப்பாணத்தில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற பொன்னுத்துரை - சரோஜினிதேவி ஆகியோரின் அன்பு மகனும் பிரதீபாவின் (கனடா) அன்புக் கணவரும் லபிசன், ரேணுகா ஆகியோரின் பாசமிகு தந்தையும் றமேஸ்வரன் (கனடா), காலஞ்சென்ற காஞ்சனாதேவி (லண்டன்), காண்டீபன் (காண்டீ) (மல்லாகம்) ஆகியோரின் சகோதரனும்,

சுகன்யா (கனடா), றகுலேஸ்வரன் (லண்டன்), சுபத்திரா (மல்லாகம்) ஆகியோரின் மைத்துனரும் சுவேதன் (கனடா), லக்சனா (கனடா), வைஷ்ணவி (லண்டன்), தட்சாயினி (லண்டன்) ஆகியோரின் சித்தப்பாவும் சக்திகிரீசன் (மல்லாகம்), சபரீசன் (மல்லாகம்) ஆகியோரின் பெரியப்பாவும் ஆவார்.

அன்னாரின் ஈமக் கிரியைகள் 03/03/2017 இன்று வெள்ளிக்கிழமை நண்பகல் 12 மணியளவில் மல்லாகத்தில் அவரது இல்லத்தில் நடைபெற்று பிற்பகல் 2 மணியளவில் பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக மல்லாகம் இந்துமயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல் :
காண்டீபன் (சகோதரன்)
0771345985

மில் ஒழுங்கை,
மல்லாகம். (8092)

# 54வது பிறந்ததின வாழ்த்துக்கள்

## 03.03.2017



## திரு.ஆறுமுகம் ரவீந்திரன் (J.P)

(B.A., PGDE, M.Ed)

மானிலம் போற்றும் மாசற்ற மகனே
இவ்வுலகம் உள்ளவரை
மூவுலகும் வாழ்த்தும் உன்னை
வாழ்க வாழ்க என வாழ்த்துகின்றோம்.

வாழ்த்துவோர் :
யாழ் பல்கலைக்கழக வாழ்வக மாணவர்கள்
(சட்டத்துறை, கலைத்துறை) (C - 7698)

# 1ம் ஆண்டு நினைவு நாள்

மண்ணில்
05 . 02 . 1932



விண்ணில்
03 . 02 . 2016

## அமரர் வேலன் இலட்சுமி

(வளர்மதி, கரவெட்டி கிழக்கு)

கடந்த 03.02.2016 அன்று சிவபதமடைந்த எங்கள் குடும்ப ஒளிவிளக்கு அமரர் வேலன் இலட்சுமியின் 1ஆம் ஆண்டு நினைவு தினம் அவரது இல்லத்தில் இன்று 03/03/2017 வெள்ளிக்கிழமை நடைபெறுகின்றது. இந்த 1ஆம் ஆண்டு நினைவு நாளில் இவ் அழைப்பை தனிப்பட்ட அழைப்பாக ஏற்று வருகை தந்து ஆத்மசாந்தி பிரார்த்தனையிலும் நண்பகல் நடைபெறும் மதிய போசன நிகழ்விலும் கலந்துகொள்ளுமாறு அன்புடன் கேட்டுக்கொள்கின்றோம்.

வளர்மதி,
கரவெட்டி கிழக்கு,
கரவெட்டி. (C - 7703)

இங்ஙனம் :
குடும்பத்தினர்

# வானில் கையுறையை நுகர்ந்ததும் தொழிற்சாலைக்குள் கிரோ ஓடியது



(கொழும்பு)

ஹொரணை, மொரகஹாஹேனவில் கைவிடப்பட்டிருந்த நிலையில் மீட்கப்பட்ட டொல்பின் ரக வானிலிருந்து கைப்பற்றப்பட்ட கையுறையை நுகர்ந்த பொலிஸ் மோப்பநாயான கிரோ, கைவிடப்பட்டிருந்த தேயிலை தொழிற்சாலைக்குள் ஓடியுள்ளது. இதனையடுத்தே, விசேட அதிரடிப்படையினர் அந்த தேயிலை தொழிற்சாலையை சுற்றி வளைத்து, தேடுதல் நடவடிக்கையை நேற்று முன்தினம் மேற்கொண்டனர். இதேவேளை, கைப்பற்றப்பட்ட அந்த டொல்பின் வான், கட்டுநாயக்க விமான நிலையத்துக்குச் செல்வதற்காக, ஜனவரி மாதம் 6ஆம் திகதியன்று வாடகைக்கு, அமர்த்தப்பட்டு கடத்தப்பட்டுள்ளது. வானின் சாரதிக்கு, மென்பானத்துடன் போதைப் பொருளை கலந்து கொடுத்து விட்டே, சாரதி மயக்கமடைந்ததும் அவரை தள்ளிவிட்டுவிட்டு, வானை கடத்திச்சென்றுள்ளனர். அவ்வாறு கடத்தப்பட்டு மறைத்து வைக்கப்பட்டிருந்த வானிலேயே, களுத்துறை சிறைச்சாலை பேருந்தின் மீது, கடந்த 27ஆம் திகதியன்று தாக்குதல் நடத்திய ஆயுததாரிகள் தப்பிச் சென்றுள்ளனர்.

துப்பாக்கிப் பிரயோகத்தை மேற்கொள்வதற்கு பயன்படுத்தப்பட்ட இரண்டு வாகனங்களையும் கைப்பற்றியுள்ளதாகத் தெரிவித்த பொலிஸார், ஆயுததாரிகளை குறுகிய காலத்துக்குள் கைதுசெய்ய முடியும் என்றும் நம்பிக்கை வெளியிட்டுள்ளனர். கைதிகளை ஏற்றிச்சென்ற சிறைச்சாலை பேருந்து மீது, கடந்த 27ஆம் திகதியன்று மேற்கொள்ளப்பட்ட துப்பாக்கிப் பிரயோகங்களில், கைதிகள் ஐவரும், சிறைச்சாலை அதிகாரிகள் இருவருமென ஏழு பேர் பலியாகினர்.

படுகாயமடைந்த கைதியொருவரும், நான்கு அதிகாரிகளும் களுத்துறை, நாகொட வைத்திய சாலையில் அனுமதிக்கப்பட்டு, சிகிச்சைப் பெற்று வருகின்றனர். (இ-7)

# தீயணைப்பு படையினரைப் போன்று நாமும் ஆயத்தமாக இருக்கின்றோம்



## மகிந்த தேசப்பிரிய தெரிவிப்பு

தீயணைப்புப் படையினரைப் போன்று நாமும் ஆயத்தமாக இருக்கின்றோம் என தேர்தல் ஆணைக்குழுவின் தலைவர் மகிந்த தேசப்பிரிய தெரிவித்துள்ளார்.

காலி மாவட்டச் செயலகத்தில் நேற்று முன்தினம் நடைபெற்ற கூட்டமொன்றில் பங்கேற்று இதனைத் தெரிவித்துள்ளார். என்னிடம் யாரேனும் மீன் கறியும், சோறும் சம்பலும் சாப்பிடுகின்றீர்களா அல்லது சோறும், மீன்கறியும் சம்பலும் சாப்பிடுகின்றீர்களா எனக் கேட்டாலும் என்னுடைய பதில் ஒன்றாகவே இருக்கும்.

ஏனெனில் இரண்டும் ஒன்றேயாகும். உள்ளூராட்சி மன்றத் தேர்தல், மாகாண சபைத் தேர்தல், நாடாளுமன்றத் தேர்தல், ஜனாதிபதி தேர்தல், சர்வஜன வாக்கெடுப்பு ஆகிய அனைத்துமே அரசாங்கத்திற்கு ஒன்றேயாகும்.

இந்த அனைத்து தேர்தல்களும் எம்மை பொறுத்தவரையில் ஒன்றே. அவை அனைத்துமே எமது தொழிலில் ஓர் அங்கமாகும். நாமும் தீயணைப்புப் படை வீரர்களைப் போன்றே செயற்படுகின்றோம். தீ ஏற்பட்ட போது அது எவ்வாறு ஏற்பட்டது என்பதனை ஆராய்ந்து பார்க்காது அதனை அணைப்பது எமது கடமையாகும் என தேர்தல் ஆணையாளர் மேலும் தெரிவித்தார். (இ-7)

# கொழும்பு துறைமுகத்தில் தடுப்பிலுள்ள ஆசியாவின் மிகப்பெரிய அச்சு இயந்திரம்

(கொழும்பு)

முன்னாள் மத்திய வங்கி ஆளுநர் அர்ஜுன் மகேந்திரனின் மருமகன் அர்ஜுன் அலோசியஸினால் பத்திரிகை ஒன்று ஆரம்பிக்கப்படவுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது. அதற்காக வெளிநாட்டில் இருந்து கொண்டுவரப்பட்ட ஆசியாவின் மிகப்பெரிய அச்சு இயந்திரம் ஒன்று கொழும்பு துறைமுகத்தில் விடுவிக்கப்படாமல் உள்ளதாக தகவல் வெளியாகியுள்ளது.

இந்த இயந்திரம் தெற்காசிய நாடு ஒன்றில் கொள்வனவு செய்யப்பட்ட மிகப் பெரிய அச்சு இயந்திரம் என துறைமுக தகவல் வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

இந்த இயந்திரத்தின் மூலம் மணிக்கு 90 ஆயிரம் பக்கங்களை அச்சிட முடியும் எனவும் ஒரு இலட்சத்து 20 ஆயிரம் சாதாரண பக்கங்களை அச்சிட முடியும் எனவும் குறிப்பிடப்படுகிறது.

குறித்த இயந்திரத்தின் பெறுமதி இலங்கை பெறுமதியில் சுமார் 7 கோடி ரூபா என மதிப்பிடப்பட்டுள்ளது.

இந்த அச்சு இயந்திரம் துறைமுகத்தில் தடுத்து வைக்கப்பட்டுள்ளமைக்கான காரணம் இதுவரையில் வெளியாகவில்லை. எனினும் வரி தொடர்பான பிரச்சினையாக இருக்கக் கூடும் என சந்தேகிக்கப்படுகின்றது. (இ-7)

# நீதிமன்றங்களில் பொலிஸார் குவிப்பு அதிகரிக்கப்படும் திடீர் பாதுகாப்பு

(கொழும்பு)

நாட்டில் உள்ள அனைத்து நீதிமன்றங்களுக்கும் மேலதிக விசேட பொலிஸ் பாதுகாப்பை வழங்குவதற்கு பொலிஸ் தலைமையகம் நடவடிக்கை எடுத்துள்ளது.

பொலிஸ்மா அதிபர் பூஜித ஜயசுந்தரவின் ஆலோசனையின் பிரகாரம் இந்த நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

நேற்று முன்தினம் கொழும்பு கல்கிசை நீதிமன்றில் இருந்து சீனாவில் உற்பத்தி செய்யப்பட்ட துப்பாக்கி இரண்டும் தோட்டாக்களும் கைப்பற்றப்பட்டன.

இதன் காரணமாக, சுமார் மூன்று மணிநேரம் நீதிமன்ற செயற்பாடுகளும் சோதனை நடவடிக்கையினால் பாதிக்கப்பட்டிருந்தன.

குருநாகல் பொலிஸ் நிலைய அதிகாரி ஒருவர் கொலை மற்றும் கொழும்பில் சில பகுதிகளில் செயற்படும் முக்கிய பாதாள உலகக் குழுவின் தலைவரான ரோஹா என்பவர் நேற்று முன்தினம் பிற்பகல் கல்கிஸை நீதிமன்றத்திற்கு அழைத்து வரப்பட்டிருந்தார்.

இந்த நிலையில் கடந்த வாரம் இடம் பெற்றமையினை போன்று குறித்த நபரை படுகொலை செய்வதற்கு இந்த ஆயுதங்களைப் பயன்படுத்த பாதாள உலகக் கும்பல் திட்டமிட்டிருக்கலாம் என பொலிஸார் சந்தேகம் வெளியிட்டுள்ளனர்.

இந்த நிலையில் நீதிமன்றங்களின் பாதுகாப்பு தொடர்பான தற்போது பிரச்சினைகள் பல ஏற்பட்டிருக்கும் நிலையில் அதற்குப் பிரதி யுத்தரமாக நாட்டிலுள்ள அனைத்து நீதிமன்றங்களினதும் மேலதிக பாதுகாப்பிற்காக பொலிஸார் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர். (இ-7)

# இந்தோனேசியாவுக்கு ஜனாதிபதி விஜயம்



ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன, எதிர்வரும் 8ஆம் திகதி, இந்தோனே சியாவுக்கு விஜயம் மேற்கொள்ளவுள்ளாரென, சுகாதார அமைச்சர் ராஜித சேனாரட்ன தெரிவித்தார். அரசாங்கத் தகவல் திணைக்களத்தில் நேற்று முன்தினம் நடைபெற்ற ஊடகவியலாளர் மாநாட்டிலேயே, அவர் இதனைத் தெரிவித்தார்.

இந்த விஜயத்தின் போது, இந்தோனேசியாவுக்கும் இலங்கைக்கும் இடையிலான பாரம்பரிய கைத்தொழில் மற்றும் கடற்றொழில் / சமுத்திரவியல் சார்ந்த புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் கைச்சாத்திடவுள்ளதாகவும், அவர் தெரிவித்தார். (இ-7)

# இராசி பலன்

03.03.2017

(மாசி 19, வெள்ளிக்கிழமை)

சூரிய உதயம் காலை 6.29 மணிக்கு

பஞ்சமி பிற்பகல் 1.10 மணிவரை

பரணி பின்னிரவு 2.20 மணிவரை

சுபநேரம் 6.27-7.57 மணிவரை

இராகுகாலம் 10.57-12.27 மணிவரை

சஷ்டி விரதம்

| | | | |
|---|---|---|---|
| சுக் | செவ் சந் | | |
| சூரி புத கேது | கிரகநிலை சந்திராஷ்டமம் அத்தம், சித்திரை | | |
| | | | ராகு |
| | சனி | குரு | |

**மீனம்:** இறைவழிபாட்டால் ஆர்வம் காட்டுவீர்கள், சுபகாரியப் பேச்சுக்களில் முன்னேற்றம் காண்பீர்கள், பணவரவு திருப்திதரும், தொழிலை விரிவுபடுத்தும் முயற்சியில் ஈடுபடுவீர்கள்.

**மேடம்:** வழிபாட்டில் ஆர்வம் காட்டுவீர்கள், பணியில் சிறு மன உளைச்சல் ஏற்படலாம், கனவு பலிதமுண்டு, தேகநலனில் அக்கறை காட்டுவீர்கள்.

**இடபம்:** நண்பர்களின் சந்திப்பால் சுப விரயங்கள் ஏற்படலாம், விருப்பங்கள் நிறைவேற விநாயகரை வழிபட வேண்டிய நாள், சயன சுகக் குறைவுண்டு.

**மிதுனம்:** எண்ணிய காரியங்கள் உடனுக்குடன் நிறைவேறலாம், மற்றவர்கள் பாராட்டும் வகையிலான காரியமொன்றைச் செய்து காட்டுவீர்கள்.

**கும்பம்:** முயற்சிகளில் முத்தான வெற்றி கிடைக்கும், பொல்லாதவர்கள் உங்களை விட்டு விலகுவர், வழிபாட்டால் பெருமைகள் வந்து சேரலாம், பயணங்களால் பலனுண்டு.

**கடகம்:** வழிபாட்டில் ஆர்வம் காட்டுவீர்கள், குடும்பத்தில் கலகலப்பான சூழ்நிலை உருவாகும், தூரதேசத்திலிருந்து சுபதகவல்கள் வந்து சேரலாம்.

**மகரம்:** பிறர் நலன் கருதி எடுத்த முயற்சிகள் கைகூடும், அதிர்ஷ்ட வாய்ப்புகள் தேடி வரலாம், செவி குளிரும் செய்திகள் வந்து சேரலாம், வெளியூர்த் தொடர்புகள் அனுகூலம் தரும்.

**சிம்மம்:** தொழிலில் ஏட்டிக்கு போட்டியாக இருந்தவர்கள் விலகுவர், பேச்சில் இனிமை தென்படும், சிக்கல்கள் விலகி சிறப்புகள் கூடும் நாள்.

வளவன்

**தனுசு:** கேளிக்கை கொண்டாட்டங்களில் கலந்து கொள்ளும் வாய்ப்புண்டு, நெடுநாளைய கனவுகள் நனவாகலாம், புதிய பொருட் சேர்க்கையுண்டு.


**விருச்சிகம்:** திட்டமிட்ட காரியங்களை திட்டமிட்டபடியே செய்து முடிப்பீர்கள், பொதுவாழ்வில் புகழ்கூடும், இறைவழிபாட்டில் ஆர்வம் காட்டுவீர்கள்.

**துலாம்:** குடும்பத்தினரிடையே அந்நியோன்னியம் அதிகரிக்கும், வெளியூர் பயணத்தால் ஆதாயம் ஏற்படும், வழிபாட்டில் ஆர்வம் காட்டுவீர்கள்.

**கன்னி:** வழிபாட்டால் மகத்துவம் காண வேண்டிய நாள், குடும்ப பெரியவர்கள் உங்கள் செயற்பாடுகளில் குறைகண்டு கூறலாம், வாகன பழுதுச் செலவுகள் ஏற்படலாம்.

## சைற்றத்தை அரசுடைமையாக்குங்கள்

# வைத்தியர்கள் வேலை நிறுத்தம் நோயாளர்கள் கடும் அவதி


(யாழ்ப்பாணம்)

மாலபே சைற்றம் தனியார் மருத்துவக் கல்லூரியை அரசுடைமையாக்குமாறு அரசினை வலியுறுத்தும் வகையில் வடமாகாண வைத்தியர்கள் நேற்றைய தினம் 24 மணி நேர வேலை நிறுத்தப் போராட்டத்தில் ஈடுபட்டிருந்தனர்.

இந்த பணிப்புறக்கணிப்பு போராட்டத்தினால் யாழ். போதனா வைத்தியசாலைக்கு வந்திருந்த நோயாளர்களும்பாதிப்பை எதிர்நோக்கியிருந்தனர். யாழ்.போதனா வைத்தியசாலை, தெல்லிப்பழை புற்றுநோய் வைத்தியசாலை மற்றும் ஏனைய வைத்தியசாலைகள் அனைத்திலும் அவசர நோயாளர் சேவைகள் இடம்பெற்றிருந்தன.

இது இலங்கை மருத்துவ சேவையின் தராதரம் பற்றிய போராட்டம் , தரமற்ற மருத்துவர்களை அரசியல் செல்வாக்குக்காகவும் பணத்துக்காகவும் உருவாக்கி நோயாளர்களின் உயிரை பணயம் வைக்கும் அரசியல் வியாபாரிகளுக்கு எதிரான போராட்டம் இதுவாகும். நோயாளர்களுடன் எமக்கு நீண்ட கால புரிந்துணர்வு உள்ளது. அவர்களின் தேவைகளை இதுவரை காலமும் வழங்கி வந்தோம். இனியும் வழங்கத் தயாராக உள்ளோம். எனவே நோயாளர்கள் எங்கள் நியாயமான கோரிக்கைகளைப் புரிந்து கொள்வார்கள் என போராட்டத்தில் ஈடுபட்ட வைத்தியர்கள் தெரிவித்தனர்.

யாழ். போதனா வைத்தியசாலையில்வெளிநோயாளர் பிரிவில்ஒரு வைத்தியர் கடமையில் ஈடு பட்டிருந்தார்.



எனினும் கிளினிக் நோயாளர்கள் பெரும் சிரமத்தை எதிர்நோக்கியிருந்தமை குறிப்பிடத்தக்கது. (இ-4)




### பொதுக்கூட்டம்

வலிகாமம் கிழக்கு கோப்பாய் பிரதேச செயலர் சங்கம் அரச சேவை ஓய்வூதியர் நம்பிக்கை நிதியத்தின் 8ஆவது வருடாந்த பொதுக்கூட்டம் நாளை சனிக்கிழமை காலை 9.30 மணிக்கு யாழ். அத்தியார் இந்துக்கல்லூரியில் இடம்பெறும்.

ஓய்வு பெற்ற கோட்டக் கல்வி அதிகாரி வை.குணசேகரம் தலைமையில் இடம்பெறும் இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக வலிகாமம் கிழக்கு கோப்பாய் பிரதேச செயலர் திருமதி சுபாசினி மதியழகன், கௌரவ விருந்தினராக வலிகாமம் கிழக்கு பிரதேச செயலக முன்னாள் பிரதிச் செயலாளரும் வடமாகாண முதலமைச்சர் காரியாலய பிரத்தியேக செயலருமான கந்தையா இராசதுரை, சிறப்பு விருந்தினர்களாக யாழ்.மாவட்ட சங்கத்தின் தலைவர் பொ.கமலநாதன், யாழ். மாவட்ட சங்கச் செயலாளர் க. கதிரமலை ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர். (இ-3)

மணற்காடு றோ.க.த.க பாடசாலையின் வருடாந்த இல்ல மெய்வல்லுநர் போட்டி அண்மையில் பாடசாலை அதிபர் சோ. வாகீசன் தலைமையில் இடம் பெற்றது. இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக வடமராட்சி வலயக் கல்விப்பணிப்பாளர் சி.புஸ்பலிங்கம் கலந்து கொண்டு வெற்றிபெற்ற மாணவர்களுக்கு பரிசில்களை வழங்கி வைத்தார். (படங்கள்:-மகாலிங்கம்)

### அரச புகைப்பட விழா-2017

கலாசார அலுவல்கள் திணைக்களம் புகைப்பட கலையை ஊக்குவிக்கும் நோக்குடன் இரண்டாவது முறையாக அரச புகைப்பட விருது வழங்கும் விழாவிற்கு ஏற்பாடு செய்திருக்கின்றது. சண்டிலிப்பாய் பிரதேச செயலகத்திற்கு உட்பட்ட புகைப்பட கலைஞர்கள் அரச புகைப்பட விருது வழங்கும் விழாவிற்கான சுற்றுநிருபத்தையும் விண்ணபப்படிவத்தையும் எதிர்வரும் 20.04.2017 வரை சண்டிலிப்பாய் பிரதேச செயலக கலாசார பிரிவில் பெற்றுக் கொள்ளலாம் என சண்டிலிப்பாய் பிரதேச செயலர் திருமதி யு.யசோதா அறிவித்துள்ளார். (இ-3)

### வெங்காயச் செய்கையால் நட்டம்

வடமராட்சிப் பகுதியில் வெங்காயச் செய்கையில் ஈடுபட்ட விவசாயிகள் பாரிய நட்டத்தினை எதிர் கொண்டுள்ளனர். நோய்த் தாக்கம் காரணமாக வெங்காயச் செய்கை அழிவடைந்துள்ளது. அண்மையில் ஏற்பட்ட பனிமூட்டம் காரணமாக வெங்காய பயிர்களில் குமைச்சல் எனும் நோய் பரவி உள்ளதாக விவசாயிகள் கூறுகின்றனர். இந்நோய்த் தாக்கத்தினால் பாரிய நட்டம் ஏற்பட்டுள்ளதாகவும் மாற்றுப் பயிர்களை செய்யமுடியாத நிலை காணப்படுவதாகவும் கவலை வெளியிட்டுள்ளனர்.(இ-3,60)

### மகளிர் தின போட்டிகள்

சர்வதேச மகளிர் தினத்தை முன்னிட்டு நல்லூர் பிரதேச செயலகத்தினால் திறந்த போட்டிகள் நடத்தப்படவுள்ளன என பிரதேச செயலாளர் ஆழ்வாப்பிள்ளை ஸ்ரீ அறிவித்துள்ளார்.

போட்டிக்கான பொது நிபந்தனைகள் முற்காலத்தையும் அறிந்தவள் பலத்தினால் வெற்றி கொள்வாள் என்னும் தலைப்பில் ஆக்கங்கள் அமைதல் வேண்டும், நல்லூர்ப் பிரதேச செயலக பிரிவிற்குட்பட்ட 20 வயதிற்கு மேற்பட்ட ஆண், பெண் இருபாலாரும் போட்டியில் கலந்து கொள்ள முடியும். போட்டிக்கான ஆக்கங்கள் சுய ஆக்கங்களாக இருத்தல்வேண்டும். ஏற்கனவே வேறு போட்டிகளுக்கோ அல்லது பிரசுரங்களுக்கோ உட்பட்டதாகஇருத்தலாகாது. ஆக்கங்கள் தெளிவாக இருத்தல் வேண்டும், ஏ4 தாளில் ஆக்கங்கள் எழுதப்பட்டு கிராம உத்தியோகத்தரின் அத்தாட்சிப்ப டுத்தலுடன் சமர்ப்பிக்கப்படுதல்கட்டாயமானதாகும், நடுவரின் தீர்ப்பே இறுதியானதாகும். போட்டியில் வெற்றியீட்டுவோருக்கு பரிசில்கள் வழங்கப்படும். நல்லூர்ப் பிரதேச செயலகத்தினைச் சார்ந்த உத்தியோகத்தர்கள் இப் போட்டியில் பங்கு பற்ற முடியாது. ஆக்கங்கள் ஏற்றுக் கொள்ளப்படும் இறுதித் திகதி 15.03.2017 ஆகும். ஆக்கங்களை இறுதித் திகதிக்கு முன்னர் பிரதேச செயலக சிறுவர் பெண்கள் கிளையில் ஒப்படைக்கலாம் அல்லது தபால் மூலமும் அனுப் பிவைக்கலாம்.

கவிதை முற்காலத்தையும் அறிந்தவள் பலத்தினால் வெற்றிகொள்வாள் என்னும் தலைப்பில் முப்பது வரிகள். சிறுகதை முற்காலத்தையும் அறிந்தவள் பலத்தினால்வெற்றி கொள்வாள் என்னும் பொதுவான சிறுகதை அமைப்பு விதிகளுக்கு அமைவாக இருத்தல்வேண்டும். கட்டுரை முற்காலத்தையும் அறிந்தவள் பலத்தினால் வெற்றிகொள்வான் என்னும் தலைப்பில் 1500-2000 சொற்களில் அமைந்த கட்டுரை. (இ

# பாதாள உலகக் குழுக்களைக் கட்டுப்படுத்த அரசாங்கம் கொள்கை ரீதியிலான தீர்மானம்

நாளுக்கு நாள் அதிகரித்து வரும் பாதாள உலகக் குழுக்களின் நடவடிக்கைகளை கட்டுப்படுத்துவதற்கு கொள்கை ரீதியிலான தீர்மானம் ஒன்றை அரசாங்கம் எடுத்துள்ளதாக பெற்றோலிய வளத்துறை அமைச்சர் சந்திம வீரக்கொடி தெரிவித்துள்ளார்.

பொலிஸார் இதற்காக சுயாதீனமாக செயற்பட இடமளிக்கப்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளார். அமைச்சர்களின் பின்னால் பாதாள உலகக் குழுக்கள் செயற்படுவதாயின் அதற்கு எதிராக கடுமையான சட்ட நடவடிக்கை எடுக்கவும் அரசாங்கம் தீர்மானித்துள்ளது. தெமட்டகொட இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தில் நேற்று முன்தினம் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் அமைச்சர் இதனைத் தெரிவித்தார். (இ-7)


## பாராட்டி வாழ்த்துகின்றோம்




கொழும்பு தாமரைத் தடாகம் மண்டபத்தில் சென்றாண்டு நடைபெற்ற அரச விருது விழா மற்றும் சர்வோதயமும் தேசோதயமும் இணைந்து நடத்திய மக்கள் திலகம் எம்.ஜி.ஆர். இன் நூறாவது ஜனன தின கலைஞர் கௌரவிப்பு விழாவில் முறையே நாடகத் துறைக்கான கலாபூஷணம் விருதும் கலைமாமணி விருதும் பெற்றமைக்காக

திரு.கயிலாயபிள்ளை தர்மகுலசிங்கம்

திரு. கயிலாயபிள்ளை சந்திரகுலசிங்கம்

அவர்கள் இருவரையும் பாராட்டி வாழ்த்துகின்றோம்.

(8087)

கமலாம்பிகை பவனம்,
கோண்டாவில்.

வாழ்த்துவோர்:
கயிலாயபிள்ளை குடும்பமும் உறவுகளும்.



## விற்பனைக்கு / குத்தகைக்கு

2-ம் குறுக்குத்தெரு பருத்தித்துறையில் (பருத்தித்துறை மத்திய சந்தைக்கு பின்புறமாக) $2^1/_2$ பரப்புக் காணியுடன் கூடிய இரண்டு கடையுடன் கூடிய காணி விற்பனைக்கு அல்லது குத்தகைக்கு விடப்படும்.

நிறுவனமாகவும் அல்லது பேக்கரியாகவும் பாவிக்கும் வகையில் உள்ளது.

விரும்பியவர்கள் தொடர்பு கொள்ளவும்.

தொடர்புகளுக்கு :
0774215879 (C - 7614)

## வேலையாட்கள் தேவை

யாழ். நகரில் இயங்கும் லைடன் புடைவை நிலையத்திற்கு வேலையாட்கள் தேவை (விற்பனையாளர்கள்) (பெண்கள்) பழகியவர்களும், பழக விரும்புபவர்களும் விரும்பத்தக்கது. கணிசமான சம்பளம் வழங்கப்படும். நேரில் வரவும். (சி-7684)

லைடன் புடைவை நிலையம்
இல. 410, ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம்.

## பணம், காசு, துட்டு, மணி, மணி

காட்போட், பழைய புத்தகங்கள், கொப்பிகள், Papers, Files, waste காகிதங்கள், Press வெட்டுத்துண்டுகள் காசு கொடுத்து வாங்கப்படும்.

தொடர்புகளுக்கு : 0771365153


# நூலக தகவல் விஞ்ஞான டிப்ளோமா

### கற்கை நெறிக்கான பரீட்சை நாளை

இலங்கை நூலகச் சங்கத்தால் நடத்தப்படும் நூலக தகவல் விஞ்ஞான டிப்ளோமா 2016/2017 கற்கை நெறி தரம் ஒன்றிற்கான பரீட்சை நாளை 4 ஆம் திகதி சனிக்கிழமை, நாளை மறுதினம் 5 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை ஆகிய இரு தினங்களில் காலை 9 மணிக்கு யாழ். மத்திய கல்லூரியில் இடம்பெறவுள்ளதாக இலங்கை நூலகச் சங்கத்தின் ஒருங்கிணைப்பாளர் திருமதி பொற்செல்வி ஸ்ரீதரன் அறிவித்துள்ளார். (இ-3-51)


## யாழ்ப்பாணத்தில்

SLAS வழிகாட்டல் வகுப்புகள்

Open மற்றும் Limited ஆகிய
இரு வகுப்பினருக்கும்
கடந்த வருடம் தனது வழிகாட்டல் வகுப்பின் மூலம்
5 SLAS மற்றும் 6 SLEAS
அலுவலர்களை உருவாக்கிய
இத்தீவின் தலைசிறந்த விரிவுரையாளர்
திரு. றிஸ்வான் சலாஹுதீன் (SLAS)
அவர்களின் தலைமையில்

திரு.அபான் காரியப்பர் (SLAS)
திரு.ஜாபீர் (SLAS)
திரு.P.ஆறுமுகம் (SLEAS)

ஆகியோரின் வழிநடத்தலில்
யாழ். மண்ணில் மார்ச் 18 ஆரம்பமாகிறது
உங்கள் வெற்றியை உறுதி செய்ய

தொடர்புகளுக்கு:-077 443 9400



சிவமயம்

## உசன் ஸ்ரீ கந்தசுவாமி கோயில்

மூலமந்திர ஜபயக்ஞ ஸ்கந்த ஹோமப் பெருவிழா-2017

| ஆரம்பம் | ஸ்கந்த ஹோமம் |
|---|---|
| 08.03.2017 | 12.03.2017 |
| புதன்கிழமை | ஞாயிற்றுக்கிழமை |

தினமும் காலை 9.00 மணி முதல் 12.00 மணிவரை மூலமந்திர ஜபம்

அனைவரும் வருக! அழகன் முருகன் அருள் பெறுக!

Yarl Beauty & Language's Skills College

இல. 17, 3 ஆம் ஒழுங்கை, மின்சார நிலைய வீதி, யாழ்ப்பாணம்.
(ராசி கலெக்ஷனுக்கு அருகில் உள்ள ஒழுங்கை.)

(சி-7607)




## கல்யாண மாலை

| இவர்களுக்கு மணமகள் தேவை | இவர்களுக்கு மணமகன் தேவை |
|---|---|
| பிறப்பு: 1985 இந்து<br>நட்சத்திரம்: அவிட்டம்<br>கி.பா: சூரிசெவ் 6 இல்<br>உயரம்: 5'4"<br>தகைமை/தொழில்:A/L தனியார் தொழில்<br>தொ.இ: B/7019 | பிறப்பு: 1986 இந்து<br>நட்சத்திரம்: விசாகம்<br>கி.பா: 37 செவ் 1 இல்<br>உயரம்: 160cm<br>தகைமை/தொழில்:பட்டதாரி/அரச தொழில்<br>தொ.இ: G/7024 |
| பிறப்பு: 1984 இந்து<br>நட்சத்திரம்: கார்த்திகை<br>கி.பா: 58 செவ் 1 இல்<br>உயரம்: 5'6"<br>தகைமை/தொழில்:MBBS/வைத்தியர்<br>தொ.இ: B/7022 | பிறப்பு: 1988 இந்து<br>நட்சத்திரம்: அச்சுவினி<br>கி.பா: 37<br>உயரம்: 5'5"<br>தகைமை/தொழில்:வைத்தியர்<br>எதிர்பார்ப்பு: வெளிநாடுமட்டும்<br>தொ.இ: G/7028 |
| பிறப்பு: 1990 இந்து<br>நட்சத்திரம்: பூரட்டாதி<br>கி.பா: 23<br>உயரம்: 6'<br>தகைமை/தொழில்:சிவில் பொறியியலாளர்<br>தொ.இ: B/7023 | பிறப்பு: 1990 இந்து<br>நட்சத்திரம்: பூசம்<br>கி.பா: செவ் 8 இல்<br>உயரம்: 5'6"<br>தகைமை/தொழில்:BSc/தனியார்தொழில்<br>தொ.இ: G/7030 |
| பிறப்பு: 1974 இந்து<br>நட்சத்திரம்: சுவாதி<br>கி.பா: 19 செவ் 1 இல்<br>உயரம்: 5'7"<br>தகைமை/தொழில்:A/லண்டன் PR<br>தொ.இ: B/7025 | பிறப்பு: 1991 இந்து<br>நட்சத்திரம்: புனர்பூசம்<br>கி.பா: செவ் 2 இல்<br>உயரம்: 5'4"<br>தகைமை/தொழில்:BSc/தனியார் தொழில்<br>தொ.இ: G/7031 |

கல்யாண மாலை
(சர்வதேச திருமண சேவை)
இல. 144, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்
பதிவுக் கட்டணம் ரூபா 1000 மட்டுமே
தொடர்பு:- 021 720 1005, 021 221 5434
E-mail:-kalyanamalai.jaffna@gmail.com
குறிப்பு:- எமது காரியாலயம் காலை 9.00-5.00 மணிவரை திறக்கப்படும்.
ஒவ்வொரு ஞாயிற்றுக்கிழமை கல்யாணமாலை விடுமுறை தினம் என்பதனையும் அறியத்தருகின்றோம்.

# வடக்கு வைத்தியசாலைகளின் வைத்தியர்கள் நேற்று 24 மணிநேரம் பணிப்புறக்கணிப்பில்





(மல்லாவி)

மாலபே தனியார் வைத்திய கல்வி வழங்கும் நிறுவனத்தை அரசுடைமையாக்குமாறு அரசாங்கத்தை வலியுறுத்தும் வகையில் வடக்கு மாகாணம் தழுவிய ரீதியில் உள்ள வைத்தியர்கள் நேற்றைய தினம் 24 மணி நேர பணிப்புறக்கணிப்பு போராட்டத்தில் ஈடுபட்டிருந்தனர்.

இந்த வேலை நிறுத்தப் போராட்டமானது நேற்றுக் காலை 8 மணி தொடக்கம் இன்று காலை 8 மணி வரையிலான 24 மணிநேரம் நடைபெற்றது.

இதன்போது வவுனியா மாவட்ட பொது வைத்திய சாலையில் வெளிநோயாளர் பிரிவு மற்றும் கிளினிக் சேவைகள் மட்டுமே இயங்கவில்லை என வைத்திய சாலையின் பணிப்பாளர் வைத்தியர் கு. அகிலேந்திரன் தெரிவித்தார்.

பணிப்புறக்கணிப்பு தொடர்பாக வவுனியா மாவட்ட பொது வைத்தியசாலை வைத்தியர் ஒருவர் கருத்து தெரிவிக்கையில்,

இது இலங்கை மருத்துவ சேவையின் தராதரம் பற்றிய போராட்டமாகும். தரமற்ற வைத்தியர்களை அரசியல் செல்வாக்குக்காகவும் பணத்துக்காகவும் உருவாக்கி நோயாளர்களின் உயிரை பணயம் வைக்கும் அரசியல் வியாபாரிகளுக்கு எதிரான போராட்டம் ஆகும் என தெரிவித்தார்.

இந்நிலையில் நேற்றைய தினம் கிளிநொச்சி வைத்திய சாலையின் பணிகள் மந்த கதியில் இடம்பெற்றதாக நோயாளர்கள் தெரிவித்தனர்.

வைத்தியர்கள் 24 மணி நேர பணிப்புறக் கணிப்பில் ஈடுபட்ட போதிலும் மாவட்டத்தில் அதிகளவில் காணப்படும் காய்ச்சலிலிருந்து பாதுகாக்கும் நோக்குடன் பணிகள் முன்னெடுக்கப்பட்டன. இதன் காரணமாக வைத்தியர்கள் சிகிச்சைகளை மேற்கொண்டு வருகின்ற போதிலும், அவை மந்த கதியிலேயே முன்னெடுக்கப்பட்டதாக நோயாளர்கள் தெரிவித்தனர்.

இப்போராட்டமானது முல்லைத்தீவு மாஞ்சோலை வைத்தியசாலை, மன்னார் மாவட்ட வைத்தியசாலை ஆகிய இடங்களிலும் வைத்தியர்களினால் முன்னெடுக்கப்பட்டது.

இந்த பணிப்புறக்கணிப்பு போராட்டத்தினால் வடக்கில் உள்ள வைத்தியசாலைக்கு சென்ற நோயாளிகள் சிகிச்சை பெறுவதில் சிக்கல்களை எதிர்நோக்கியிருந்தனர்.

இது இலங்கை மருத்துவ சேவையின் தராதரம் பற்றிய போராட்டம், தரமற்ற வைத்தியர்களை அரசியல் செல்வாக்குக்காகவும் பணத்துக்காகவும் உருவாக்கி நோயாளர்களின் உயிரை பணயம் வைக்கும் அரசியல் வியாபாரிகளுக்கு எதிரான போராட்டம் இதுவாகும். நோயாளர்களுடன் எமக்கு நீண்டகால புரிந்துணர்வு உள்ளது.

அவர்களின் தேவைகளை இதுவரை காலமும் வழங்கி வந்தோம். இனியும் வழங்கத்தயாராக உள்ளோம். எனவே நோயாளர்கள் எங்கள் நியாயமான கோரிக்கைகளைப் புரிந்து கொள்வார்கள் என போராட்டத்தில் ஈடுபட்ட வைத்தியர்கள் தெரிவித்தனர். (2-250-15)




# 'போலிப்பட்டம் விற்கும் சைற்றத்தை மூடு' வவுனியா வைத்தியர்கள் கவனயீர்ப்பு




வவுனியா மாவட்ட பொது வைத்தியசாலையின் வைத்தியர்கள் உட்பட வவுனியா மாவட்ட வைத்தியசாலைகளில் கடமையாற்றும் வைத்தியர்களால், இலங்கையில் மாலபே தனியார் வைத்திய கல்லூரி நிறுவுதல் மற்றும் எட்கா எனும் இலங்கை- இந்திய பொருளாதார ஒப்பந்தம் ஆகியவற்றுக்கு எதிர்ப்புத் தெரிவித்து கவனயீர்ப்பு ஆர்ப்பாட்டப் பேரணி ஒன்று நடத்தப்பட்டது.

இந்தப் பேரணி நேற்று வியாழக்கிழமை காலை வவுனியா மாவட்ட வைத்தியர்கள் விடுதியிலிருந்து ஆரம்பமாகி ஹொறவப் பொத்தானை வீதியூடாக வவுனியா நகரப் பகுதியில் உள்ள மணிக்கூட்டுக் கோபுரம் வீதி வழியாக கார்கில்ஸ் புட் சிட்டியைச் சென்றடைந்து அங்கு நின்று வைத்தியர்கள் தமது எதிர்ப்பு ஆர்ப்பாட்டத்தை மேற்கொண்டனர்.

சுமார் ஒரு மணிநேரமாக நீடித்த இக்கவனயீர்ப்பு போராட்டத்தில், "வைத்திய சேவையின் இதயத்தை காப்போம், போலிப்பட்டம் விற்கும் சைற்றத்தினை மூடு" உள்ளிட்ட பல்வேறு கோரிக்கைகளை முன்வைத்த பதாகைகளைத் தாங்கியவாறு வைத்தியர்கள் இந்த ஆர்ப்பாட்டத்தை முன்னெடுத்திருந்தனர். (2-15)


# உலருணவு வழங்கும் நிகழ்வு

பிரான்சிலுள்ள பொன்மணி அறக்கட்டளை அமைப்பின் நிதியுதவியுடன் புதுக்குடியிருப்பு ஒளிரும் வாழ்வு, வன்னி விழிப்புலனற்றோர் சங்கம் ஆகியவற்றின் அங்கத்தவர்களின் பாடசாலை செல்லும் மாணவர்களின் கல்வி வளர்ச்சிக்காக பாடசாலை புத்தகப்பைகள், பயிற்சிப் புத்தகங்கள், துவிச்சக்கரவண்டிகள் என்பனவும் மாற்றுத் திறனாளிகள், முதியவர்கள் ஆகியோருக்கு உலருணவு வழங்கும் நிகழ்வும் எதிர்வரும் 7 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை முற்பகல் 10 மணியளவில் மு/உடையார்கட்டு மகா வித்தியாலய ஒன்று கூடல் மண்டபத்தில் நடைபெறும். (2)

# கேப்பாப்பிலவு மக்கள் தமது பூர்வீக நிலம் கோரி போராட்டத்தில் குதிப்பு

## 2-ஆவது நாளாக நேற்றும் தொடர்ந்தது






கேப்பாப்பிலவு மக்கள் தமது பூர்வீக நிலம் கோரி நேற்று முன்தினம் காலை முதல் தொடர் போராட்டத்தை ஆரம்பித்தனர். இப்போராட்டம் இரண்டாவது நாளாக நேற்றும் தொடர்ந்தது.

கேப்பாப்பிலவு பிரதேசத்தில் 128 குடும்பங்களுக்கு சொந்தமான, காணிகளை விடுவிக்குமாறு வலியுறுத்தி நேற்று முன்தினம் முதல் தொடர் போராட்டத்தை கேப்பாப்பிலவு மக்கள் ஆரம்பித்துள்ளனர்.

கேப்பாப்பிலவு பிரதேசத்தில் சீனியாமோட்டை, சூரிபுரம் ஆகிய பகுதிகள் விடுவிக்கப்பட்டுள்ள நிலையில், பிலவுக்குடியிருப்பு காணிகள் நேற்று முன்தினம் விடுவிக்கப்பட்டது.

இருப்பினும் தமது கேப்பாப்பிலவு காணிகள் இதுவரை விடுவிக்கப்படவில்லை எனக் கோரி மக்கள் தமது போராட்டத்தை ஆரம்பித்தனர்.

கேப்பாப்பிலவு கிராம அலுவலர் பிரிவில் நான்கு கிராமங்கள் காணப்படுகின்றன. சீனியாமோட்டை, சூரிபுரம், பிலவுக்குடியிருப்பு. கேப்பாப்பிலவு. இவற்றில் மூன்று கிராமங்கள் விடுவிக்கப்பட்டுள்ளன. இருப்பினும் தாம் ஆறு தலைமுறையாக வாழ்ந்து வரும் எமது பூர்வீக நிலம் எமக்கு விடுவிக்கப்பட வேண்டுமெனக் கோரியே இப் போராட்டம் இடம்பெற்று வருவது குறிப்பிடத்தக்கது. (2-281)

# ஊழியர் நம்பிக்கை நிதிய பிராந்திய அலுவலகம் வவுனியாவில் திறப்பு





(குருமன்காடு)

வவுனியாவில் ஊழியர் நம்பிக்கை நிதியத்தின் பிராந்திய அலுவலகம் நேற்று முன்தினம் வன்னி பாராளுமன்ற உறுப்பினர் கே.கே. மஸ்தானினால் திறந்து வைக்கப்பட்டது.


வவுனியா, மன்னார், முல்லைத்தீவு ஆகிய மாவட்டங்களை உள்ளடக்கி திறந்து வைக்கப்பட்ட குறித்த அலுவலகத்தின் மூலமாக இது வரை இப்பகுதி மக்கள் தமது தேவைகளை நிறைவேற்றிக் கொள்வதில் காணப்பட்ட பிரச்சினைகள் தொடர்பில் தீர்வைக்காண கூடியதாகவுள்ளது.

இந் நிகழ்வில் நோயினால் பாதிக்கப்பட்டவர்கள் மற்றும் ஊழியர் நம்பிக்கை நிதியத்தைப்பெற விண்ணப்பித்தவர்களுக்குமான காசோலைகளும் வழங்கி வைக்கப்பட்டிருந்தன.

தொடர் நிகழ்வாக வவுனியா நகரசபை கலாசார மண்டபத்தில் புலமைப் பரிசில் வெற்றிபெற்ற 300 மாணவர்களுக்கு பரிசில்கள் மற்றும் சான்றிதழ்கள் வழங்கும் வைபவம் நடைபெற்றது.

இந் நிகழ்வில் வவுனியா மாவட்ட அரசாங்க அதிபர் ரோஹண புஸ்பகுமார, தேசிய கொள்கை திட்டமிடல் மற்றும் பொருளாதார அபிவிருத்தி அமைச்சின் செயலாளர் எம். ரபீக், வன்னி பாராளுமன்ற உறுப்பினர் கே.கே.மஸ்தான், வடக்கு மாகாணசபை உறுப்பினர் ஏ.ஜெயதிலக, ஊழியர் நம்பிக்கை நிதியத்தின் தலைவர் உட்பட பலரும் கலந்து கொண்டிருந்தனர். (2-250)





நாடளாவிய ரீதியில் சர்வதேச மகளிர் தினம் மார்ச் மாதம் 8 ஆம் திகதி கொண்டாடப்பட்டு வருகின்றது. இதன் பிரகாரம் சர்வதேச மகளிர் தினத்தையொட்டி மகளிர் மற்றும் சிறுவர் விவகார அமைச்சினால் பெண்களின் உரிமைகளைப் பாதுகாப்பதற்கும் வலுவூட்டுவதற்குமான பல்வேறு செயற்பாடுகளும் வேலைத் திட்டங்களும் முன்னெடுக்கப்பட்டுள்ளன. இவ் வேலைத்திட்டங்கள் மார்ச் மாதம் முதலாம் திகதி தொடக்கம் 7 ஆம் திகதி வரையும் மாவட்ட ரீதியில் முன்னெடுக்கப்படவுள்ளன. இதற்கமைய நேற்று முன்தினம் முல்லைத்தீவு மாவட்ட செயலகத்தில் நடைபெற்ற சர்வதேச மகளிர் தின நிகழ்வைப் படங்களில் காணலாம். (2-281)

# புதுக்குடியிருப்பில் 28 ஆவது நாளான நேற்றும் போராட்டம் தொடர்ந்தது



(பனிக்கன்குளம்)

முல்லைத்தீவு புதுக்குடியிருப்பில் காணிகளை விடுவிக்குமாறு வலியுறுத்தி புதுக்குடியிருப்பு பிரதேச செயலகம் முன்பாக கடந்த பெப்ரவரி மாதம் 3 ஆம் திகதி ஆரம்பிக்கப்பட்ட போராட்டம் நேற்றுடன் 28 ஆவது நாளை எட்டியுள்ளது.

தமது காணிக்குள் நிரந்தரமாக கால்பதிக்கும் வரையில் போராட்டத்தை கைவிடப்படும் என்றும் மீதமுள்ள 29 பேரின் 10 ஏக்கர் காணி இராணுவ முகாமில் அமைக்கப்பட்ட கட்டடங்களை அகற்றிய பின்னர் மூன்று மாதத்திற்குள் விடுவிக்கப்படும் என்றும் பொன்னம்பலம் வைத்தியசாலை காணி விடுவிப்பதற்கு 6 மாத காலம் தேவைப்படுவதாகவும் இதன்படி போராட்டத்தைக் கைவிடுமாறும் அரச தரப்பால் வலியுறுத்தப்பட்டது.



போவதில்லை என அம்மக்கள் தெரிவிக்கின்றனர்.

புதுக்குடியிருப்பில் 682 ஆவது படைப்பிரிவினால் சுவீகரிக்கப்பட்ட பொதுமக்கள் 29 பேரினுடைய 7.75 ஏக்கர் காணி 2 வாரத்தில் விடுவிக்

இதற்கு புதுக்குடியிருப்பு மக்கள் உடன்படாத நிலையில் காணி விடுவிக்கும் வரை போராட்டம் தொடரும் என கூறி நேற்றைய தினமும் போராட்டம் முன்னெடுக்கப்பட்டது. (2-281)

# வவுனியாவில் மோட்டார் சைக்கிள் விபத்து ஒருவர் படுகாயம், இருவர் தப்பியோட்டம்

வவுனியா பொலிஸ் நிலையப்பிரிவில் வவுனியா நகரப் பகுதியில் இருந்து மன்னார் செல்லும் வீதியிலுள்ள தொழில் நுட்பக் கல்லூரிக்கு முன்னால் இரண்டு மோட்டார் சைக்கிள்கள் மற்றும் கன்ரர் வாகனம் என்பன மோதிக் கொண்ட விபத்துச் சம்பவத்தில் ஒருவர் படுகாயமடைந்த நிலையில் வவுனியா மாவட்ட பொது வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளதாக வவுனியா பொலிஸ் நிலையத் தகவலில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இச்சம்பவம் நேற்று முன்தினம் புதன்கிழமை இரவு 7.45 மணியளவில் நடைபெற்றுள்ளது.

இது தொடர்பில் மேலும் தெரிய வருவதாவது,

மன்னார் வீதியிலிருந்து வந்த மோட்டார் சைக்கிள், வவுனியா பகுதியிலிருந்து மன்னார் நோக்கி பயணித்த மோட்டார் சைக்கிள் பாலா மைக்கல் வீதியில் திருப்ப முயன்ற போது இரண்டும் மோதி விபத்திற்குள்ளானது.

விபத்தினை அடுத்து மன்னார் வீதியில் இருந்து பயணித்த மோட்டார் சைக்கிளில் வந்த இருவர் மோட்டார் சைக்கிள்களை நடு வீதியில் விட்டுவிட்டு தப்பி ஓடியுள்ளனர்.

இரு மோட்டார் சைக்கிள்களும் மோதி விபத்துக்குள்ளான நிலையில வவுனியா வீதியிலிருந்து மன்னார் வீதி நாலாம் கட்டைக்கு நெல் கொள்வனவு செய்வதற்காக பின்னால் பயணித்த கன்ரர் ரக வாகனம் விபத்திற்குள்ளாகி நடு வீதியில் கிடந்த மோட்டார் சைக்கிளுடன் மோதி விபத்துக்குள்ளானதுடன்,

வவுனியாவில் இருந்து மோட்டார் சைக்கிளில் பயணித்து விபத்துக்குள்ளாகி வீதியில் வீழ்ந்த நபரையும் மோதியுள்ளது.

இதன் போது எஸ். குமார் வயது 28 என்பவர் படுகாயமடைந்த நிலையில் பொது மக்களால் மீட்கப்பட்டு வவுனியா மாவட்ட வைத்தியசாலையில் அனுமதித்துள்ளதுடன், பொலிஸாருக்கும் தகவலை தெரியப்படுத்தியுள்ளனர்.

விபத்து தொடர்பில் தகவல் கிடைத்ததும் நெளுக்குளம் பொலிஸாரும் வவுனியா பொலிஸாரும் சம்பவ இடத்திற்குச் சென்று விபத்துக்குள்ளான வாகனங்களை மீட்டு பொலிஸ் நிலையத்திற்கு எடுத்துச் சென்றதுடன் விபத்துடன் சம்பந்தப்பட்ட கன்ரர் வாகனத்தின் சாரதியை கைது செய்துள்ள நிலையில் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (2-15-250)



கிளிநொச்சி மாவட்டத்தில் போர் இடம்பெற்ற காலத்தில் வலிந்து காணாமல் ஆக்கப்பட்டோர், இராணுவத்திடம் ஒப்படைக்கப்பட்டவர்களின் விடுதலை ஆகியன தொடர்பில் தெளிவான தகவல்களை வெளிப்படுத்தக்கோரி உறவினர்கள் கடந்த 20 ஆம் திகதி தொடக்கம் கிளிநொச்சி கந்தசுவாமி ஆலய முன்றலில் கொட்டகை அமைத்து முன்னெடுத்து வரும் தொடர் கவனயீர்ப்பு போராட்டம் நேற்று 11 ஆவது நாளையும் எட்டியுள்ளது. இப்போராட்டத்திற்கு பல தரப்பினரும் தமது ஆதரவுகளை வழங்கி வருகின்றனர். (படங்கள்:- மல்லாவி செய்தியாளர்)

# பெண் தலைமைத்துவ குடும்பங்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்துவதற்கு தென்னங்கன்றுகள் வழங்கிவைப்பு



(மல்லாவி)

வடக்கு மாகாண சிக்கன கூட்டுறவுச் சங்க சமாசங்களின் சம்மேளனத்தின் அனுசரணையுடன் வவுனியா மாவட்டத்தில் உள்ள பெண் தலைமைத்துவக் குடும்பப் பயனாளிகளின் வாழ்வாதாரத்தை மேம்படுத்தும் பொருட்டு தென்னங்கன்றுகள் வழங்கி வைக்கப்பட்டுள்ளன.

இந் நிகழ்வு வவுனியா மாவட்ட சிக்கன கடனுதவி சங்க சமாச அலுவலகத்தில் நேற்று முன்தினம் புதன்கிழமை முற்பகல் 10.30 மணியளவில் நடைபெற்றுள்ளது.


இதன்போது வவுனியா மாவட்டத்திலுள்ள சிக்கன கூட்டுறவுச் சங்க அங்கத்தவர்களில் பெண் தலைமை தாங்கும் குடும்பங்களில் இருந்து முன்னுரிமை அடிப்படையில் தெரிவு செய்யப்பட்ட 100 குடும்பங்களுக்கு தலா 5 தென்னங்கன்றுகள் படி மொத்தம் 500 தென்னங்கன்றுகள் வழங்கி வைக்கப்பட்டுள்ளன.

இதன் போது பிரதம விருந்தினராக கலந்து கொண்டு பயனாளிகளுக்கான தென்னை மரக்கன்றுகளை சி.க.கூ. சங்கங்களின் சம்மேளனத் தலைவர் நா.சேனாதிராசா வழங்கி வைத்துள்ளார்.

இந்த நிகழ்வின் போது, சம்மேளன செயலாளர் எஸ்.பரந்தாமன், கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர் வி.கே.ரவீந்திரநாதன் ஆகியோர் உட்பட பயனாளிகள், சங்க நிர்வாகிகள் எனப் பலரும் கலந்து கொண்டு சிறப்பித்துள்ளார்கள். (2-15)




# வகுப்பறைக் கட்டடம் திறந்துவைப்பு; வழிகாட்டி நூல்களும் கையளிப்பு



(மல்லாவி)

வடக்கு மாகாண சபையின் நிதியுதவியுடன், மடு வலயக் கல்வி அலுவலகத்திற்குட்பட்ட மன்/ கருங்கண்டல் றோமன் கத்தோலிக்க தமிழ் கலவன் பாடசாலையில் புதிதாக அமைக்கப்பட்ட வகுப்பறை கட்டடத் தொகுதி வைபவ ரீதியாகத் திறந்து வைக்கப்பட்டு மாணவர்களிடம் கையளிக்கப்பட்டுள்ளது.

இந் நிகழ்வு நேற்று முன்தினம் புதன்கிழமை பாடசாலை அதிபர் அருட்சகோதரர் ஜோசப் அகஸ்ரீன் தலைமையில் நடைபெற்றுள்ளது.

நிகழ்விற்கு பிரதம விருந்தினராக கலந்து கொண்ட தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் வன்னி மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் செல்வம் அடைக்கலநாதன் வைபவ ரீதியாக திறந்து வைத்துள்ளார்.

இந் நிகழ்விற்கு வருகை தந்த ஆரம்பக் கல்விப் பாடசாலை அதிபர்களிடம் ஒரு தொகுதி தரம் ஐந்து புலமைப்பரிசில் பரீட்சைக்கு தோற்றவிருக்கும் மாணவர்களுக்கான புலமைப்பரிசில் பரீட்சை வழிகாட்டி நூல்களையும் பாராளுமன்ற உறுப்பினர் செல்வம் அடைக்கலநாதன் வழங்கி வைத்துள்ளார். (2-15)

# மின்னிணைப்பு வழங்கப்பட்டது

மன்னார் மாவட்ட மாந்தை மேற்கு பிரதேச செயலகத்திற்குட்பட்ட இலுப்பைக்கடவை ரூபி முன்பள்ளி, அந்தோனியார்புரம் முன்பள்ளி, அந்தோனியார்புரம் அரசினர் தமிழ்க் கலவன் பாடசாலையின் ஆசிரியர் விடுதி ஆகிய மூன்றிற்கும் வடக்கு மாகாண போக்குவரத்து அமைச்சர் பா.டெனிஸ்வரன் தனது 2016 ஆம் ஆண்டிற்கான பிரமாண அடிப்படையிலான மூலதன நன்கொடை நிதி ஒதுக்கீட்டில் இருந்து நிதியை ஒதுக்கி மின்னிணைப்புக்களை வழங்கியிருந்தார்.

அதனடிப்படையில் மின்னிணைப்பு வழங்கப்பட்ட இடங்களுக்கு நேரடி விஜயம் மேற்கொண்டு சிறார்களை பார்வையிட்டதோடு உத்தியோகபூர்வமாக மின்னிணைப்பை ஆரம்பித்து வைக்கும் நிகழ்வு நேற்று முன்தினம் புதன்கிழமை நடைபெற்றது. (2-281)

# காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவுகள் வவுவில் சுழற்சி முறையில் உணவுத் தவிர்ப்பு

# 7 ஆவது நாளாக நேற்றும் தொடர்ந்தது




வவுனியாவில் வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவினர்கள் ஒன்றிணைந்து வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்கள் தொடர்பில் தீர்வு கிடைக்கும் வரையில் முன்னெடுத்திருக்கும் சுழற்சி முறையிலான உணவுத் தவிர்ப்புப் போராட்டம் நேற்று 7 ஆவது நாளாகவும் நடைபெற்றது.


இந்தப் போராட்டமானது வவுனியா வீதி அபிவிருத்தி திணைக்களத்திற்கு முன்பாக ஏ-9 வீதியின் அருகாமையில் நடைபெற்று வருகின்றது.

கடந்த 24ஆம் திகதி முற்பகல் 11.30 மணியளவில் பூசை வழிபாடுகளை அடுத்து முன்னெடுக்கப்பட்ட சுழற்சி முறையிலான உணவுத் தவிர்ப்பு போராட்டம் நேற்றுடன் 7 ஆவது நாளாகவும் நடைபெற்றது. கையளிக்கப்பட்ட தமது உறவினர்களை விடுவிக்கக்கோரியும் அரசியல் கைதிகளை விடுதலை செய்யக் கோரியும் அவசரகாலச் சட்டத்தினை நீக்குமாறு கோரியும் தமது போராட்டத்தை முன்னெடுத்து வருகின்றனர்.

கடந்த ஜனவரி மாதம் மேற்கொண்ட சாகும் வரையான உணவு தவிர்ப்புப் போராட்டம் பாதுகாப்பு இராஜாங்க அமைச்சரின் வாக்குறுதியை அடுத்து கைவிடப்பட்டதுடன் கொழும்பில் இடம்பெற்ற பேச்சுவார்த்தையில் முன்னேற்றம் ஏற்படவில்லை என்று தெரிவித்து தமது போராட்டத்தினை சுழற்சி முறையில் தற்போது உறவுகள் மேற்கொண்டு வருகின்றனர். (2-250-15)


## யாழ்ப்பாண விஞ்ஞான சங்கத்தின் பிரிவு A வழங்கும்...

# PET வகை பிளாஸ்ரிக்குகளின் மீள் பாவனை சரியானதா? மெல்ல உயிர்கொல்லும் பிளாஸ்ரிக்குகள் பற்றியதோர் அலசல்




மண்சட்டியில் ஊறவைத்த பழஞ்சோற்றுடன் மூடிவைத்த பழங்கறி சேர்த்துத் திரட்டி.. .தொட்டுக்கொள்ள ஊறுகாயும் கடிக்க வெங்காயமும் கொடுத்த பாட்டியிடம் வாங்கி உண்டு காலை ஆகாரத்தை முடித்து... "அந்த பனையோலைப் பையை எடுங்கோ கடைக்குப் போயிட்டு வாறன் ..." என்று கூறும் அப்பாக்களின் காலம் மாறி.. என்ன "கிறெடிட் காட்" எங்கையப்பா.. ஒருக்கா "பூட்சிற்றிக்கு" (Food city) போயிட்டு வருவம் என்று கூறி கையில் பையே எடுக்காமல் செல்லும் இன்றைய நாகரிகம் நாளைய பூமியின் நல்வாழ்வை மெல்லக் கொன்றுவிடும் என்று சொன்னால் மிகையாகாது...


கடையில் பொருட்களுடன் வீட்டிற்கு எடுத்துவரும் பொலித்தீன் பைகள் முதல் அனைவரதும் வாய்க்கு ருசிகொடுக்கும் மென்பானப் போத்தல்களென இந்த ஙெகிழிகளின் (பிளாஸ்ரிக்குகளின்) ஆதிக்கம் நாளுக்கு நாள் அதிகரித்தவண்ணமே இருக்கின்றது. அது சரி... குடித்து முடித்ததும் இந்த வெற்று மென்பானப் போத்தல்களை நாம் என்ன செய்கின்றோம். அவற்றைப் பத்திரப்படுத்தி பாடசாலைக்கோ அலுவலகங்களுக்கோ வேலை செய்யும் இடங்களுக்கோ நீர் நிரப்பி எடுத்துச் செல்லும் கொள்கலன்களாகவே அவற்றைப் பாவிக்கின்றோம்.



Polycondensation reaction in the production of PET

ஏனெனில் இத்தகைய பிளாஸ்ரிக் கொள்கலன்கள் எடுத்துச் செல்வதற்கு இலகு. பார்ப்பதற்கும் அழகு (?) இருப்பினும் இவ்வாறான மென்பான பிளாஸ்ரிக் போத்தல்களின் மீள்பாவனை சரியானது தானா? சற்றே விளக்கமாகப் பார்க்கலாம்.

குடிதண்ணீர் (Mineral water) மற்றும் மென்பானங்கள் (Soft drinks) அடைத்து வரும் பிளாஸ்ரிக் போத்தல்கள் பொலி எதிலீன் ரெரேதலேற்று (Polyethylene terephthalate, PET) எனும் பல் பகுதியைச் சேர்வையினால் ஆக்கப்பட்டவை. இவ்வகையான போத்தல்கள் பிளாஸ்ரிக் அடையாளக் குறியீடு " 1" (Plastic identification code, PIC "1") தனதாக்குகின்றன. இவைபற்றி விளக்கமாகப் பார்ப்பதற்கு முன்னர் பிளாஸ்ரிக்குகள் பற்றியும் அவற்றின் வகைகள் பற்றியும் தெரிந்து கொள்வது நல்லது என நம்புகிறேன்.



பிளாஸ்ரிக்குகள் என்றால் என்ன?

பிளாஸ்ரிக்குகள் செயற்கையான முறையில் உருவாக்கப்பட்ட சேதனப் பல்பகுதியங்களாகும். இவை பெரும்பாலும் பெற்றோலிய இரசாயனங்களில் இருந்தே (Petro chemicals) உருவாக்கப்படுகின்றன. இலகுவான உற்பத்தியாக்கம் குறைந்த விலை, இலகுப்பாவனை, மீளும் தன்மை, நீடித்த பாவனை போன்ற பல காரணங்களால் இப்பிளாஸ்ரிக் பொருட்கள் பாரம்பரிய பொருட்களான மட்பாண்ட கொள்கலன்கள், உலோகக் கொள்கலன்கள் மற்றும் மரத்தால் ஆன பொருட்கள் போன்றவற்றை பின்தள்ளி முன்னிலை வகிக்கின்றன. இந்த வாறாக பொதுவாகப் பாவனையில் உள்ள பிளாஸ்ரிக்குகளை பின்வரும் வகைகளுள் அடக்கலாம்.

பொலிஎசுத்தர்கள் Polyesters (PES)

பொலி எதிலின் ரெரேதலேற்று Polythylene terephthalate (PET)


பொலி எதிலின் Polythylene (PE)

பொலி வைனகுளோரைட்டு Polyvinylchloride (PVC)

பொலி புரொப்பைலீன் Poly propylene (PP)

பொலிஸ் ரைரீன் Polystyrene (PS)

பொலி எமைட்டு Polyamide (PA)



பொலி எதிலீன்ரெலேதலேற்று (Polyethylene terephthalate, PET)

பொலி காபனேட்டு Polycarbonate (PC)

பொலி யுரதேன் Polyurathane (PU)

இவ்வனைத்து பிளாஸ்ரிக்குகளும் வெப்பமிழக்கும் (Thermo plastic) மற்றும் வெப்பம் இறுக்கும் (Thermo setting plastic) பல்பகுதியங்கள் எனும் பெரும் பிரிவின் கீழ் வகைப்படுத்தப்படும். பொலிஎதிலீன் ரெரேதலேற்று (PET), பொலிபுரொப்பைலீன் (PP), பொலிவைனல் குளோரைட்டு (PVC), பொலிஸ்ரைரீன்(PS) ஆகியவை வெப்பமிழக்கும் பல்பகுதிய வகைக்குள் அடங்கும். அதேவேளை பொலி எதீன் (PE), பொலியுரதேன் (PU), பேக்லைற் (Bakelite) போன்ற பல பிளாஸ்ரிக்குகள் வெப்பம் இறுக்கும் பல்பகுதிய வகையைச் சாரும்.

பல்வேறு தேவைகளுக்காக இப்பிளாஸ்ரிக் வகைகள் பயன்படுத்தப்படுகின்றபோதிலும் பயன்படுத்திய பின்னர் அனைத்தும் கழிவுப் பொருட்களாகவே கருதப்படுகின்றன.

எனவே இவ்வகையான திண்மக் கழிவுகள் சரியானமுறையில் அகற்றப்பட வேண்டும். முறையான திண்மக் கழிவுகளின் முகாமைத்துவம் பற்றி இப்பகுதியில் ஏலவே ஒரு கட்டுரை விளக்கி நின்றது.இங்கு குறிப்பிடத்தக்கது. இக்கட்டுரை பிளாஸ்ரிக் பொருட்களின் மீள் பாவனை மற்றும் மீள்சுழற்சி பற்றியே விளக்கி நிற்கின்றது.

1987 ஆம் ஆண்டில் அமெரிக்க பிளாஸ்ரிக் நிறுவனங்களின் ஒன்றியம் பிளாஸ்ரிக் தன்மைக்கேற்ற அவற்றை வகைப்படுத்தி 1–7 வரையான குறியீட்டு இலக்கங்களை வழங்கி உள்ளது. மேலே கூறப்பட்ட வகைப்படுத்தலுக்கு இணங்க குடிநீர் கொள்கலன் மற்றும் மென்பானப் போத்தல்கள் ஆக்குவதற்கு பயன்படும் பிளாஸ்ரிக்குகள் 1 எனும் அடையாளக் குறியீட்டை தன்னகத்தே கொள்கின்றது.

இவை பொலி எதிலின் ரெரேதலேற் (PET) எனும் பல்பகுதியத்தால் ஆனவை. (தொடரும்)

ஸ்ரீ.ஐஸ்மிகா
தரம் 12
யா/ உடுப்பிட்டி
மகளிர் கல்லூரி.

## வாரத்திற்கு ஒரு புதிர்! 181

2022 ஆம் ஆண்டின் உலகக் காற்பந்தாட் டப் போட்டி (FIFA) நிகழ்ச்சிக்கு உபசரணை வழங் கும் நாடாக தேர்ந்தெடுக்கப்பட்ட மத்திய கிழக்கு நாடு எது?

**புதிர் 181 இற்கான விடைகளை 13.03.2017 இற்கு முன்னர் கிடைக்கக் கூடியதாக அனுப்ப வேண்டிய முகவரி:**

கலாநிதி.(செல்வி) ஷிவதர்சினி இராசலிங்கம்
ஆசிரியர், பிரிவு A
யாழ்ப்பாண விஞ்ஞான சங்கம்
சிரேஷ்ட விரிவுரையாளர்,
இரசாயனவியற்றுறை
யாழ்.பல்கலைக்கழகம்.

**சரியான விடையை அனுப்பும் அதிர்ஷ்டசாலிக்கு ரூபா 500/- பணப்பரிசு வழங்கப்படும்.**

இப் பணப்பரிசினை யாழ்.பல்கலைக்கழக விஞ்ஞான சங்கம் பிரிவு A பிரிவிடம் நேரில் சென்று பெற்றுக் கொள்ளலாம்.

**புதிர் 180 க்கான 500/- பரிசு பெறும் அதிர்ஷ்டசாலி**

அ. அபூர்பா
346 /6, பருத்தித்துறை வீதி,
நல்லூர், யாழ்ப்பாணம்.

**புதிர் 180க்கான கேள்வியும் விடையும்:**

உலகின் மூன்றாவது நீளமான நதி எனும் பெருமைக்குரிய ஆசியாவின் மிக நீளமான நதி எது? யாங்சி/ யாங்சி யியாங் (Yangtze River/ Yangzi Jiang)

**யாழ்ப்பாண விஞ்ஞான சங்கம் புதிர் இல. 181**

சரியான விடை:-..............................................

முழுப்பெயர்:-..............................................

முகவரி:-..............................................

தொ.பே. இல:..............................................

கையொப்பம்:..............................................

# 4 ஆம் ஆண்டு நினைவலைகள்



அமரர்

திருமதி இரஞ்சினி

மாதவன்

தோற்றம்:-09.11.1958

மறைவு:- 16.02.2013


ஆண்டுகள் நான்கு ஓடி
மறைந்தாலும் உங்கள்
அன்பு முகம் எங்கள்
நினைவுகளில் நின்று
மறையவில்லை
நாட்கள் வாரங்களாகி
வாரங்கள் மாதங்களாகி
மாதங்கள் வருடங்கள்
ஆகியும் உங்கள் நினைவுத்
துயரிலிருந்து மீண்டெழ
முடியவில்லை எங்களால்
உங்கள் ஆத்மா சாந்தி
யடைய மட்டுவில் பன்றித்
தலைச்சி கண்ணகி அம்மன்
பாதங்களைத்
தரிசிக்கின்றோம்.



உங்கள் பிரிவால் வாடும்
கணவன்,
பிள்ளைகள்,
மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.

(8084)

மட்டுவில் வடக்கு,
சாவகச்சேரி.



# இயற்கை எரிவாயு திட்டத்தினை கைவிடும் வரை போராட்டம் தொடரும்

## நெடுவாசல் மக்கள் உறுதி

(சென்னை)

இய்ற்கை எரிவாயு (ஐதரோ காபன்) திட்டத்தினை மத்திய அரசு கைவிடும்வரை போராட்டம் தொடரும் என நெடுவாசல் கிராம மக்கள் தெரிவித்துள்ளனர்.

மத்திய அரசு ஒப்புதல் அளித்துள்ள ஐதரோ காபன் இயற்கை எரிவாயு திட்டத்திற்கு எதிர்ப்பு தெரிவித்து கடந்த 16ஆம் திகதி முதல் நெடுவாசல் கிராம மக்கள் போராட்டம் நடத்தி வருகின்றனர்.

நெடுவாசல் கிராம மக்களின் போராட்டத்திற்கு ஆதரவாக மாணவர்களும் இளைஞர்களும் தமிழகத்தில் ஆங்காங்கே போராட்டம் நடத்தி வருகின்றனர்.

இந்நிலையில் ஐதரோ காபன் திட்டத்தினை முற்றாக நிறுத்த வேண்டும் என்று கோரி நெடுவாசல் போராட்ட குழுவின் பிரதிநிதிகள் தமிழக முதலமைச்சர் எடப்பாடி பழனிச்சாமியை நேற்று முன்தினம் புதன்கிழமை சந்தித்து கலந்துரையாடினர்.

இந்தச் சந்திப்பின்போது நெடுவாசல் இயற்கை எரிவாயு திட்டத்தினை தடுத்து நிறுத்துவதற்கு நடவடிக்கை எடுப்பதாக உறுதியளித்த தமிழக முதலமைச்சர், நெடுவாசல் கிராம மக்கள் தமது எதிர்ப்பு போராட்டங்களை கைவிட வேண்டும் என்றும் வேண்டுகோள் விடுத்தார்.

மாநில அரசின் இந்தக் கோரிக்கையை ஏற்பதற்கு மறுத்துள்ள நெடுவாசல் கிராம மக் கள் ஐதரோ காபன் திட்டத்தை மத்திய அரசு கைவிடும்வரை தமது போராட்டம் தொடரும் என்றும் உறுதிப்பட தெரிவித்துள்ளனர். (இ-12)

## இந்தியா-நேபாளம் இடையில் கூட்டு இராணுவப் பயிற்சி



(டில்லி)

இந்தியா மற்றும் நேபாளத்திற்கு இடையிலான உறவைப் பலப்படுத்தும் நோக்கில், கூட்டு இராணுவப் பயிற்சி அடுத்த வாரம் உத்தர காண்ட் மாநிலத்தில் ஆரம்பமாகவுள்ளது

இப்படியான பயிற்சிகள் சூரிய கிரண் என்ற பெயரில் அவ்வப்போது பல்வேறு இடங்களில் நடப்பது வழக்கம். இந்நிலையில், சூர்ய கிரண்-XI என்ற பெயரில் இரு நாடுகளுக்கிடையே கூட்டு இராணுவப் பயிற்சி எதிர்வ ரும் 7ஆம் திகதி உத்தர காண்ட் மாநிலத்தின் மலைப் பிரதேசமான பிதோராகார் என்ற இடத்தில் நடைபெறுகிறது.

15 நாட்கள் நடைபெறும் இந்த பயிற்சி முகாமில் இரு நாட்டு இராணுவ வீரர்கள் மற்றும் அதிகாரிகள் தங்களிடம் உள்ள நவீன ஆயுதங்கள், எதிரிகளை தாக்கும் நுணுக்கங்கள் ஆகியவற் றை பரஸ்பரம் மற்றவர்களு க்கு பயிற்சியாக அளிப்பார்கள். மேலும், எதிரிகளை குறிவைத்து தாக்குதல், எல்லைப் பகுதிகளில் நடமாடும் கடத்தல்காரர்களை முழுவதுமாக ஒடுக்குவது குறித்தும் தீவிர பயிற்சி எடுக்கவுள்ளனர்.

ராஜ்ய ரீதியான உறவு, கலாசாரமற்றும்வரலாற்றுதொடர்புகள் என்பன இரு நாடுகளுக்கிடையே இருப்பதால், இந்த உறவை அடுத்த கட்டத்துக்கு எடுத்துச் செல் வதற்காக இம்மாதிரியான ராணுவ பயிற்சி முகாம்கள் அவசியம் என இந்திய இராணுவ உயரதிகாரிகள் தெரிவித்தனர். (இ-12)

## ‘ஜெ’ சொத்துக்களை தமிழக அரசு உடன் பறிமுதல் செய்ய வேண்டும்

(மதுரை)

ஐதரோ காபன் திட்டத்தை மத்திய அரசு கைவிட வேண்டும் என மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் மாநில செயலாளர் ஜி.ராமகிருஷ்ணன் வலியுறுத்தியுள்ளார்.




மதுரையில் செய்தியாளர்களிடம் நேற்று பேசிய அவர், பட்டாசு தொழில் மற்றும் அதன் தொழிலாளர்களை பாதுகாக்க நடவடிக்கை எடுக்க மாநில அரசை வலியுறுத்தியுள்ளார். மேலும் சேலம் உருக்காலையை தனியாருக்கு தாரை வார்க்கும் முயற்சியை மத்திய அரசு கைவிட வேண்டும் என்றார்.

சேலம் உருக்காலையை இலாபகரமானதாக இயக்க மத்திய அரசு நடவடிக்கை எடுக்க கோரியுள்ளார்.

இதேவேளை உச்சநீதிமன்ற தீர்ப்பின்படி ஜெயலலிதா சொத்துக்களை தமிழக அரசு உடன்பறிமுதல் செய்ய வேண்டும் என்றார். எடப்பாடி பழனிச்சாமியும், ஓ.பன்னீர்செல்வமும் ஜெயலலிதாவின் ஆட்சியை பின்பற்றுவோம் எனக் கூறுவது சமூக நெறிக்கு புறம்பானது என்றும் விமர்சித்துள்ளார். (இ-12)

## தமிழக அமைச்சரவை இன்று மாலை கூடுகிறது



(சென்னை)

தமிழக அமைச்சரவைக் கூட்டம் முதலமைச்சர் எடப்பாடி பழனிச்சாமி தலைமையில் இன்று மாலை 4.30 மணிக்கு நடக்கிறது.

இக் கூட்ட்த்தில் முதலமைச்சர் எடப்பாடி பழனிச்சாமி மற்றும் அனைத்து அமைச்சர்கள் கலந்து கொள்கிறார்கள்.

முதலமைச்சராக எடப்பாடி பழனிச்சாமி பதவி ஏற்றதற்கு பின்பு தமிழக அமைச்சரவையின் முதலாவது கூட்டம் இன்று மாலை 4.30 மணிக்கு நடக்கிறது. முதலமைச்சர் எடப்பாடி பழனிச்சாமி மற்றும் அனைத்து அமைச்சர்கள் கலந்து கொள்கிறார் கள்.


இந்தக் கூட்டத்தில் தமிழக சட்டசபையில் தாக்கல் செய்யப்படவுள்ள பட்ஜெட் குறித்து விவாதித்து முடிவு எடுக்கப்படலாம் என்று கூறப்படுகிறது.

பட்ஜெட்டில் ஒவ்வொரு துறைகளுக்கும் எவ்வளவு நிதி ஒதுக்கீடு செய்வது, இலவச திட்டங்களுக்கான நிதி ஒதுக்கீடு மற்றும் புதிய திட்டங்கள் பற்றிய அறிவிப்புகள், நிதி ஒதுக்கீடுகள் போன்றவை குறித்தும் விவாதிக்கப்படும் என்று தெரிகிறது.

உள்ளாட்சி தேர்தலை நடத்துவது உள்ளிட்டவை குறித்தும் ஆலோசித்து முடிவு எடுக்கப்படும் என்று தகவல் வெளியாகியுள்ளது. (இ-12)

# மக்களின் வாழ்வாதாரத்தைப் பாதிக்கும் வளர்ச்சித் திட்டங்கள் எதுவும் வேண்டாம்

## மு.க.ஸ்டாலின் தெரிவிப்பு



எத்தகைய வளர்ச்சித் திட்டமாக இருப்பினும் அது மக்களின் வாழ்வாதாரத்தை பாதிக்காது செயற்படுத்தப்பட வேண்டும் என தி.மு.க. செயல் தலைவர் மு.க.ஸ்டாலின் தெரிவித்துள்ளார்.

விவசாயிகளுக்கு பாதிப்பை ஏற்படுத்தும் மத்திய அரசின் ஐதரோ காபன் திட்டத்தினை கைவிட வேண்டும் என்று வலியுறுத்தி மத்திய பெற்றோலியத்துறை அமைச்சர் தர்மேந்திர பிரதானுக்கு தி.மு.க. செயல் தலைவர் மு.க.ஸ்டாலினால் அனுப்பிவைக்கப்பட்ட கடிதத்தில் இவ்வாறு குறிப்பிடப்பட்டுள்ளது.

குறித்த கடிதத்தில், ‘நெடுவாசல் ஐதரோ காபன் திட்டத்தை எதிர்த்து பொது மக்கள் தன்னிச்சையாக போராடுகின்றனர்.

நெடுவாசல் அமைந்துள்ள புதுக்கோட்டை மாவட்டம் தமிழ்நாட்டில் மிகவும் பின்தங்கிய மாவட்டமாக உள்ளது. இங்கு ஐதரோ காபன் இயற்கை எரிவாயு திட்டம் செயற்படுத்தப்படும் போது தமது விவசாயமும், வாழ்வாதாரமும் பாதிக்கப்படும் என்று விவசாயிகள், மாணவர்கள் மற்றும் பொது மக்கள் கருதுகின்றனர். மேலும், அங்கு ஆழ்துளை கிணறுகள் அமைக்கப்படுவதன் மூலம் இயற்கை வளங்கள் அழிக்கப்படும் என்றும் அஞ்சுகின்றனர்.

எத்தகைய வளர்ச்சித் திட்டமாக இருந்தாலும் அது மக்களின் வாழ்வாதாரத்தை பாதிக்காது செயற்படுத்தப்பட வேண்டும் என்பதை நீங்கள் ஏற்றுக்கொள்வீர்கள் என்று நான் உறுதியாக நம்புகிறேன்.

இது தலைமுறைக்கும் நீடித்த வளர்ச்சிக்கான செயற்பாடு என்றாலும், இயற்கை வளங்களை மக்கள் அனுபவிப்பதற்கு ஆரோக்கியமான வாழ்க்கையை அவர்களுக்கு அமைத்துக் கொடுக்க வேண்டும் என்பதே அரசின் அடிப்படை நோக்கமாக இருக்க வேண்டும்.

மக்களின் போராட்டத்திற்கு பாராமுகம் காட்டி மேற்படி திட்டம் தொடருமாயின் இன்றைய தலைமுறை மாத்திரமல்ல, எதிர்கால தலைமுறையும் தங்களது உரிமைகளை பறிகொடுத்து தவிக்கும் என நான் அஞ்சுகின்றேன்.

ஜனநாயகத்தில் தேர்ந்தெடுக்கப்பட்ட அரசு, மக்களின் விருப்பத்திற்கு எதிராக செயற்படக்கூடாது. எனவே, தமிழக மக்களின் விருப்பத்திற்கு முற்றிலும் எதிரான ஐதரோ காபன் திட்டத்தை கைவிடவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்' என்று ஸ்டாலின் குறிப்பிட்டுள்ளார்.

குறித்த கடிதத்தினை தி.மு.க.கட்சியின் மேல்சபை உறுப்பினர்களான கனிமொழி, திருச்சி சிவா ஆகியோர் நேற்று முன்தினம் புதன்கிழமை மத்திய பெற்றோலியத்துறை அமைச்சர் தர்மேந்திர பிரதானிடம் நேரில் கையளித்தனர் என்பது குறிப்பிடத்தக்கது. (இ-12)

# வடகொரியர்களுக்கான பயணச் சலுகை இரத்து மலேசியா அறிவிப்பு

(கோலாலம்பூர்)

வடகொரிய ஜனாதிபதியின் சகோதரர் படுகொலை செய்யப்பட்டதையடுத்து, வட கொரிய மக்களுக்கு தங்கள் நாட்டில் அனுமதித்திருந்த விசா இல்லாத பயணச் சலுகையை மலேசிய அரசு இரத்துச் செய்துள்ளது.

வடகொரிய ஜனாதிபதி கிம் ஜாங் உன்னின் ஒன்று விட்ட சகோதரர் கிம் ஜாங்-நாம்.

இவர் கடந்த 13 ஆம் திகதி மலேசிய தலைநகர் கோலாலம்பூர் விமான நிலையத்தில் மர்மமான முறையில் மரணம் அடைந்தார்.

விமான நிலையத்தில் அமர்ந்திருந்த அவரது முகத்தில் 2 பெண்கள் தடை செய்யப்பட்ட 'வி எக்ஸ்' என்ற கொடுமையான இரசாயன விஷப்பவுடரை வீசி கொலை செய்ததாகக் கூறப்படுகிறது.

இக்கொலை தொடர்பாக இந்தோனேசியா மற்றும் வியட்நாமை சேர்ந்த 2 பெண்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

அவர்கள் மீது கொலை வழக்குப் பதிவு செய்யப்பட்டு விசாரணை நடத்தப்பட்டு வருகிறது.

இந்நிலையில், வட கொரிய மக்களுக்கான விசா இல்லாத பயணச் சலுகையை மலேசிய அரசு இரத்துச் செய்துள்ளது.

கிம் ஜாங் நாம் கொலை தொடர்பாக சந்தேகத்தின் பேரில் பல வடகொரியர்களை மலேசிய பொலிஸ் தேடி வரும் நிலையில், பாதுகாப்பு காரணங்களுக்காக இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

விசா சலுகை இரத்து நடவடிக்கையானது மார்ச் 6 ஆம் திகதி முதல் நடைமுறைக்கு வருவதாகவும், அதன்பின்னர் வடகொரிய மக்கள் மலேசியாவுக்கு வருவதற்கு விசா பெற வேண்டும் என்றும் மலேசிய துணை பிரதமர் அஹ்மத் ஜாஹித் ஹமீதி அறிவித்திருப்பதை மேற்கோள் காட்டி தேசிய செய்தி நிறுவனம் செய்தி வெளியிட்டுள்ளது.

கிம் ஜாங் நாம் கொலை செய்யப்படுவதற்கு முன்பு, வடகொரியாவுக்கும் மலேசியாவுக்கும் இடையே நல்ல நட்புறவு இருந்தது.

இருதரப்பு வர்த்தகம் மட்டுமின்றி இரு நாட்டு மக்களும் பரஸ்பரம் விசா இன்றி பயணம் செய்ய ஒப்பந்தம் செய்யப்பட்டிருந்தது குறிப்பிடத்தக்கது. (இ-12)




# தலிபான் தீவிரவாதிகளின் மீது ஆப்கான் படையினர் தாக்குதல்

காபூலில் பாதுகாப்புப் படையினரின் நிலைகளை இலக்கு வைத்து நடத்தப்பட்ட தாக்குதல்களுக்கு தலிபான் தீவிரவாதிகள் பொறுப்பேற்றதை அடுத்து, தலிபான் தீவிரவாதிகளுக்கு எதிராக ஆப்கான் பாதுகாப்பு படையினர் பதில் தாக்குதலொன்றை நடத்தியுள்ளனர்.

பொலிஸ் நிலையம் மற்றும் இராணுவ புலனாய்வு அலுவலகம் என்பவற்றை இலக்கு வைத்து நேற்று முன்தினம் புதன்கிழமை நடத்தப்பட்ட தாக்குதல்களில் சுமார் 16 பேர் உயிரிழந்ததுடன், 44 பேர் படுகாயமடைந்ததாக சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது.

16 பேரை காவுகொண்ட குறித்த தாக்குதலை பொறுப்பேற்பதாக தலிபான் பேச்சாளர் சபினுல்லாஹ் முஹாஜித் அறிவித்தார்.

இந்நிலையில், தமது இருப்பை உயர்த்திக் காட்டும் நோக்கில் தீவிரவாதிகள்



இவ்வாறான மோதல்களை முன்னெடுத்து வருவதாக தெரிவித்த ஜனாதிபதி அஷ்ரப் கானி குறித்த தாக்குதலுக்கு கடும் கண்டனத்தை வெளியிட்டுள்ளார். (இ-12)

# சிரியாவில் மோதலில் ஈடுபட்ட இரு தரப்பும் போர்க்குற்றங்களை இழைத்துள்ளன-ஐ.நா



சிரியாவின் அலெப்போ நகரை கைப்பற்றும் முகமாக கடந்த ஆண்டு முன்னெடுக்கப்பட்ட மோதல்களின் போது இரு தரப்பிலும் போர்க் குற்றங்கள் இழைக்கப்பட்டுள்ளதாக ஐக்கிய நாடுகளின் மனித உரிமைகள் குறித்த புலனாய்வாளர்கள் தெரிவித்துள்ளனர்.

ரஷ்ய ஆதரவுடனான சிரிய அரச படையினர், குளோரின் குண்டுகளை பயன்படுத்தி தாக்குதல் நடத்தி நூற்றுக்கணக்கானவர்களின் உயிர்களை பறித்ததாகவும்

அதேவேளை, கிளர்ச்சியாளர்கள் அரச கட்டுப்பாட்டுப் பகுதிகளில் கண் மூடித்தனமான குண்டுத் தாக்குதல்களை மேற்கொண்டதாகவும் பொதுமக்களை மனிதக் கேடயங்களாக பயன்படுத்தியதாகவும் குற்றம் சாட்டப்பட்டுள்ளது.

அலெப்போவில் தமது கோட்டையை நிறுவி கட்டுப்பாட்டில் வைத்திருந்த கிளர்ச்சியாளர்கள், கடந்த டிசெம்பர் மாதம் படையினரினால் விரட்டியடிக்கப்பட்டதை தொடர்ந்து அலெப்போ மோதலுக்கு முடிவு கட்டப்பட்டது.

இதன்போது போர்க்குற்றங்கள் இழைக்கப்பட்டதாக குற்றச்சாட்டுகள் எழுந்த நிலையில், அது தொடர்பில் ஐ.நா. மனித உரிமைகள் பேரவையினால் விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டன.

அதன்படி நூற்றுக்கணக்கான சாட்சி விசாரணைகள் மற்றும் செயற்கைக்கோள் புகைப்படங்கள் என்பவற்றை ஆய்வு செய்து இவ்வாறு இரு தரப்பும் போர்க்குற்றங்களை இழைத்துள்ளதாக ஐ.நா. குறிப்பிட்டுள்ளது.

ஆறு மாத காலமாக இடம்பெற்ற மோதல்களின் போது சர்வதேச சட்டத்திற்கு புறம்பான வகையிலான இரு தரப்பினதும் செயற்பாடுகளினால் பொதுமக்கள் கடுமையாக பாதிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (இ-12)

# போரால் அநாதரவான சிரிய அகதிகளுக்கு ஐ.நா.வினால் மருத்துவ, நிவாரண முகாம்



போரினால் அநாதரவாக்கப்பட்டுள்ள அகதி மக்களுக்கு நிவாரண மற்றும் மருத்துவ உதவிகளை வழங்கும் வகையில் ஐ.நா.வினால் நிறுவப்பட்டுள்ள முகாமினால் தாம் பெரும் நன்மையடைந்துள்ளதாகவும், அதற்காக நன்றிகளை தெரிவித்துக் கொள்வதாகவும் சிரிய அகதிகள் தெரிவித்துள்ளனர்.

வன்முறை மோதல்களினால் இடம்பெயர்ந்து ஜோர்தான்- சிரிய எல்லையில் உள்ள சிறிய நிலப்பரப்பில் அமைக்கப்பட்டுள்ள ரக்பான் முகாமில் தங்கியுள்ள சுமார் 70 ஆயிரம் அதிகளுக்காக குறித்த மருத்துவ முகாம் அமைக்கப்பட்டுள்ளது.

மோசமான காலநிலை, தாமதமாகும் நிவாரண உதவிகள் போன்ற காரணங்களால் குறித்த பகுதியில் முகாமிட்டுள்ள மக்கள் மிக நீண்டகாலமாக கடினமான வாழ்க்கை முறையை எதிர்கொண்டுள்ளனர்.

அங்கு மேற்கொள்ளப்பட்ட கொடூரத் தாக்குதலை அடுத்து, கடந்த ஆண்டு ஜூலை மாதம் முதல் நவம்பர் மாதம் வரை குறித்த பகுதிக்கான நிவாரணப் பணிகள் நிறுத்தப்பட்டன.

இந்நிலையில் தற்போது நிவாரணப் பணிகள் மீண்டும் ஆரம்பிக்கப்பட்டுள்ள நிலையில், சீரான முறையில் நிவாரணங்களைப் பெற்றுக் கொடுக்க நடவடிக்கை மேற்கொண்டு வருவதாக ஐ.நா. அறிவித்துள்ளது.


'சிரியாவில் தொடரும் மோதல்கள் காரணமாக பாதுகாப்பு நிமித்தம், அனைத்தையும் துறந்து எல்லைகளில் குடியேறியுள்ளோம்.

இங்குள்ள மக்களுக்கு நிவாரண உதவிகள் பெரிதும் தேவைப்படுகின்றன'.

'முகாம் வாழ்க்கை மிகவும் கடினமாகவுள்ளது.

இங்கு எமக்கு தேவையான நீரைப் பெற்றுக்கொள்வதில் கூட பெரும் சிரமங்களை எதிர்நோக்கி வருகிறோம்' என அகதிகள் தெரிவித்தனர். (இ-12)

# மத்திய மேற்கு அமெரிக்காவில் புயலில் சிக்கி மூவர் உயிரிழப்பு



(வோஷிங்டன்)

மத்திய மேற்கு அமெரிக்காவில் வீசிய சுழல்காற்று மற்றும் புயலில் சிக்கி சுமார் மூவர் உயிரிழந்ததுடன், பல வீடுகள் கடுமையாக சேதமாக்கப்பட்டுள்ளதாக தேசிய வானிலை ஆய்வு மையம் மற்றும் ஊடகங்கள் தெரிவித்துள்ளன.

இதேவேளை, மின் இணைப்புகளும் துண்டிக்கப்பட்டுள்ள நிலையில் 14 ஆயிரத்திற்கும் அதிகமான வீடுகள் இருளில் மூழ்கியுள்ளதாக மின்சாரத்துறை அறிவித்துள்ளது.

இந்நிலையில், பொதுமக்களுக்கான நிவாரண உதவிகள் மற்றும் மீட்பு பணிகளை முன்னெடுப்பதற்கென மாவட்ட அவசர செயற்பாட்டு மையமொன்றை இல்லினாய்ஸ் ஆளுநர் புரூஸ் ரோனர் நிறுவியுள்ளார்.

குறித்த இயற்கை அனர்த்தம் தொடர்பில் அதிகாரியொருவர் கூறுகையில், 'மத்திய மேற்கு அமெரிக்காவின் நப்லெட் கிராமமும் நேற்று முன்தினம் இரவு ஏற்பட்ட புயலின் பாதிப்பினால் கடுமையாக பாதிக்கப்பட்டது.

ஆனால் அங்கிருந்த மக்களின் உயிருக்கு எவ்வித ஆபத்தும் அற்றவகையில் சிறு காயங்களுக்கு உள்ளான நிலையில் அனைவரும் பாதுகாப்பாக வெளியேற்றப்பட்டுள்ளனர்' என்றார். (இ-12)

# நீதிமன்றிலிருந்து ஆயுதங்கள் மீட்பு 20 பேர் கைது

(கொழும்பு)

**சுடுவதற்குத் தயார் நிலையில் இருந்த கைத்துப்பாக்கியும் ரிவோல்வரும் ஆறு ரவைகளும் கல்கிசை நீதவான் நீதிமன்ற வளாகத்தில் இருந்து பொலிஸாரிரால் நேற்று முன்தினம் மீட்கப்பட்டுள்ளன. இந்த விவகாரம் தொடர்பில் சந்தேகத்தின் பேரில் 20 பேரை கைது செய்துள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.**

பொலிஸாரினால் மேற்கொள்ளப்பட்ட தேடுதலின் போது, நீதிமன்ற வளாகத்தில், சந்தேகத்துக்கு இடமான முறையில் பொதி ஒன்று இருந்துள்ளது.

அதனைச் சோதனைக்கு உட்படுத்திய போதே, இந்த ஆயுதங்கள் மீட்கப்பட்டுள்ளன.

சீனத் தயாரிப்பான இந்த ஆயுதங்கள், பிரயோகம் செய்வதற்கு தயாரான நிலையிலேயே இருந்தன என்றும் நீதிமன்ற வளாகத்துக்குள் வைத்தே, தாக்குதல்களை மேற்கொள்வதற்கு இவை எடுத்துவரப்பட்டிருக்கலாம் என்றும் கல்கிசை பொலிஸார் தெரிவித்தனர்.

களுத்துறை சிறைச்சாலையிலிருந்து கைதிகள் ஏற்றிச்சென்ற பேருந்தின் மீது, கடந்த 27ஆம் திகதியன்று மேற்கொள்ளப்பட்ட துப்பாக்கிப் பிரயோகங்களை அடுத்து, நீதிமன்றங்களின் பாதுகாப்பும் பலப்படுத்தப் பட்டுள்ளது.

இந்நிலையிலேயே விசேட பொலிஸ் குழுவை பயன்படுத்தி, கல்கிசை நீதவான் நீதிமன்றம் சோதனைக்கு உட்படுத்தப்பட்டது.

இதன்போது, ஆயுதங்கள் மீட்கப்பட்டமையால், நீதிமன்ற நடவடிக்கைகள் யாவும் முழுமையாக கைவிடப்பட்டன. நீதிமன்ற வளாகத்திலிருந்த சகலரும் கடும் சோதனைக்கு உட்படுத்தப் பட்டனர். அதற்காக பொலிஸ் மோப்ப நாய்களும் பயன்படுத்தப்பட்டன. (இ-7)

# ஜெனிவாவில் இரு ஆண்டுகள் கால அவகாசம் கோரவுள்ளதை உறுதிப்படுத்தியது இலங்கை

ஐ.நா.மனித உரிமைகள் பேரவையின் 30/1 தீர்மானத்தை நடைமுறைப்படுத்துவதற்கு மேலும் இரண்டு ஆண்டுகள் கால அவகாசம் கோரப் போவதாக, இலங்கை அரசாங்கம் உறுதிப்படுத்தியுள்ளது. ஜெனிவா சென்றுள்ள இலங்கை அரசின் பிரதிநிதிகள் குழுவில் இடம்பெற்றுள்ள நல்லிணக்கப் பொறிமுறைகளுக்கான ஒருங்கிணைப்பு செயலகத்தின் செயலர் மனோ தித்தவெல இதனைத் தெரிவித்துள்ளார்.

ஐ.நா.மனித உரிமைகள் பேரவையிடம் மேலும் இரண்டு ஆண்டுகள் கால அவகாசத்தைப் பெற முடியும் என்று இலங்கை நம்புவதாகவும் அவர் தெரிவித்தார்.

இலங்கைக்கு கால அவகாசம் அளிக்கும் வகையில், ஐ.நா. மனித உரிமைகள் பேரவையின் இந்த அமர்வில், புதிய தீர்மானம் ஒன்று அமெரிக்கா, பிரித்தானியா, இலங்கை உள்ளிட்ட நாடுகளின் இணை அனுசரணையுடன் முன்வைக்கப்படவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

அதேவேளை, ஜெனிவாவில் நேற்று முன்தினம் நடந்த பக்க அமர்வு ஒன்றில் கருத்து வெளியிட்ட மனோ தித்தவெல, காணிகள் விடுவிப்பை துரித்தப்படுத்த நடவடிக்கை எடுக்கப்படும் என்று தெரிவித்தார். (இ-7)

# இலங்கை இராணுவத் தலைமை அதிகாரி மேஜர் ஜெனரல் சன்ன குணதிலக ஓய்வு

இலங்கை இராணுவத் தலைமை அதிகாரி மேஜர் ஜெனரல் சன்ன குணதிலக ஓய்வுபெற்றுள்ளார். இதையடுத்து இலங்கை இராணுவத்தின் இரண்டாவது நிலைப் பதவி வெற்றிடமாகியுள்ளது.

பொறியியல் படைப்பிரிவைச் சேர்ந்த மேஜர் ஜெனரல் சன்ன குணதிலக, 35 ஆண்டுகள் இரா ணுவத்தில் பணியாற்றியுள்ளார்.

இதன்போது, அவர் பல்வேறு முக்கிய பதவிகளை வகித்துள்ளார்.

55 வயதை எட்டிய நிலையில், இராணுவத் தில் இருந்து ஓய்வுபெற்ற மேஜர் ஜெனரல் சன்ன குணதிலகவுக்கு, பனாகொடவில் உள்ள இராணுவத்தின் பொறியியல் படைப்பிரிவு தலைமையகத்தில் பிரியாவிடை அளிக்கப்பட்டது. (இ-7)



## இன்று ஒரு தகவல்

### யுகக் கணக்கில் யோசிப்பதா!

உடனே அந்தக் கணமே முடிவெடுக்க வேண்டிய விடயங்கள் என்று பல உண்டு.

ஆனாலும் பெரும்பாலான விடயங் களை நாம் ஆற அமர யோசித்துத்தான் முடிவெடுக்க வேண்டியிருக்கிறது.

ஆற அமர யோசிப்பது என்றால் அதன் கால எல்லை என்ன? வருடக் கணக்கில் முடிவெடுக்காமல் இருப்பதா? அல்லது மாதக் கணக்கில் குழம்புவதா? அல்லது நாள் கணக்கில் விடயத்தைப் பின்னிக் கொண்டிருப்பதா? இவையெல்லாம் அவர வர்களின் பிரச்சினைகள் எப்படிப்பட் டவை; சூழ்நிலை எப்படிப்பட்டவை என் பதைப் பொறுத்த விடயமாகும்.

“வீடு ஒன்று விலைக்கு வந்துச்சு. அந்த நேரம் கொஞ்சம் யோசிச்சிட்டேன். வேறு ஒருத்தன் வாங்கிட்டான். இலட்ச ரூபா தான் அப்போ. வாங்கியிருந்தா பல இலட்சம் பெறும்” என்று வருத்தப்படு கிறார் நண்பர் ஒருவர்.

இவர் “யோசிச்சேன்” என்று சென்ன தைத் தயங்கினேன் என்றுதான் நாம் அர்த்தம் எடுத்துக்கொள்ள வேண்டும். நம் நிதி நிலை என்ன? நமக்கு உதவுபவர்கள் யார்? இதில் பணத்தை முடக்குவதால் வரும் கோளாறுகள் என்ன? இப்படிச் சில நடைமுறையான கேள்விகளை நமக்கு நாமே கேட்டபடி இருந்தால் பதினைந்தே நிமிடத்தில் அவர் முடிவுக்கு வந்திருக்க லாம். இந்த நினைப்பாகவே இருந்தால் அதிகபட்சம் மறுநாள் காலையே இவரால் முடிவுக்கு வந்திருக்க முடியும்.

ஆனால் மேலோட்ட நிணைப்பு அவருக்கு.

காரியம் கெட்டது. ஓர் இளைஞன் கூட பணி புரியும் பெண்ணிடம் “நான் உன்னைக் காதலிக்கிறேன்” என்றான்.

அவள் நட்பு ரீதியில் தான் பழகினாள். அவனை வெறுக்கவும் முடியாத நிலை. சொல்லப் போனால் முதலில் அவளுக்கு அது அதிர்ச்சியைத் தந்தாலும் அவன் தன்னை விரும்புகிறான் என்பது அவளுக்கு உள்ளுக்குள் மகிழ்வையே தந்தது. ஆனால் அப்பாவையும் சகோதரர்களையும் நினைத்தால் பயம்.

நாட்களைக் குழப்பத்தில் கடத்தினாள். பிரச்சின்னகளை அவளுக்கு அக்குவேறு ஆணிவேராக அலசத் தெரியவில்லை. பிரச்சினையின் ஆழத்திற்கே செல்ல வில்லை. என்ன செய்வது? இதற்குமேல் வேறு எந்தக் கேள்விகளையும் தனக்குள் கேட்டுக் கொள்ளவில்லை.

இதற்கிடையில் அவளுக்கு ஒரு நல்ல வரன் ஒன்று வந்தது. முடிவெடுக்க இதுவே சரியான தருணம். எடுக்கவில்லை மேலும் குழப்பம். வரன் விட்டுப் போனது. காலம் உருண்டது. அவனும் மனம் மாறிப் போய் வேறு திருமணம் செய்து கொண்டு விட்டான். அவள் வயது இப்போது 36. இனித் திருமணம் வேண்டுமா? என்று எண்ணுகிறாள். வாழ்வே வீணாகி விட்டதாக நினைக்கிறாள். பிரச்சினையைப் பற்றித் தீவிரமாகவும் உடனேயும் சிந்தித்து, மனசுத் தராசில் வைத்து நிறை குறைகளை எடைபோடாததுதான் தவறு.


வேலையில் சேருவதா, சொந்தமாகத் தொழில் தொடங்குவதா? இப்படி ஒரு காலக் கடத்தல் இரண்டும் போச்சு! இந்தக் கோர்சில் சேர்வதா? அந்தக் கோர்சில் சேர்வதா? நேரக் கடத்தல் இரண்டும் போச்சு.

பிரச்சினையை அலச நேரம் ஒதுக்காமல் பிரச்சினையின் ஆழத்திற்கே போகாமல் “ஒரு முடிவுக்கு வர முடியலை!” என்கிற பல்லவியைப் பாடிக் கொண்டே காலம் கடத்துகிறவர்கள் சரியான ஏமாளிகள்.

**லேனா தமிழ்வாணன்**

# தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சை மாதிரி வினாத்தாள்-பகுதி 1


♦ பின்வரும் வினாக்களில் உள்ள மூன்று அடைப்புக்களில் ஒன்று அதற்குரிய உருக்களுக்கு ஏற்ப ஏனைய உருக்களிலிருந்து வேறுபடுகின்றது. அவ்வடைப்பைத் தெரிவுசெய்க.


1.

1) 2) 3)

2.

1) 2) 3)

♦ முதலில் தரப்பட்ட உருவிற்குப் பதிலாகப் பயன்படுத்தக்கூடிய உருவைத் தெரிவுசெய்க.

03.

1) 2) 3)

04.

1) 2) 3)

♦ தரப்பட்டுள்ள பாடலை வாசித்து 5 ஆம் 6 ஆம் வினாக்களுக்கான சரியான விடையைத் தெரிவு செய்க.

கந்தையானாலும் கசக்கியுடு - என்னும்  
கற்பனைபோற்றி நடப்பாய் அம்மா!  
சுந்தர மேனியுண்டாகும் அம்மா! இந்தச்  
சுத்தத்தின் நன்மை சிறிதோ? அம்மா!

05. இப்பாடல் வலியுறுத்தும் பழமொழி யாது?
1. ஒற்றுமையே பலம் 2. கந்தையானாலும் கசக்கியுடு. 3. காகம் திட்டி மாடு சாகாது.

06. "சுந்தர மேனி" என்பதன் கருத்து.
1. அழகான உடல் 2. அழகற்ற உடம்பு 3. சுத்தத்தின் சிறப்பு

♦ அட்டவணையில் உள்ள தகவல்களுக்கேற்ப விடையைத் தெரிவுசெய்து அதன்கீழ்க் கோடிடுக.

| | கமல் | ரகு | கமலா | சேகர் | விஜய் |
|---|---|---|---|---|---|
| முதல்சுற்று | × | ✡ | ✡ | ✓ | ✡ |
| இரண்டாம் சுற்று | ✓ | ✓ | ✓ | × | ✡ |
| மூன்றாம் சுற்று | ✡ | × | ✡ | ✓ | × |

நல்லது - ✡  
சராசரி - ✓  
குறைவு - ×

07. முழுப்போட்டியிலும் நன்றாக விளையாடியவர்.
1. கமல் 2. கமலா 3. விஜய்

08. போட்டியில் ரகுவிலும் பார்க்க நன்றாக விளையாடியவர்
1. கமல் 2. சேகர் 3. விஜய்


♦ பழமொழிக்குப் பொருத்தமான கருத்தைத் தெரிவுசெய்க.

09. "வெள்ளம் வருமுன் அணைகட்ட வேண்டும்"
1. நாம் எக்காரியத்திலும் முன்னேற்பாடாக நடந்துகொள்ள வேண்டும்.
2. வெள்ளத்திற்கு பெரிய அணை கட்ட வேண்டும்.
3. அணை அத்திபாரமிட்டுக் கட்ட வேண்டும்.

10. "போதுமென்ற மனமே பொன் செய்யும் மருந்து"
1. மனம் விரும்புவதை எல்லாம் செய்ய வேண்டும்
2. மனநிறைவு எப்போதும் உயர்வானதாகும்.
3. மனம் ஒரு குரங்கு.


11) 1. 3. 5. 7. 9............... என எம்மில் பலர் உள்ளோம். எம்மை 2 ஆல் வகுத்தால் 1 மீதியாக வரும். நாம் எவ்வகை எண்கள் ஆவோம்?
1. இரட்டை எண்கள் 2. ஒற்றை எண்கள் 3. முதன்மை எண்கள்

12) 12, 13 ஆம் வினாக்களில் காட்டப்பட்டுள்ள எண் கோலத்திற்கு ஏற்ப "?" குறி உள்ள அடைப்புக்குள் வரவேண்டிய பொருத்தமான எண்ணைத் தெரிவுசெய்க.




1) 3  
2) 4  
3) 5


13. A,B இல் வரவேண்டிய இரு எண்கள்.




1) 4,21  
2) 6,20  
3) 5,15

♦ 14, 15 ஆம் வினாக்களுக்குச் சரியான விடையின் கீழ்க் கோடிடுக.

14. 4 முக்கோணப் பக்கங்களை மட்டும் கொண்ட திண்மத்தின் கீழ்க் கோடிடுக.


1. 2. 3.

15. ஒரு உதைபந்தாட்டம் 105 நிமிடம் வரை நீடித்தது. விளையாட்டு பி.ப 3.00 மணிக்கு ஆரம்பமானதாயின் எத்தனை மணிக்கு முடிந்திருக்கும்?
1) பி.ப 4.45 2) பி.ப 4.00 3) பி.ப 5.15

♦ 16, 17 ஆம் வினாக்களுக்கு சரியான விடையின் கீழ்க் கோடிடுக.

16. கடலில் மீன்கள் போல் வானத்தில்
1. தூசுகள் 2. நட்சத்திரங்கள் 3. மேடுகள்

17. விளையாடுவதற்கு மைதானம் போல் படிப்பதற்கு
1. பாடசாலை 2. புத்தகம் 3. ஆசிரியர்

♦ உரையாடலை ஒழுங்குமுறைப்படி திருத்தமாகக் குறிப்பிடும் விடையின் கீழே கோடிடுக.

18. ஒரு குழந்தை சுகவீனமுற்றபோது அவனுக்கு மருந்து எடுத்து வந்து கொடுத்த சந்தர்ப்பத்தில் நிகழ்ந்த உரையாடல்
A. மகனை விரைவாக வைத்தியரிடம் அழைத்துச் செல்வோம்.
B. பிள்ளைக்கு நல்ல காய்ச்சல். இம் மருந்தைக் கொடுங்கள் விரைவில் குணமடையலாம்.
C. இப்போது உடல் நடுங்குதல் சிறிது குறைந்துள்ளது.
D கசப்பு ஆனாலும் பரவாயில்லை மருந்து முழுவதையும் குடி.
E. மகனுக்கு காய்ச்சல்போலுள்ளது.
1. ADCEB 2. EABDC 3. BDEAC

♦ சரியான விடையின் கீழ்க் கோடிடுக.


19. மாலாவின் வயது விமலாவின் வயதின் அரைவாசி ஆகும். விமலாவின் வயது குமுதினியின் வயதின் அரைவாசி ஆகும். மூவரினதும் வயதினது கூட்டுத்தொகை 35 ஆண்டுகள் எனில், குமுதினியின்வயது யாது?
1) 15 2) 18 3) 20

♦ 20 ஆம் 21 ஆம் வினாக்களில் உள்ள சொல் வரிசைகளில் ஏனைய சொற்களுடன் பொருந்தாத சொல் இடம்பெறும் சொல்வரிசையின் கீழே கோடிடுக.

20. 1. போஞ்சி, கோவா, கரட், லீக்ஸ்
2. சிவப்பு, மஞ்சள், நிறம், நீலம்
3. மேசை, கதிரை, கட்டில், அலுமாரி

21. 1. இசைக்கருவி, புல்லாங்குழல், தபேலா, ஹார்மோனியம்
2. சுறா, அறக்குளா, சூரை, நெத்தலி
3. கிரிக்கெட், உதைபந்தாட்டம், எல்லே, ஹொக்கி


22. உருவில் ஒரு சதுர மரக்குற்றி காணப்படுகிறது. அது மேற்பரப்பில் மை பூசப்பட்டு கோடுகள் வழியே சிறு துண்டுகளாக வெட்டி வேறாக்கப்படுகின்றது. மை பூசப்படாத துண்டுகளின் எண்ணிக்கை யாது?



1) 1 2) 2 3) 3


# தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சை மாதிரி வினாத்தாள்-பகுதி 1

23. உருவின் கோலத்திற்கு ஏற்ப (?) குறியினால் காட்டப்படும் வெற்றிடத்துக்குப் பொருத்தமான உருவைத் தெரிவுசெய்க.




♦ 24, 25 ஆம் வினாக்களுக்குச் சரியான விடையின் கீழ்க் கோடிடுக.


24. உணவு, சிற்றுண்டி, வடை என்பவற்றுக்கிடையிலான தொடர்பினைக் காட்டுவதற்குப் பின்வரும் உரு வரையப்பட்டுள்ளது. இதில் A இனால் காட்டப்படுவது யாது?





1. உணவு 2. சிற்றுண்டி 3. வடை

25. ஒரு ஆற்றின் நீர் மணிக்கு 4 கிலோமீற்றர் வேகத்தில் பாய்கின்றது. மனிதனொருவன் மணிக்கு 6 கிலோமீற்றர் வேகத்தில் ஆற்றுநீர் ஓட்டத்திற்கு எதிராக வள்ளம் ஒன்றைச் செலுத்துகிறான். அவன் செல்கின்ற உண்மையான வேகத்தை மணிக்கு எத்தனை கிலோமீற்றர் எனக் காண்க?
1) 8 2) 5 3) 2

♦ பாரதி வித்தியாலயம் வடமாகாணத்தில் யாழ்ப்பாண மாவட்டத்தில் யாழ்.கல்வி வலயத்தில் அமைந்துள்ளது. இது கீழேயுள்ளவாறு குறியீடுகளினால் காட்டப்படுகின்றது.





26. பாடசாலையின் அமைவிடத்தைச் சரியாகக் காட்டும் வரிப்படத்தைத் தெரிவு செய்க?




♦ 27, 28, 29, 30 ஆம் வினாக்களுக்குச் சரியான விடையின் கீழ்க்கோடிடுக.

27. பாடசாலை ஆரம்பிக்கப்பட்டு ஐம்பது ஆண்டு நிறைவு விழா 2015 ஆம் ஆண்டில் நடைபெற்றது. அவ்விழாவில் பங்குபற்றிய போது பிரியாவின் வயது பத்து ஆகும். அப்பாடசாலையின் நூற்றாண்டு நிறைவுபெறும்போது பிரியாவின் வயது யாது?
1) 50 2) 60 3) 75

28. இரு கடதாசிக் கீலங்கள் உருவில் காட்டப்பட்டுள்ளவாறு புள்ளிக் கோட்டின் வழியே மடிக்கப்பட்டபோது தோன்றும் விதத்தைத் தெரிவுசெய்க.




♦ கீழே தரப்பட்டுள்ள மூன்று படிமுறைகளின் கீழ் கட்டடம் ஒன்றைக் கட்டத் திட்டமிடப்பட்டிருந்தது.

| படிமுறை | எடுக்கும் காலம் |
|---|---|
| 1 படிமுறை | 2 ஆண்டுகள் |
| 2 படிமுறை | 1 இன் இரண்டு மடங்கு |
| 3 படிமுறை | 1 இன் அரை மடங்கு |

29. 2004 ஆம் ஆண்டில் கட்டடம் கட்டத் தொடங்கப்பட்டது எனின் எந்த ஆண்டில் அது கட்டி முடிக்கப்படும்.
1) 2010 2) 2011 3) 2012

30. இப்போது எனக்கு வயது 11 ஆண்டுகள் ஆகும். எனது தம்பியின் வயது 4 ஆண்டுகள் ஆகும். இன்னும் எத்தனை வருடங்களில் எனது வயது தம்பியின் வயதைவிட இருமடங்காக இருக்கும்.
1) 3 வருடம் 2) 4 வருடம் 3) 8 வருடம்

31. ஒரு தொட்டியின் கொள்ளளவு 10 லீற்றர் ஆகும். ரஞ்சன் ஒரு தடவைக்கு நான்கு லீற்றர் வீதம் இட்டு அத்தொட்டியில் நீரை நிரப்புகின்றான். ஒவ்வொரு தடவைக்கும் பின்னர் அவனுடைய தம்பி இரண்டு லீற்றர் வீதம் அந்நீரை வெளியே எடுக்கின்றான். ரஞ்சன் எத்தனை தடவை நீரை இட்டபின்னர் முதன் முதலாகத் தொட்டி நிரம்பும்?
1) 4 2) 5 3) 6

32. காரில் இருவர் பயணம் செய்தனர். ஒருவர் மற்றையவரின் தந்தை ஆவார். ஆனால் மற்றையவர் தந்தையின் மகன் அல்ல எனின், மற்றையவர் அவருக்கு என்ன உறவு?
1. மகள் 2. மருமகள் 3. பேரன்

♦ ஓர் ஆடியில் விம்பமாகக் காட்சி தருகையில் அதேமாதிரித் தெரியும் இரு உருக்களும் இரு எழுத்துக்களும் எவை?

33.



34. 1. PE 2. SN 3. AH

35. இரண்டு குதிரைகள் ஓரிடத்தில் இருந்து புறப்பட்டு எதிர் எதிர்த் திசையில் 50m தூரம் செல்கின்றன. பின்னர் ஒரு குதிரை இடப்பக்கமும் மற்றைய குதிரை வலப்பக்கமும் திரும்பி ஒவ்வொரு 100m தூரம் செல்கின்றன. இப்போது இரண்டு குதிரைகளுக்கிடையிலான தூரம் எவ்வளவு?
1. 300m 2. 200m 3. 100m

36. தரப்பட்டுள்ள தரவுகளை அடிப்படையாகக் கொண்டு பின்வரும் வினாக்களுக்குரிய விடையைத் தெரிவுசெய்க.


- ஒரே நிறுவனத்தில P,Q,R,S,T ஆகிய ஐவரும் வேலை செய்கின்றனர்.
- P,Q,R ஆகிய மூவரும் ஆண்கள்.
- S,T ஆகிய இருவரும் பெண்கள்
- ஆண்கள் கரப்பந்தாட்டத்தையும், உதைபந்தாட்டத்தையும் விரும்புகின்றனர்.
- Tயும் P, R ஆகிய மூவரும் கிரிக்கெட்டையும் ஹொக்கியையும் விரும்புகின்றனர்.
- பெண்கள் வலைப்பந்தாட்டத்தை விரும்புகின்றனர்

36. கரப்பந்தாட்டத்தை விரும்புகின்றவர்கள்?
1. P, S 2. Q, T 3. P, Q


37. உதைபந்தாட்டத்தையும் கிரிக்கெட்டையும் விரும்புகின்றவர்கள்?
1. P,R 2. T, P 3. Q, R

38. கிரிக்கெட், கரப்பந்து, ஹொக்கி போன்ற விளையாட்டுக்களை விரும்புபவர்.
1. S 2. P 3. T

39. இவ்வுருவிலுள்ள முக்கோணிகளின் எண்ணிக்கை யாது?
1) 20 2) 8 3) 10



40. பின்வரும் உருக்களில் ஒன்று வேறுபட்டது. அதன் கீழ் கோடிடுக.




## மேற்படி பகுதி-1 வினாக்களுக்கான விடைகள்

| | | | |
|---|---|---|---|
| 1) 1 | 11) 2 | 21) 1 | 31) 1 |
| 2) 3 | 12) 1 | 22) 1 | 32) 1 |
| 3) 2 | 13) 1 | 23) 3 | 33) 1 |
| 4) 2 | 14) 3 | 24) 3 | 34) 3 |
| 5) 2 | 15) 1 | 25) 3 | 35) 3 |
| 6) 1 | 16) 2 | 26) 3 | 36) 3 |
| 7) 2 | 17) 1 | 27) 2 | 37) 1 |
| 8) 3 | 18) 2 | 28) 1 | 38) 2 |
| 9) 1 | 19) 3 | 29) 2 | 39) 1 |
| 10) 2 | 20) 2 | 30) 1 | 40) 2 |

# ஒரு இலட்சம் மெற்றிக் தொன் அரிசியை இறக்குமதி செய்ய அரசாங்கம் தீர்மானம்

சந்தையில் அரிசி பற்றாக் குறையை தவிர்ப்பதற்கு ஒரு இலட்சம் மெற்றிக் தொன் அரிசியை மேலதிகமாக இறக்குமதி செய்ய அரசாங் கம் தீர்மானித்துள்ளது.

'இது தொடர்பில் கைத் தொழில் மற்றும் வர்த்தக அமைச்சர் றிசாத் பதியுதீன் முன்வைத்த யோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரம் அளித்துள்ளது.

இதற்கமைய, கூட்டுறவு மொத்த விற்பனவு நிறுவனத் தின் மூலம் ஒரு இலட்சம் மெற்றிக் தொன் அரிசி இறக்கு மதி செய்யப்படவுள்ளது.

'மாதாந்தம் 20,000 மெற் றிக் தொன் என்ற வகையில் கட்டம் கட்டமாக அரிசியை இறக்குமதி செய்து சதொச கிளைகள் ஊடாகவும், பகி ரங்க சந்தையிலும் விற்பனை செய்ய நடவடிக்கை எடுக்கப் படவுள்ளதாக தெரிவிக்கப் பட்டுள்ளது. இதேவேளை, அரசாங் கம் ஏற்கனவே ஒரு இலட் சத்து 13,000 மெற்றிக் தொன் அரிசியை இறக்குமதி செய்துள்ளது. (இ-7)

# பயமுறுத்தி பணம் பறித்த போலிப் பொலிஸ் கைது!

பொலிஸ் குற்றப் புலனாய்வு திணைக்களத்தின் அதிகாரி எனக் கூறி அச்சுறுத்தி மோச டியான முறையில் பணத்தை பெற்றுக்கொண்ட ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

குறித்த நபர் கம்பஹா பிரதேசத்தில் கைது செய்யப் பட்டதாக பொலிஸார் தெரி வித்துள்ளனர்.

கம்பஹா பிரதேசத்தில் உள்ள விடுதிகளுக்கு செல் லும் நபர்களை பயமுறுத்தி இந்த நபர் பணம் பறித்து வந்துள்ளார்.

இது குறித்து பொலிஸா ருக்குக் கிடைத்த தகவல் ஒன்றை அடுத்து மேற்கொள் ளப்பட்ட சுற்றிவளைப்பில், மற்றுமொரு நபரிடம் இரண்டு இலட்சம் ரூபாவை பல வந்தமாக பெற்றுக்கொள்ள முயற்சித்த சந்தர்ப்பத்தில் அவர் கைது செய்யப்பட்டதாக பொலிஸார் தெரிவித்துள்ள னர்.

சந்தேக நபர் மேலும் சிலருடன் இணைந்து திட்ட மிட்டு இந்த குற்றச் செயலில் ஈடுபட்டு வந்துள்ளார்.

கைது செய்யப்பட்ட நபர் 42 வயதான கிரிபத்கொடை, ஹெய்யன்துடுவ பிரதேசத்தை சேர்ந்தவர் எனவும் பொலி ஸார் கூறியுள்ளனர்.

இதேவேளை, ஏனைய நபர்களை கைது செய்வ தற்காக கம்பஹா பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்ற னர். (இ-7)

# தேசத்துரோகிகள் எனப் பெயரிடப்பட்டவர்கள் தேசப்பற்றாளர்கள் என்று அரசால் பிரகடனம்

## உத்தியோகபூர்வ வர்த்தமானியில் ஜனாதிபதி கையொப்பம்

(கண்டி)

தாய் நாட்டின் சுதந்திரத் திற்காக துணிவுடன் எழுந்து நின்று வரலாற்று முக்கியத்து வமிக்க போராட்டங்களுக்கு பக்கபலமாக இருந்ததை குற்ற மாகக் கருதி ஏகாதிபத்திய வாதிகளினால் தேசத் துரோகி கள் என பெயரிடப்பட்ட 80 வீரர்களை உண்மையான தேசப்பற்றாளர்கள் என மீண் டும் பிரகடனப்படுத்தும் உத்தி யோகபூர்வ வர்த்தமானியில் நேற்று முன்தினம் பிற்பகல் கண்டியில் உள்ள வரலாற்று முக்கியத்துவமிக்க மகுல் மடுவையில் வைத்து ஜனாதி பதி மைத்திரிபால சிறிசேன கைச்சாத்திட்டார்.

தேசத்தின் சுதந்திரத்தை யும் இறைமையையும் பாது காப்பதற்காக போராடியதன் காரணமாக ஏகாதிபத்திய வாதிகளினால் தேசத் துரோகி களாக வர்த்தமானியின் மூலம் பிரகடனப்படுத்தப்பட்டிருந்த வீரர்களை அந்த அவமானத் திற்குரிய பெயரிடலில் இருந்து விலக்களிக்கும் தேசிய பொறுப்பு கடந்த சுமார் இருநூறு வருட காலமாக நிறைவேற்றப்பட்டி ருக்கவில்லை.

அந்த வகையில் இவ்வரு டம் மார்ச் மாதம் 2ஆம் திகதி உடரட்ட ஒப்பந்தம் கைச்சாத் திடப்பட்டு 202 வருடங்கள் நிறைவடைவதை முன்னிட்டு அந்த வீரர்களுக்கு உரிய கௌரவத்தை வழங்கும் வகையில் இந்த வரலாற்று முக்கியத்துவமிக்க வர்த்த மானியில் ஜனாதிபதி கைச் சாத்திட்டார்.

'உத்தமாபிவந்தனா' என்ற பெயரில் ஏற்பாடு செய்யப்பட்டி ருந்த இந்த தேசிய நிகழ்வில் உரையாற்றிய ஜனாதிபதி, வரலாற்றின் ஒரு சோகமான குற்றம் சரி செய்யப்பட்டுள்ள இன்றையதினம் (நேற்று) இலங்கை சிங்கள பௌத்த மக்களுக்கு மிகவும் முக்கிய மான ஒரு தினமாகும் எனக் குறிப்பிட்டார்.

இதற்கு முன்னரே நிறை வேற்றப்பட்டிருக்க வேண்டிய இப்பொறுப்பை தற்போது நிறைவேற்றக் கிடைத்திருப் பதையிட்டு தனது மகிழ்ச்சியை வெளிட்ட ஜனாதிபதி, அன்று சுதந்திரப் போராட்டத்தில் தாய் நாட்டுக்காக முன்வந்த வீரப் புருஷர்களைப் போன்று பயங் கரவாத்திற்கு எதிரான 30 வருட போராட்டத்தில் உயிர்களை தியாகம் செய்து போராடிய படை வீரர்களையும் நாம் கௌவரத்துடன் நினைவு கூர வேண்டுமெனக் குறிப் பிட்டார்.

உடரட்ட கிராம புனருத் தாபன ஆணைக்குழு கடந்த காலப் பகுதியில் கலைக்கப் பட்டிருந்த காரணத்தினால் உடரட்ட பிரதேச அபிவிருத்தி பின்னடைந்து இருப்பதாக மல்வத்தை மற்றும் அஸ்கி ரிய பீடங்களின் மகா நாயக்க தேரர்கள் உள்ளிட்ட மூன்று நிக்காயாக்களையும் சேர்ந்த மகா சங்கத்தினர் வழங்கிய ஆலோசனைக்கேற்ப அந்த நிறுவனத்தை மீண்டும் தாபிக் குமாறு தாம் முன்வைத்த அமைச்சரவை பத்திரத்திற்கு அமைச்சரவையின் அங்கீகா ரம் கிடைத்துள்ளதாக ஜனாதி பதி தெரிவித்தார்.

வரலாற்று முக்கியத்து வமிக்க கண்டி தலதாமாளி கையை அண்மித்த காணிக ளின் பிரச்சினைகள் குறித்து மகா சங்கத்தினர் தெரிவித்த தற்கு ஏற்ப அவற்றை தீர்ப்ப தற்கு நடவடிக்கை எடுக்கப்படு மென ஜனாதிபதி தெரிவித் தார்.

மகா சங்கத்தினரின் பிரித் பாராயனத்திற்கு மத்தியில் இந்த வர்த்தமானி அறிவித்த லில் கைச்சாத்திட்ட ஜனாதி பதி, மகா சங்கத்தினர் மற்றும் அமைச்சர்கள், பாராளுமன்ற உறுப்பினர்களுடனும் புகைப் படத்திலும் தோற்றினார்.

அதனைத் தொடர்ந்து தலதாமாளிகை வளாகத் தில் உள்ள வாரியபொல ஸ்ரீ சுமங்கல தேரரின் உருவச் சிலைக்கும் கெப்பட்டிப்பொல நிலமேயின் நினைவுத் தூபிக் கும் ஜனாதிபதி மலர் மாலை அணிவித்தார்.


அதனைத் தொடர்ந்து 'உத்தமாபிவந்தனா' தேசிய நிகழ்ச்சியில் கலந்து கொண் டார். இங்கு விசேட அனு சாசன உரையை நிகழ்த்திய மல்வத்தை மற்றும் அஸ் கிரிய அனுநாயக்க தேரர்கள் வரலாற்றினால் உருவாக்கப் பட்ட ஒரு தலைவர் என ஜனா திபதி மைத்திரிபால சிறிசே னவை பாராட்டினர்.

மல்வத்தை அஸ்கிரிய அனுநாயக்க தேரர்கள் உள் ளிட்ட மகா சங்கத்தினரும் அமைச்சர்களான விஜயதாச ராஜபக்ஷ, கயந்த கருணா திலக்க, லக்ஷ்மன் கிரியெல்ல. எஸ்.பி. திஸாநாயக்க, பிரதி அமைச்சர் கருணாரத்ன பரணவிதான, மத்திய மாகாண ஆளுநர் நிலுக்கா ஏக்க நாயக்க, முதலமைச்சர் சரத் ஏக்கநாயக்க ஆகியோரும் இந் நிகழ்வில் கலந்து கொண்டனர். (செ-11)


# facebook (f) ஃபேஸ்புக் பார்த்ததில் பிடித்தவை... Like 1003

Search for people, places and things | Nagendram Home

சுசி




வேலன்




கனி





மகி





கருணாகரன்




கிரிசா




நீங்கள் பார்த்த ஃபேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவை இருந்தால் www.facebook.com/valampurii எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள். அவை உங்கள் பெயர்களுடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.










அரச வேலைவாய்ப்பைக் கோரி வடக்கு மாகாண வேலையற்ற பட்டதாரிகள் யாழ்.மாவட்டச் செயலகம் முன்பாக நேற்று நான்காவது நாளாகவும் போராட்டத்தை முன்னெடுத்தனர்.

இரவு பகலாக தொடரும் இந்தப் போராட்டத்தில் பட்டதாரிகள் அனைவரும் வீதியின் ஓரத்தில் உணவு சமைத்து உண்டு தமது போராட்டத்தை முன்னெடுத்து வருகின்றனர். தமக்கான தீர்வு கிடைக்கும் வரையில் போராட்டம் தொடருமென பட்டதாரிகள் அறிவித்துள்ளனர்.

(படங்கள் : உ.சாளின்)

## சொல்லாடல் விவாத அரங்கு

யாழ். இந்துக்கல்லூரி மாணவர்களும் கொழும்பு இந்துக் கல்லூரி மாணவர்களும் நேருக்கு நேர் சந்திக்கும் வருடாந்த சொல்லாடல் விவாத அரங்கு இன்று 3 ஆம் திகதி வெள்ளிக் கிழமை மாலை 6.30 மணிக்கு கொழும்பு இந்துக் கல் லூரியின் பிரதான மண்டபத்தில் இடம்பெறும். கொழும்பு இந்துக் கல்லூரி அதிபர் ப.பரமேஸ்வரனின் தலைமையில் இந்நிகழ்வு இடம் பெறவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (இ-3)

## நெல்லியடியில் திருட்டு அதிகரிப்பு

(கரணவாய்)

நெல்லியடி நகரப்பகுதியில் திருட்டுச்சம்பவங்கள் அதிகரித்துள்ளதாக பொதுமக்கள் தெரிவித்துள்ளனர். வர்த்தக நிலையங்களிற்குச் செல்லும் பொதுமக்கள் தமது வாகனங்களில் வைத்து விட்டுச் செல்லும் கைப்பைகளை சிலர் திருடிச் செல்வதாக வர்த்தக சங்கத்தினரிடம் முறையிட்டுள்ளனர். அவசர தேவைக்காக வருபவர்கள் கைப்பைகளை துவிச்சக்கரவண்டிகள் மற்றும் வாகனங்களில் விட்டுவிட்டு செல்வதை சாதகமாகப்பயன்படுத்தி திருடர்கள் கைவரிசையைக் காட்டி வருகின்றனர். (இ-3-60)

## மாடியிலிருந்து விழுந்து குழந்தை பலி

(கொழும்பு)

கொழும்பு கொட்டகலை ரொசிட்டாப் பகுதியிலுள்ள வீடொன்றின் மாடிப்படியிலிருந்து வழுக்கி விழுந்து, ஒன்றரை வயது பெண் குழந்தை உயிரிழந்துள்ளதாக திம்புள்ள-பத்தன பொலிஸார் தெரிவித்தனர். நேற்றுக் காலை இடம்பெற்ற இச்சம் பவத்தில், வஸ்மிளா என்ற பெண் குழந்தையே உயிரிழந்தது. (இ-7)

## நிர்வாகத் தெரிவு

(யாழ்ப்பாணம்)

சரவணைகிழக்குவேலணை பள்ளம்புலம் முருகமூர்த்தி சனசமூக நிலையத்தின் நிர்வாக சபைத் தெரிவு அண்மையில் இடம்பெற்றது. இதில் தலைவர் சொ.சிவயோகலிங்கம், உப தலைவர் திருமதி கை.நித்தியலட்சுமி, செயலாளர் ந.சசிதரன் , உப செயலாளர் த.அருணகிரிநாதன், பொருளாளர் திருமதி ஜெ.றாஜினி ஆகியோர் தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.(இ-3)

## போதியளவு பொலிஸார் இல்லை

(கரணவாய்)

சிறிய பொலிஸ் நிலையங்கள், காவலரண்களை அமைத்துத்தருமாறு அநேக கிராமங்களில் இருந்து விண்ணப்பங்கள் வருகின்றன. ஆனால் போதியளவுபொலிஸார் பொலிஸ் நிலையங்களில் இல்லை என யாழ். மாவட்ட பிரதிப் பொலிஸ்மா அதிபர் சஞ்சீவ தர்மரட்ண தெரிவித்தார். உப பொலிஸ் பரிசோதர் கணபதிப்பிள்ளை வடிவேலு ஞாபகார்த்தமாக துன்னாலை புளியங்கியான் சந்தியில் அமைக்கப்பட்ட பொலிஸ் காவலரண்ணத் கடந்த 28 ஆம் திகதி திறந்து வைத்த போது அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

மழை வெயிலில் காவல் நின்ற பொலிஸாருக்கு இக் கட்டடம் அமைத்துக் கொடுக்கப்பட்டமையையிட்டு மகிழ்ச்சியடைகிறேன்.

பொலிஸ் சேவையில் கடமையாற்றிய ஒருவரின் நினைவாக இக் கட்டடம் கட்டப்பட்டது என்பதை நினைத்து மீண்டும் நன்றி கூறுகின்றேன். உங்களது கோரிக்கையினை ஏற்று நாம் இங்கு காவல் கடமையில் ஈடுபட்டதனால்தான் இக் கட்டடம் கிடைக்கப் பெற்றது. பாதுகாப்பை நிலை நாட்டி சட்டம், ஒழுங்கை நிலை நிறுத்தி சட்ட விரோத செயல்களை தடுப்பதற்கே இக் காவல் நிலையம் அமைக்கப்பட்டுள்ளது. நடமாடும் சேவையில் அனைத்து இடங்களை விட பருத்தித்துறையிலே பொலிஸார் பொது மக்கள் நட்புறவுடன் செயற்பட்டனர்எனஇவர்மேலும் தெரிவித்தார்.(இ-3,60)

## வணிக ஜோதி மலர் வெளியீடு

யாழ் கனகரத்தினம் மத்திய மகா வித்தியாலயத்தின் வணிக தினமும் வணிக ஜோதி மலர் வெளியீடும் எதிர்வரும் 6 ஆம் திகதி திங்கட்கிழமை காலை 9 மணிக்கு பாடசாலையின் பிரதான மண்டபத்தில் இடம்பெறவுள்ளது.இந் நிகழ்வில் பிரதம விருந்தினர்களாக யாழ்.பல்கலைக்கழக வணிக முகாமைத்துவ பீட சிரேஷ்ட விரிவுரையாளர் கலாநிதி ஜேம்ஸ் ரொபின்சன், சிறப்பு விருந்தினர்களாக மக்கள் வங்கி சாவகச்சேரிக் கிளையின் உதவி முகாமையாளர் திருமதி மீரா காந்தயுவன் ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர்

இந் நிகழ்வில் யாழ். கொக்குவில் இந்துக்கல்லூரியின் அதிபர் பி. கணேசன் நூலினை வெளியிட்டு வைக்க முதற் பிரதியினை யாழ்ப்பாணம் கட்டடத் திணைக்கள கணக்காளர் எஸ்.அகிலன் பெற்றுக்கொள்ளவுள்ளார். (இ-3)

## கடலில் மூழ்கி மாணவன் பலி

பேருவளைப் பிரதேசத்திலுள்ள சர்வதேச பாடசாலையொன்றில் 10 ஆம் ஆண்டில் கல்வி கற்கும் 3 மாணவர்கள் நேற்று முன் தினம் கடலில் விபத்துக்குள்ளாகியுள்ளனர்.

இவர்களில் ஒருவர் நீரில் மூழ்கி உயிரிழந்துள்ளதுடன், ஏனைய இருவர் நீரில் அடித்துச் செல்லப்பட்ட நிலையில் மீட்கப்பட்டு வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

கடலில் நீராடிக் கொண்டிருக்கும் போதே அவர்கள் இந்த அனர்த்தத்துக்கு முகம் கொடுத்துள்ளனர். (இ-7)

# அமெரிக்க ஜனாதிபதியைப் போன்றவர் எனது மகன் சதுர- ராஜித பெருமிதம்

தமது மகன் சதுர அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்பை போன்றவர் என சுகாதார அமைச்சர் ராஜித சேனாரட்ன தெரிவித்துள்ளார்.

கொழும்பில் நேற்று முன் தினம் நடைபெற்ற செய்தியாளர் சந்திப்பில் செய்தியாளர்கள் எழுப்பிய கேள்விகளுக்கு பதிலளித்த போது அவர் இதனைத் தெரிவித்தார்.

கேள்வி: உங்களுடைய மகன் சதுர சமூக ஊடக வலையமைப்புக்களில் பிரபல்யம் அடைந்துள்ளார் அல்லவா?

பதில்: நல்லதுதானே. டொனால்ட் ட்ரம்ப் எவ்வாறு வெற்றியீட்டினார்? சாதகமான பிரசாரத்திலா. இல்லை பாதகமான பிரசாரத்தின் ஊடாகவே ஜனாதிபதியாக தெரிவானார்.

கேள்வி: ஜனாதிபதியாக திட்டமிட்டா இந்தப் பிரசாரம் மேற்கொள்ளப்படுகின்றது?

பதில்: ஆம் சரிதானே திட்டம் நிறைவேறினால் நல்லதுதானே.

கேள்வி: எனினும் சமூக ஊடக வலையமைப்புக்களில் பிழையான ஓர் பிரச்சாரம் செய்யப்படுகின்றது

பதில்: அதற்கு என்ன (சிரித்துக்கொண்டே) முட்டாளாக்கியேனும் சில முட்டாள்கள் பிரச்சாரத்தை வழங்குகின்றனர் என்றால் அதற்கு நாம் என்ன செய்வது? என அமைச்சர் தெரிவித்துள்ளார்.

சதுர நான்கு வயதில் போராட்டத்தில் ஈடுபட்டதாகவும் கண்ணீர்ப் புகைக்குண்டு தாக்குதலுக்கு இலக்கானதாகவும், மைத்திரிபால சிறிசேனவை பொது வேட்பாளராக நியமிக்க தாமே ஆலோசனை வழங்கியதாகவும் அண்மையில் வெளியிட்ட கருத்துக்கள் பெரும் சர்ச்சையை ஏற்படுத்தியிருந்தன.

இந்த விடயம் குறித்து ஊடகவியலாளர்கள் அமைச்சர் ராஜிதவிடம் எழுப்பிய கேள்விகளுக்கு அவர் இவ்வாறு பதிலளித்திருந்தார். (இ-7)

## கலைஞர் விபரத்திரட்டு

வலி. தென்மேற்கு சண்டிலிப்பாய் பிரதேச செயலக கலாசாரப் பிரிவினால் கலைஞர்களின் விபரங்கள் அடங்கிய கலைஞர் விபரத்திரட்டு வெளியீடு செய்யப்படவுள்ளமையால் சண்டிலிப்பாய் பிரதேச செயலக பிரிவிற்குட்பட்ட கலைஞர்கள் தங்கள் விபரங்கள் மற்றும் கலைத்துறை சார்ந்த விடயங்களை எதிர்வரும் 31.03.2017 ஆம் திகதிக்கு முன்னர் கலாசார உத்தியோகத்தர், பிரதேச செயலகம், வலி.தென்மேற்கு எனும் முகவரிக்கு அனுப்பி வைக்குமாறு பிரதேச செயலாளர் அறிவித்துள்ளார். (இ

# சிவப்பு நிறமாகிய ஆரியகுளத்து நீர்

# Red Blooms in Ariyakullam

## ஓர் ஆய்வு




Ariyakulam pond- Dept of Fisheries Science University of Jaffna

(நேற்றைய தொடர்ச்சி)

Azolla தாவர இலையின் உடலமைப்பியல் மேலும் ஆராயப்பட்டபோது Anabaena azolla எனும் சயனோ பற்றீரியா ஆனது ஒன்றிய வாழ்க்கைக்குரிய ஈட்டத்தில் இலையின் முதுகுப்புறச் சோனையில் அவதானிக்கப்பட்டது.

Wolffia இனங்கள் Lemna இனங்கள் மிதக்கும் வகைக்குரியவைகளாக அடையாளப்படுத்தப்பட்டுள்ளன. Wolffia வேரற்றதும் மேற்பரப்பில் காணப்படும் வகை



Anabaena azollae இன் இழைகள்

யாகவும் Lemna மேற்பரப்பு அதற்கு சற்று கீழே காணப்பட்ட நிலையில் ஒன்று அல்லது மேற்பட்டவேர்களைக் கொண்டிருந்தமையும் அவதானிக்கப்பட்டது.

குளத்தினது நீர் மாதிரியானது பற்றீரியா குடித்தொகைப் பகுப்பாய்வியலுக்குட்படுத்தப்பட்டபோது அமையத்திற்கேற்ற பற்றீரியாக்களின் எண்ணிக்கை 1 ml மாதிரியில் எண்ணிக் கணக்கிட முடியாதளவில் அவதானிக்கப்பட்டுள்ளது.

காற்றின்றி வாழ் பற்றீரியாக்களின் எண்ணிகையும் மிகவும் அதிகரித்த நிலையில் காணப்பட்டுள்ளது.

பற்றீரியா வளர்ப்பு ஊடகத்தில் வளர்க்கப்பட்ட பற்றீரியாக்களில் சிவப்புநிறப் பொருளை உருவாக்கும் பற்றீரியாக்கள் எதுவும் அவதானிக்கப்படவில்லை. வளர்ப்பூடகத்தில் பங்கசுக்கள் எதுவும் அடையாளப்படுத்தப்படவில்லை. மலநாட்டமுள்ள (Faecal) coliform பற்றீரியாக்கள் மிகவும் அதிகரித்த எண்ணிக்கையில் காணப்பட்டன.

மேற்படி நுண்ணுயிரினவியலுக்குரிய பகுப்பாய்வின்படி ஆரியகுளத்து நீரில் மலத்தொற்றுகை ஏற்பட்டுள்ளது என்பது தெளிவாகின்றது. இந்த நீர்ச்சூழல் தொகுதியானது காற்றின்றிய நிலைக்கு மாறி வருவதை காற்றின்றிய அங்கிகளின் அதிகரித்த பெருக்கம் சுட்டிக்காட்டுகின்றது.

Azollapinnata எனும் பன்னத் தாவரங்களின் சீறிலைகளின் கீழ்ப்புற மேற்பரப்பு சிவப்பு நிறமாக மாறியிருந்தமை அவதானிக்கப்பட்டது.

கீழ்மேற்பரப்பில் இருந்து மேற்புறம் நோக்கி சிவப்புநிறப் பரம்பல் அவதானிக்கப்பட்டது. இலைகளின் கீழ்ப்புறமேற்றோல் கலங்களில் அதிகளவிலும் இலை நடுவிழையக் கலங்களில் குறைந்தளவிலும் சிவப்புநிறப் பரம்பல் அவதானிக்கப்பட்டது.

மாசடைந்த நீர் நிலைகளில் மேற்கொள்ளப்பட்ட ஏனைய ஆராய்ச்சிக் கட்டுரைகளின் அடிப்படையில் சிவப்புநிறத்திற்கு காரணமான நிறப் பொருள் Deoxyanthocyanin ஆகும்.

Azolla தாவரமானது பல்வேறு தகைப்பு (Stress) நிலைமைகளுக்குட்படுத்தப்படும் போது சிவப்பு நிறப் பொருள் மிகவும் அதிகளவில் உருவாக்கப்படுகின்றது.

நிறப் பொருள் உருவாக்கமானது நீரினது pH, வெப்பநிலை, ஒளியின் செறிவு, உலோக அயன்கள், துணையான நிறப் பொருட்களின் இடைத்தாக்கம் மற்றும் கனியுப்புக்கள் போன்ற காரணிகளில் தங்கியுள்ளது. இவை சிவப்புநிறப் பொருளின் உருவாக்கம் மற்றும் உறுதித்தன்மையில் பிரதான செல்வாக்குச் செலுத்தும் காரணிகளாகும். இவையே தகைப்பிற்குரிய காரணிகளாகவும் காணப்படுகின்றன.


மேற்படி ஆய்வினது அடிப்படையில் ஆரியகுளத்தின் நீர் சிவப்பு நிறமாக மாறியதற்கான (red bloom)காரணங்களாக பின்வருவன அமைகின்றன.

1)Azollapinnata தாவரக் கலத்



Azollapinnata சீறிலைகளின் கீழ்ப்புற மேற்பரப்பு

தில் காணப்படும் சிவப்புநிறச் சாற்றுநிறப் பொருளானது பரவல் மூலம் வெளிநீர்ச்சூழலை அடையலாம்.



Azollapinnata

2)Deoxyanthocyanin உருவாக்கத்தால் தாவர உண்ணிகள் இத்தாவரத்தை கூடியளவில் நாடிவந்து உணவாக உட்கொள்கின்றன என்பதை ஏனைய ஆய்வு முடிவுகளில் இருந்து அறிய முடிந்துள்ளது.

இதன்போது ஏற்படுத்தப்படும் பொறிமுறைக் காயங்களால் கல உள்ளடக்கம் நீர்ச்சூழலை அடைகின்றது.

3) Azolla தாவரம் பிரிகையாதலுக்கு உட்படுவதன் மூலமும் நிறப் பொருளானது வெளிச்சூழலை அடைய வாய்ப்புண்டாகின்றது.

4)உகந்ததல்லாத நீர்ச்சூழல் நிபந்தனைகளில் Haemato coccus இனங்கள் சிறைப்பைகளை உருவாக்கின்றன.

சிறைப்பைகள் Astaxanthin எனப்படும் கரையக்கூடிய சிவப்பு நிறப் பொருளினால் செறிவாக்கப்பட்டுள்ளமை அறியப்பட்டுள்ளது. (ஏனைய நீர்ச்சூழலில் நடத்தப்பட்ட ஆய்வு முடிவுகள் இதனை உறுதி செய்கின்றன).

ஆராய்ச்சிக்குழுவின் அவதானிப்பிற்கமைய ஆரியகுளத்தின் அடித்தளத்தில் அளவுக்கதிகமான பிளாஸ்ரிக் பொருட்கள், பொலித்தீன் பைகளும் காணப்படுகின்றன.

நீர்ச்சூழல் முகாமை தொடர்பாக பரிந்துரைக்கப்படும் விதப்புரைகள்

1)சுழற்சிச்சக்கரமுறைமூலம் வளியூட்டல்

2) அடித்தளத்தில் தேங்கி இருக்கும் பிரிகை அடைதலுக்கு உட்படாத கழிவுகள் முற்றாக அகற்றப்படல் வேண்டும்.

3)நீர்த்தேக்கம் ஆனது சுழற்சி முறையில் தூர்வாரப்படல் வேண்டும்.

4)குளத்தினை மூடிக் காணப்படும் தாமரை மற்றும் ஏனைய தாவரங்களை பகுதியாக அகற்றி அந்நிலைமையை தொடர்ந்து பேணுதல்

5)கட்டுப்படுத்தப்பட்ட மிதக்கும் தாவரத்தொகுதிகளை அமைத்தல்

6)குளத்தின் நடுவில் நிழற் தாவரத்தை வளர்த்தல் (மருது)

7)சுற்றாடலில் இருந்து வெளியேற்றப்படும் கழிவுகள் முற்றாக நீருள் சேர்வதை தடைசெய்தல்

8)குளத்தின் சுற்றாடலை பொழுதுபோக்கிற்கு ஏற்றதாக அமைத்தல் (குளத்திற்கும் வீதிக்கும் இடைப்பட்ட நிலப்பிரதேசத்தில் பூங்காவினை அமைத்தல்)

இந் நிலைமை நீடித்தால் குளத்தின் சூழல் தொகுதியானது வழிமுறை வரைதலுக்கு உட்பட்டு காலப்போக்கில் இது ஓர்தரைச் சூழலாக மாற்றமடையும்.

இதற்கு அறிகுறியாக குளத்தின் தென்கிழக்கு மூலையில் வளர்ந்து காணப்படும் புற்கள் ஓர் சான்று பகிர்கின்றது.

தற்போது அமுல்படுத்தப்பட்டிருக்கும் உலக வங்கியின் நிதியிடல் ஊடான மூலோபாய நகர அபிவிருத்தித் திட்டத்தின் கீழ் யாழ்ப்பாண நகரப் பகுதியில் உள்ள குளங்களும் வாய்க்கால் தொகுதிகளும் புனருத்தாரணத்திற்கு உட்படுத்த உள்ளமையால் மேற்கூறப்பட்ட விதப்புரைகள் சிறந்த முறையில் நிறைவேற்றப்படும் என எதிர்பார்க்கலாம்.

(முற்றும்)



# சிறுவர் அரங்கம்


## தன்னம்பிக்கை கொடுத்தவன் தலையிழந்தான்

ஒரு விவசாயி குதிரையையும் ஆட்டையும் வளர்த்து வந்தான். குதிரையும் ஆடும் சிறந்த நண்பர்கள். ஒரு நாள் அந்தக் குதிரை வைரஸ் நோயால் பாதிக்கப்பட்டது. அதனால் அந்த விவசாயி குதிரைக்கு சிகிச்சையளிக்க வைத்தியரை அழைத்து வந்தான். வைத்தியர் அந்த குதிரையின் நிலையைப் பார்த்து நான் மூன்று நாட்கள் வந்து மருந்து தருகிறேன். அந்த மருந்தை சாப்பிட்டு குதிரை எழுந்து நடந்தால் சரி, இல்லையெனில் அதனை கொன்றுவிட வேண்டியது தான் என்று சொல்லி, அன்றைய மருந்தை கொடுத்துச் சென்றார்.

இவர்களது உரையாடலை அந்த ஆடு கேட்டுக்கொண்டிருந்தது. மறுநாள அந்த வைத்தியர் வந்து அன்றைய மருந்தைக் கொடுத்துச் சென்றார். பின் அங்கிருந்த ஆடு, அந்த குதிரையிடம் வந்து, “எழுந்து நட நண்பா, இல்லாவிட்டால் அவர்கள் உன்னைக் கொன்று விடுவார்கள்” என்று அந்தக் குதிரையை ஊக்குவித்தது.

மூன்றாம் நாளும் வந்து விட்டது, வைத்தியரும் வந்து குதிரைக்கு மருந்து கொடுத்துவிட்டு அந்த விவசாயிடம் “நாளை குதிரை நடக்கவில்லையெனில், அதனை கொன்றுவிட வேண்டும். இல்லாவிட்டால், அந்த வைரஸ் பரவி மற்றவர்களுக்கு பரவிவிடும்” என்று சொல்லிச் சென்றார்.

அந்த வைத்தியர் போனதும் ஆடு குதிரையிடம் வந்து; நண்பா! எப்படியாவது எழுந்து நடக்க முயற்சி செய். உன்னால் முடியும், எழுந்திரு! எழுந்திரு! என்று சொல்லியது. அந்த குதிரையும் முயற்சி செய்து எழுந்து நடந்து விட்டது.



எதிர்பாராதவிதமாக அந்த குதிரையை விவசாயி பார்க்க வரும் போது, குதிரை ஓடியதைப் பார்த்து சந்தோசமடைந்து, வைத்தியரை அழைத்து அவரிடம் “என்ன ஒரு ஆச்சரியம். என் குதிரை குணமடைந்துவிட்டது. இதற்கு நிச்சயம் உங்களுக்கு ஒரு விருந்து வைக்க வேண்டும். சரி, இந்த ஆட்டை வெட்டுவோமா! என்று சொன்னார்”

பார்த்தீர்களா!இந்த கதையில் உண்மையில் குதிரை குணமடைந்ததற்கு அந்த ஆடுதான் காரணம். ஆனால் வைத்தியரின் மருந்தால் தான் குதிரை குணமடைந்தது என்று எண்ணி கடைசியில் அந்த ஆட்டையே பலி கொடுக்க நினைக்கிறார்கள்.

இந்த உலகில் யாரால் நன்மை கிடைத்ததோ, அவர்களை விட, அந்த நன்மைக்கு அருகில் இருப்பவர்களுக்குத் தான் அதிக மரியாதை கிடைக்கும்.

முற்றும்

## 03.2017 03 இன்றைய நாளின் முன்னைய பதிவுகள்

- 1575 - இந்தியாவின் முகலாயப் பேரரசர் அக்பர் வங்காளப் படைகளைத் தோற்கடித்தார்.
- 1833 - அகிலத்திரட்டு அம்மானையின்படி, நாராயணனின் அவதாரமாக அய்யா வைகுண்டர் திருச்செந்தூரில் பிறந்தார்.
- 1857 - பிரான்சும் ஐக்கிய இராச்சியமும் சீனா மீது போரை அறிவித்தன.
- 1878 - ஓட்டோமன் பேரரசின் கீழ் பல்கேரியா விடுதலை அடைந்தது.
- 1905 - ரஷ்யாவின் இரண்டாம் நிக்கலாஸ் மக்கள் பிரதிநிதிகளைக் கொண்ட சபையை (டூமா)வை ஏற்படுத்த இணங்கினான்.
- 1918 - முதலாம் உலகப் போரில் ரஷ்யாவின் பங்களிப்பை முடிவுக்குக் கொண்டுவர ஜேர்மனி, ஆஸ்திரியா மற்றும் ரஷ்யா ஆகியன உடன்பாட்டிற்கு வந்தன.
- 1923 - டைம் இதழின் முதல் பதிப்பு வெளியிடப்பட்டது.
- 1933 - ஜப்பானில் ஹொன்ஷூ என்ற இடத்தில் நிலநடுக்கம் மற்றும் ஆழிப்பேரலை காரணமாக 3,000 பேர் வரையில் இறந்தார்கள்.
- 1938 - சவுதி அரேபியாவில் எண்ணெய் கண்டு பிடிக்கப்பட்டது.
- 1939 - மும்பாயில் மகாத்மா காந்தி ஆதிக்கவாதிகளுக்கு எதிராக உண்ணாநோன்பை ஆரம்பித்தார்.
- 1942 - இரண்டாம் உலகப் போர்: மேற்கு ஆஸ்திரேலியாவில் புரூம் என்ற நகரில் ஜப்பானின் பத்து போர் விமானங்கள் குண்டுத் தாக்குதலில் ஈடுபட்டதில் 100 பேருக்கு மேல் கொல்லப்பட்டனர்.
- 1943 - இரண்டாம் உலகப் போர்: லண்டனில் விமானக் குண்டுத்தாக்குதலின் போது சுரங்கத் புகையிரத நிலையத்தில் ஒதுங்கிய 173 பேர் நெரிசலில் சிக்கி இறந்தனர்.
- 1945 - இரண்டாம் உலகப் போர்: முன்னர் நடுநிலையாக இருந்த பின்லாந்து அச்சு நாடுகளுக்கெதிராக போரை அறிவித்தது.
- 1966 - பிரித்தானிய போயிங் 707 பயணிகள் விமானம் ஒன்று ஃபியூஜி மலையில் விபத்துக்குள்ளானதில் 124 பேர் கொலலப்பட்டனர்.
- 1969 - நாசாவின் அப்பலோ 9 விண்ணில் ஏவப்பட்டது.
- 1971 - இந்தோ-பாகிஸ்தான் போர் ஆரம்பமானது.
- 1974 - பாரிஸ் அருகில் துருக்கிய விமானம் ஒன்று வீழ்ந்து மோதியதில் அதில் பயணம் செய்த அனைத்து 346 பேரும் கொல்லப்பட்டனர்.
- 1974 - லூத்தரன் சபைகளுல் சில கத்தோலிக்க திருச்சபையில் இணைந்தன.
- 1991 - சோவியத் ஒன்றியத்தில் இருந்து பிரிந்து செல்ல ஆதரவாக லாத்வியாவின் 74% மக்களும் எஸ்தோனியாவின் 83% மக்களும் வாக்களித்தனர்.
- 1992 - பொஸ்னியா என்ற நாடு உருவாக்கப்பட்டது.
- 2002 - சுவிட்சர்லாந்து ஐநாவில் இணைவதற்கு ஆதரவாக சுவிட்சர்லாந்தில் மக்கள் வாக்களித்தனர்.

### பிறப்புகள்

- 1839 - ஜாம்ஷெட்ஜி டாடா, இந்தியத் தொழிலதிபர் (இ. 1904)
- 1845 - கியார்கு கேன்ட்டர், கணிதவியலர் (இ. 1918)
- 1847 - அலெக்ஸாண்டர் கிரஹாம் பெல், கண்டுபிடிப்பாளர் (இ. 1922)
- 1935 - அன்புமணி, ஈழத்து எழுத்தாளர் (இ. 2014)
- 1941 - பங்காரு அடிகளார் இந்திய ஆன்மீக குரு
- 1950 - திக்குவல்லை கமால், ஈழத்து எழுத்தாளர்.
- 1955 - கணபதி கணேசன், தமிழ் இதழியலாளர் (இ. 2002)
- 1970 - இன்சமாம் உல் ஹக், பாகிஸ்தான் துடுப்பாட்டக்காரர்

### இறப்புக்கள்

- 1703 - ராபர்ட் ஹூக், ஆங்கிலேய அறிவியலாளர் (பி. 1635)
- 1707 - ஔரங்கசீப், மொகாலயப் பேரரசர் (பி. 1618)
- 1996 - சி. சிவஞானசுந்தரம், சிரித்திரன் ஆசிரியர்.
- 1999 - ஜேராட் ஹேர்ஸ்பேர்க், நோபல் பரிசு பெற்றவர் (பி. 1904)

### சிறப்பு நாள்

- பல்கேரியா - விடுதலை நாள் (1878)

## சந்தைகளில் நேற்றைய விலை

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | நெல்லியடி | கொடிகாமம் | சுன்னாகம் | சாவச்சேரி | கிளிநொச்சி | மருதனார்மடம் |
|---|---|---|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 80 | 100 | 50 | 60 | 70 | 60 | 60 |
| உருளைக்கிழங்கு | 90 | 100 | 80 | 120 | 100 | 100 | 90 |
| பச்சைமிளகாய் | 150 | 100 | 100 | 120 | 120 | 200 | 150 |
| தக்காளி | 50 | 60 | 40 | 30 | 50 | 80 | 50 |
| மரவள்ளிக்கிழங்கு | 60 | 100 | 70 | 60 | 80 | 80 | 60 |
| கோவா | 30 | 60 | 20 | 30 | 40 | 50 | 40 |
| கரட் | 50 | 60 | 40 | 60 | 50 | 120 | 40 |
| பூசணி | 80 | 60 | 35 | 50 | 60 | 60 | 40 |
| புடோல் | 80 | 60 | 40 | 80 | 60 | 80 | 50 |
| வாழைக்காய் | 80 | 60 | 50 | 40 | 50 | 80 | 50 |
| சின்ன வெங்காயம் | 100 | 150 | 100 | 80 | 100 | 120 | 60 |
| பெரிய வெங்காயம் | 80 | 120 | 80 | 100 | 100 | 100 | 90 |
| பாகற்காய் | 120 | 300 | 180 | 120 | 120 | 160 | 150 |
| வெண்டிக்காய் | 100 | 100 | 80 | 120 | 80 | 120 | 100 |
| கருணைக் கிழங்கு | 50 | 100 | 50 | 50 | 50 | 80 | 50 |
| பயற்றங்காய் | 140 | 150 | 100 | 120 | 100 | 120 | 100 |
| லீக்ஸ் | 50 | 100 | 60 | 80 | 60 | 80 | 50 |
| பீற்றூட் | 60 | 100 | 40 | 40 | 50 | 80 | 50 |
| கறிமிளகாய் | 200 | 200 | 90 | 120 | 100 | 160 | 50 |
| முருங்கைக்காய் | 500 | 300 | 400 | 300 | 280 | 600 | 200 |
| போஞ்சி | 120 | 100 | 60 | 80 | 100 | 150 | 60 |
| கத்தரித்தம்புள்ள | 60 | 100 | 40 | 50 | - | 40 | 40 |
| கீரை - 1பிடி | 40 | 50 | 20 | 30 | 30 | 40 | 30 |
| தேசிக்காய் | 80 | 70 | 50 | 80 | 80 | 80 | 90 |
| தேங்காய் (ஒன்று) | 60 | 50 | 20-50 | 60 | 60 | 50-60 | 60 |
| இராசவள்ளி | 180 | 300 | 160 | 200 | 160 | 200 | 180 |
| வெங்காயப்பூ | 60 | 50 | 40 | 60 | 40 | 80 | 40 |
| முள்ளங்கி | 50 | 100 | 30 | 60 | 60 | 80 | 60 |
| பொன்னாங்காணி | 40 | 60 | 15 | 30 | 20 | 30 | 30 |
| வல்லாரை | 15 | 20 | 15 | 20 | 20 | 20 | 20 |
| ஈரப்பலா | 60 | 60 | 50 | 60 | 80 | 60 | 60 |

தெய்வ நம்பிக்கை, தன்னம்பிக்கை, செயற்படும் ஆற்றல் உள்ள மனிதர்கள் விரும்பிய இலட்சியத்தை அடைந்தே தீருவார்கள். – ஓர் அறிஞர்

வலம்புரி
T.P : 021 567 1530
website : www.valampurii.lk

## அபிவிருத்தி பற்றியும் ஆழ்ந்து சிந்தியுங்கள்

இரண்டாம் உலகப் போரின் போது அணுகுண்டு வீசப்பட்ட ஜப்பான் இன்று உலகம் வியக்கும் வண்ணம் எழுந்து நிற்கிறது.

இதற்குக் காரணம் ஜப்பானிய மக்களின் கடின உழைப்பும் தொழில்நுட்பப் பிரயோகமும் என்பது மறுக்க முடியாத உண்மை.

இரண்டாம் உலகப் போரின்போது ஜப்பானின் இரு பெரும் நகரங்கள் மீது அணுகுண்டுகள் வீசப்பட்டன.

அணுகுண்டு வீச்சினால் ஜப்பான் முற்றாக அழிந்தொழிந்து போகும் என்பது குண்டு வீசியவர்களின் நினைப்பு.

ஆனால் எதிரிகளையும் தலைகுனிய வைக்கும் அளவில் ஜப்பான் மீண்டும் தலை நிமிர்ந்து நிற்கிறது.

இதன் இரகசியம் என்ன என்றறிவது யுத்தத்தினால் பாதிக்கப்பட்ட இனங்களின் தலையாய கடமையாகும்.

அந்த வகையில் இலங்கையில் நடந்த கொடும் போரில் திட்டமிட்டு தமிழினம் அழிக்கப்பட்டது.

இதன் பின்னணியில் சில வெளிநாடுகளும் இருந்துள்ளன என்ற உண்மைகள் மறுப்பதற்குரியவையல்ல.

யுத்தம் நமக்குத் தந்த இழப்புக்கள் தமிழினத்தை தொடர்ந்தும் அழிக்குமாயின் அந்த இழப்புக்களோடு நாம் துவண்டு போவோமாயின் இலங்கையில் தமிழினத்தை அழிக்க வேண்டும் என்று நினைத்துச் செயற்பட்ட எதிரிகளுக்கு அது வெற்றியாக அமைந்து விடும்.

இன்றிருக்கக்கூடிய சூழ்நிலையில் வாழ்ந்து காட்டுதல் என்பதே தமிழர்களால் முன்னெடுக்கப்பட வேண்டிய போராட்டமாகும்.

ஓ! சர்வதேசமே! தமிழினம் வீழ்ந்து விட்டதாக நினைத்தாயோ! என்று கம்பீரத்துடன் எழுந்து நின்று கேட்பதாக தமிழினத்தின் மீள் எழுகை இருக்க வேண்டும்.

ஆனால் யுத்தத்துக்குப் பின்பான எங்களின் நிலைமை மிகவும் கவலைக்குரியதாக உள்ளது.

விவசாய உற்பத்திகள் வீழ்ந்து போகின்றன. இலங்கைத் திருநாட்டின் மூளை என்று போற்றப்பட்ட வட மாகாணம் இன்று கல்வியில் கடைசி நிலை என்றாயிற்று.

எங்களிடம் ஏற்கெனவே இருந்த அற்ப சொற்ப உற்பத்தி நிறுவனங்களும் யுத்தத்தின் கோரப் பசிக்கு இரையாகிற்று.

தனித்து அரச வேலை என்பதை விட்டால் வேறு எதுவும் முடியாது என்றளவில் எங்கள் வடக்கு கிழக்கு தமிழ் இளைஞர்களின் நினைப்பு உள்ளது.

போதிய தொழிற்பயிற்சிகள் முன்னெடுக்கப்படவில்லை. உற்பத்தி நிறுவனங்கள் இன்று வரை உருவாக்கப்படவில்லை என்று கூறுமளவிலேயே நிலைமை உள்ளது.

வெளிநாடுகளுடன் இணைந்து தொழில்நுட்பப் பயிற்சிகளை வழங்குவதற்கான ஏற்பாடுகளும் ஏதுமில்லை.

இந்நிலையில் யுத்தம் அழித்ததைவிட யுத்தத்தின் பின்பான எங்களின் திறனற்ற செயற்பாடே எங்களை அதிகமாக அழிக்கப் போகிறது.

வடக்கு மாகாண சபையின் கடந்த கால செயற்பாடுகளைப் பார்க்கும் போது எந்தப் பிரயோசனமான நிகழ்வுகளும் அங்கு விவாதிக்கப்பட்டதாகத் தெரியவில்லை.

நீ பெரிது! நான் பெரிது! நான் அவரின் ஆள், நீ இவரின் ஆள் என்ற வெறுவிலித்தனத்தைவிட வேறு எதுவும் இல்லை.

இந்த அவலங்கள் நீக்கப்பட வேண்டும். யுத்தம் எங்களை அழிக்க முடியாது. நாம் தமிழர்கள் மீண்டும் எழுவோம். பேரினவாதத்துக்கும் உலகத்துக்கும் நாங்கள் யார் என்று காட்டுவோம்.

இதுவே எங்கள் கோஷமாகவும் அமையட்டும். இதற்காக அனைவரும் பாடுபட வேண்டும்.

# வாக்குறுதிகளை நிறைவேற்ற வேண்டும்

## இலங்கைக்கு பிரிட்டன் அழுத்தம்

(கொழும்பு)

ஐக்கிய நாடுகள் சபையில் இலங்கை வழங்கிய வாக்குறுதிகளை நிறைவேற்றுவதற்கு பிரித்தானியா அழுத்தம் கொடுக்க வேண்டும் எனக் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

பிரித்தானிய தொழிற் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் **John Mcdonal** இந்த கோரிக்கையினை முன்வைத்துள்ளார். "தமிழ்ஸ் போ லேபர்ஸ்" நிகழ்வு அந்நாட்டு நாடாளுமன்றத்தில் இடம்பெற்றது.

இதில் கலந்துகொண்டு கருத்து தெரிவித்த போதே அவர் இந்த கோரிக்கையினை விடுத்துள்ளார்.

தொடர்ந்தும் கருத்து தெரிவித்து அவர்,

நல்லிணக்கம், பொறுப்புகூறல் உள்ளிட்ட விடயங்கள் தொடர்பில் இலங்கை அரசாங்கம் அதிக கவனம் செலுத்த வேண்டும்.

எவ்வாறாயினும், ஐக்கிய நாடுகள் மனிதவுரிமைகள் பேரவையின் தீர்மானங்களை மலினப்படுத்தும் வகையில், இலங்கை செயற்பட்டு வருகின்றது.

எனவே, நீதியை நிலைநாட்டல்மற்றும்உண்மையை கண்டறிதல் போன்ற விடயங்களில் இலங்கை உரிய நடவடிக்கை எடுக்கவில்லை எனவும் அவர் குற்றம் சுமத்தியுள்ளார்.

இதனிடையே, யுத்தக் குற்றம் தொடர்பில் இலங்கை உள்ளக விசாரணையை வலியுறுத்தியுள்ள நிலையில், அதனை அனுமதிக்க முடியாது எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

இவ்வாறு உள்ளக விசாரணையை மேற்கொள்ளும் போது அது சுயாதீனமான விசாரணையாக அமையாது எனவும் **John Mcdonal** சுட்டிக்காட்டியுள்ளார்.

இதேவேளை, ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையினை சமாளிக்கும் முயற்சியில் இலங்கை ஈடுபட்டுள்ளதாக அவர் குற்றம் சுமத்தியுள்ளார்.

எனவே, அதனை தடுத்து நிறுத்தும் வகையில் பிரித்தானியா நடவடிக்கை எடுக்க வேண்டும் என அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

இதனிடையே, ஐக்கிய நாடுகள் மனிதவுரிமை பேரவையின் தீர்மானத்தை நடைமுறைப்படுத்துவதற்கு இலங்கைக்கு கால அவகாசம் வழங்குவது தொடர்பில் பிரித்தானியா தீர்மானம் ஒன்றை கொண்டு வரவுள்ளது.

இந்நிலையில் பிரித்தானிய அரசாங்கத்தின் தீர்மானத்திற்கு எதிராக **John Mcdonal** போர்க்கொடி தூக்கியுள்ளமை குறிப்பிடத்தக்கது. (இ-7)

## வெட்கம் இருந்தால் நிதியமைச்சர் பதவியிலிருந்து விலக வேண்டும்

### பந்துல எம்.பி.கூறுகிறார்

(கொழும்பு)

அறிக்கை வெளியிடுவது சம்பந்தமாக அமைச்சர் ரவி கருணாநாயக்கவின் முறைசாரா செயற்பாடு குறித்து அவருக்கு சிறிதளவேனும் வெட்கம் இருந்தால் அவர் அமைச்சர் பதவியில் இருந்து விலக வேண்டும் என நாடாளுமன்ற உறுப்பினர் பந்துல குணவர்த்தன தெரிவித்துள்ளார்.

கொழும்பில் நேற்று நடைபெற்ற கூட்டு எதிர்க்கட்சியின் ஊடகவியலாளர் சந்திப்பில் அவர் இதனைத் தெரிவித்தார்.


நிதியமைச்சர் ரவி கருணாநாயக்க எட்டு விடயங்களுடன் கூடிய நிதியமைச்சின் அறிக்கை என்று பகிரங்க அறிக்கையை வெளியிட்டுள்ளார்.

மத்திய வங்கியின் பிணைமுறிப்பத்திர விற்பனைக்கு முன்னாள் மத்திய வங்கியின் ஆளுநர் அஜித் நிவாட் கப்ரால் மற்றும் முன்னாள் நிதியமைச்சர் மகிந்த ராஜபக்ஷ ஆகியோருக்கு தொடர்பிருப்பதாக அறிக்கையில் நிதியமைச்சர் கூறியுள்ளார்.

எனினும் அந்த அறிக்கை நிதியமைச்சின் அறிக்கை அல்ல.

அது நிதிய மைச்சரின் ஊடக செயலாளர் வெளியிட்டுள்ளதாக நிதிய மைச்சின் செயலாளர் கூறியுள்ளார் என்பதால். பொறுப்பு சம்பந்தமாக ஒரு நிலையற்ற நிலைமை ஏற்பட்டுள்ளது.

இதன் காரணமாக நிதியமைச்சர் தனது பதவியை கைவிட வேண்டும் எனவும் பந்துல குணவர்த்தன தெரிவித்தார். (இ-7)



## அறிந்து கொள்ள வேண்டிய ஆன்மீகத் தகவல்கள்

### கஷ்டம் விலகுவதற்கு எத்திசை நோக்கி தீபம் ஏற்றவேண்டும் தெரியுமா?

❖ கார்த்திகை மாதம், பௌர்ணமி திதி அன்று ஓட்டுச் செடி என்ற நாயுருவி வேரினைப் பறித்து வந்து நமது வீட்டிற்குள் வைத்தால், தனலாபம் கிடைக்கும் என்பது ஐதீகம்.

❖ கார்த்திகை மாதத்தில், சோமவீர விரதம் இருப்பது பாவங்களை விரட்டும் என்பதால், கார்த்திகை மாதம் காவேரியில் நீராடுவது, தீபம் தானம் செய்வது, வெங்கல பாத்திரம், தானியம், பழம் தானம் ஆகியவை செய்தால் நமது வீட்டில் செல்வம் சேரும்.

❖ கார்த்திகை மாதத்தில், அதிகாலையில் எழுந்து நீராடி கடவுளை வழிபட்டால் துன்பங்கள் விலகும். மேலும் நெல்லிக்கனி தானம் செய்தால் உயர் பதவி கிடைக்கும்.

❖ கார்த்திகை மாதம் ஆலயத்தை சுத்தம் செய்தால் அளவிடற்குரிய பலன்கள் கிடைக்கும். கார்த்திகை மாதம் பகவத்கீதை படித்தால் மன அமைதி உண் டாகும்.

❖ கார்த்திகை மாதம் பௌர்ணமிக்கு பின் வரும் சோமவாரம், அல்லது கார்த்திகை மாத கிருத்திகை நட்சத்திரத்துக்கு பின் வரும் சோமவாரத்தில் விரதம் இருந்து கடவுளை வணங்குவதால் எல்லா நன்மைகளும் கிடைக்கும்.

❖ தீப திருநாளன்று கிழக்கு நோக்கி தீபம் ஏற்றினால் கஷ்டங்கள் விலகும். மேற்கு திசை நோக்கி ஏற்றினால் கடன் தொல்லை நீங்கும்.



## ஸ்ரீஸ்ரீ ரவிசங்கர் சுவாமியின் சிந்தனையில் இருந்து

### குரு என்பவர் நீ நினைப்பது போன்றவர் அல்ல

நாம் குருவை நம் கண்கள் மூலமாகப் பார்க்கிறோம். அவரை எல்லோரையும் போல் ஒரு தனி மனிதனாகப் பார்க்கிறோம். இது ஏனென்றால் நம்முடைய முனைப்பின் தோற்றத்தால்தான். அவர் எந்தச் சிரமமுமின்றி முழு மகிழ்ச்சியுடனும் முழுத் தெளிவுடனும் அமைதியுடனும் இருக்கிறார்.

குருவின் கண்ணோட்டத்தில் எல்லோரும் அவரின் ஆத்மா (இறையின்) ஆத்மா உரு. அவர் உன்னை வேறுபட்டவனாகப் பிரித்துப் பார்ப்பதில்லை. அவர் எப்படித் தனக்கு மிக அருமையானவரோ அதைப்போன்று நீயும் அவருக்கு அவ்வளவு அருமையானவன். அவர் ஒரு தனிமனிதனை, அவரது பக்தனை தனித்துப் பார்ப்பதில்லை. அவருடைய ஆன்மாவே விழித்தெழுந்தது போல்தான் பார்க்கிறார். இது எப்படி இருக்கிறதென்றால் உன்னுடைய கால் அல்லது கை மரத்துப்போய் பிறகு மறுபடியும் உணர்வைப் பெறுவது போல் இருக்கிறது.




### கணக்கு கேட்பான் இறைவன்

❖ எந்த ஒரு சமூகமும் தன் பண்புகளை மாற்றிக் கொள்ளாத வரை உண்மையில் இறைவனும் அச்சமூகத்தின் நிலையை மாற்றுவதில்லை.

❖ உறவினர்க்கு அவருடைய உரிமையை வழங்கிவிடு. மேலும், வறியவருக்கும், பயணிக்கும் வழங்கி விடுங்கள்.

❖ தனிமனிதனின் உரிமைகளை பறிக்கக் கூடாது. சமுதாயத்தின் தேவைகளைப் புறக்கணிக்கக் கூடாது. இவ்விரண்டிற்குமிடையில் இணக்கமும் நடுநிலையும் வேண்டும்.

❖ படைப்புகள் அனைத்தும் இறைவனின் குடும்பமாகும். படைப்புகளுக்கு நன்மை புரிபவரே இறை நேசத்திற்கு உரியவராவர்.

❖ மண்ணிலுள்ள மனிதர்களை நீங்கள் நேசித்தால் விண்ணிலுள்ள இறைவன் உங்களை நேசிப்பான்.

❖ அன்பு என்பது உங்கள் உறவினர்கள் மீது மட்டும் செலுத்தப்படுவதல்ல, அன்பு அனைவர் மீதும் செலுத்தப்படுவதாகும்.

❖ உங்கள் உள்ளங்களில் உள்ளவற்றை நீங்கள் வெளிப்படுத்தினாலும் அல்லது மறைத்து வைத்தாலும் எந்நிலைய்யிலும் இறைவன் உங்களிடம் அவை பற்றிக் கணக்கு கேட்பான்.

-வேதவரிகளும் தூதர் மொழிகளும் நூலில் இருந்து

## மின்சாரம் தடைப்படும்

உயர் அழுத்த மற்றும் தாழ் அழுத்த மின் விநியோக மார்க்கங்களின் கட்டமைப்பு மற்றும் பராமரிப்பு வேலைகளுக்காக இன்று காலை 9 மணியிலிருந்து மாலை 5 மணிவரை மன்னார் பிரதேசத்தில் பெரிய நீலாச்சேனை, இத்திக் கண்டல், சொர்ணபுரி, பாப்பாமோட்டை, அடம்பன், பரப்பாங் கண்டல், அடம்பன் நீர்ப்பாசனத் திணைக்களம் ஆகிய பிரதேசங்களிலும் மின் தடைப்படும். (இ-9)

# கரவெட்டி பிரதேச செயலக வருடாந்த விளையாட்டு விழா

## இமையாணன் மத்தி சம்பியன்





(கரணவாய்)

கரவெட்டி பிரதேச செயலகங்களுக்கிடையிலான விளையாட்டு விழாவில் இமையாணன் மத்திய விளையாட்டுக்கழகம் இவ்வருடத்திற்கான சம்பியன் கிண்ணத்தை சுவீகரித்தது.

கரவெட்டி பிரதேச செயலகத்தில் பதிவு செய்த கழகங்களுக்கிடையிலான வருடாந்த விளையாட்டு விழாவின் இறுதிநாள் நிகழ்வு நெல்லியடி மத்திய கல்லூரி மைதானத்தில் அண்மையில் இடம்பெற்றது.

இவ்விளையாட்டு விழாவில் தடகளம் மற்றும் பெரு விளையாட்டு ஆகியவற்றில் சிறப்பாக செயற்பட்ட இமையாணன் மத்திய விளையாட்டுக்கழகம் 37 புள்ளிகளைப் பெற்று சம்பியன் கிண்ணத்தை சுவீகரித்தது.

34 புள்ளிகளைப்பெற்ற மாலுசந்தி மைக்கல் விளையாட்டுக்கழகம் இராண்டாமிடத்தையும் 31 புள்ளிகளைப் பெற்ற வதிரிடயமன்ஸ் விளையாட் டுக் கழகம் மூன்றாமிடத்தையும் பெற்றுக் கொண்டன.

அத்துடன் தடகளப் போட்டியில் ஆண்கள் பிரிவில் அண்ணா சிலையடி இளைஞர் விளையாட்டுக்கழகம் 38 புள்ளிகளைப் பெற்று முதலாவது இடத்தினையும் மாலுசந்தி மைக்கல் விளையாட் டுக்கழகம் 30 புள்ளிகளைப் பெற்று இரண்டாவது இடத்ந்தையும் கொற்றாவத்தை றேஞ்சர்ஸ் விளையாட்டுக்கழகம் 26 புள்ளிகளைப் பெற்று மூன்றாமிடத்தையும் பெற்றுக் கொண்டன.

பெண்கள் பிரிவில் 50 புள்ளிகளைப் பெற்று உடுப்பிட்டி சிவகுமரன் விளையாட்டுக்கழகம் முதலாமிடத்தையும் இமையாணன் மத்திய விளையாட்டுக்கழகம் 45 புள்ளிகளைப் பெற்று இரண்டாமிடத்தையும் மாலுசந்தி மைக்கல் விளையாட்டுக் கழகமும் பெற்றுக்கொண்டன.

இதேவேளை பிரதேச செயலகத்தால் முதல் அறிமுகப்படுத்தப்பட்ட நன்னடத்தை அணிக்கான விருதினை இமையாணன் மத்திய விளையாட்டுக்கழகம் பெற்றுக் கொண்டது. (க-60)

# இன்றைய போட்டிகள்

பருத்தித்துறை உதைபந்தாட்ட லீக் அனுமதியுடன் வல்வை விளையாட்டுக் கழகம் நடத்தும் வடமராட்சி லீக்கும் இணைந்ததான கழகங்களுக்கிடையிலான 7 நபர் கொண்ட விலகல் முறையிலான உதைபந்தாட்ட போட்டியில் இன்று வெள்ளிக்கிழமை பிற்பகல் 3.30 மணிக்கு நடைபெறும் போட்டியில் சென். பீற்றர்ஸ் அணியை எதிர்த்து றேஞ்சர்ஸ் A அணியும்

மாலை 4.30 மணிக்கு நடைபெறும் போட்டியில் ஆதிசக்தி B அணியை எதிர்த்து கரணவாய் மத்தி A அணியும் மோதவுள்ளது (க)

# ஹொக்கி போட்டிக்கு விண்ணப்பிக்குக

கொழும்பு விசாக்கா பெண்கள் கல்லூரியின் 100 ஆவது ஆண்டு நிறைவையொட்டி 17வயது பெண்களுக்கான தேசிய ரீதியிலான ஹொக்கி சுற்றுப்போட்டி நடைபெறவுள்ளது. மேற்படி போட்டியில் பங்கு பற்றும் வடமாகாணத்தில் உள்ள 17வயது பாடசாலை பெண்கள் ஹொக்கி அணிகள் 071 844 4296 என்னும் தொலைபேசி இலக்கத்துடன் தொடர்பு கொண்டு பதிவினை மேற்கொள்ளுமாறு இலங்கை பாடசாலைகள் ஹொக்கி சங்கத்தின் உப தலைவர் ப. தர்மகுமாரன் கேட்டுக்கொண்டுள்ளார். (க)

# கிரிக்கெட் போட்டிக்கு விண்ணப்பிக்குக

அளவெட்டி ஞான வைரவர் விளையாட்டுக்கழகம் நடத்தும் 19வயதிற்குட்பட்டவர்களிற்கான கிரிக்கெட் போட்டிக்கு விண்ணப்பம் கோரப்பட்டுள்ளது

அணிக்கு 8 பேர் 6பந்துப் பரிமாற்றம் கொண்ட போட்டி எதிர்வரும் சனிக்கிழமை நடைபெறவுள்ளது. சர்வதேச விதிமுறைகளுக்கு அமைவாக விலகல் முறையில் போட்டிகள் அனைத்தும் நடைபெறும்.

போட்டிக் கட்டணமாக 600 ரூபா அறவிட்டுவதோடு வெற்றி பெறும் அணிக்கு வெற்றிக்கிண்ணமும் பணப்பரிசும் வழங்கப்படும். தொடர்புக்கு 077 446 7814 (க)

# Nothern Challengers உதைபந்தாட்டம்

## இறுதிப் போட்டியில் யங்ஹென்றிஸ்



வல்வெட்டித்துறை நெடியகாடு இளைஞர் விளையாட்டுக்கழகம் வடமாகாண ரீதியாக நடத்தும் Nothern Challengers ஊரி உதைபந்தாட்ட சுற்றுப் போட்டியில் குருநகர் பாடும்மீன் அணியை வீழ்த்தி இறுதிப் போட்டிக்குள் நுழைந்தது இளவாலை யங்ஹென்றிஸ்.

28-02-2017 அன்றுநெடியகாடு இளைஞர்வி.கழக மைதானத்தில் இடம் பெற்ற மின்னொளியிலான வடமாகாண ரீதியிலான 9 நபர் கொண்ட உதைபந்தாட்ட அரை இறுதி ஆட்டத்தில் இளவாலை யங்கென்றீஸ் விளையாட்டுக்கழகத்தை எதிர்த்து குருநகர் பாடும்மீன் வி.கழகம் மோதிக் கொண்டது.

முதல் பாதியாட்டத்தில் பரபரப்பான ஆட்டத்தை வெளிப்படுத்தியது. இரு அணிகளும் ஆட்டத்தின் 8 ஆவது நிமிடத்தில் யங்ஹென்றிஸ் அணிக்கு தண்ட உதைப்பிலான கோல் போடும்வாய்ப்பு. அதனை மகீபன் கோலாக்க முற்பட்ட வேளையில் பாடும் மீன் கோல் காப்பாளரால் அற்புதமாக தடுத்து நிறுத்தப் பட்டது

முதல் பாதியாட்டம் எவ் வித கோல்களும் பெறப் படாத நிலையில் நிறைவுற்றது.

இரண்டாவது பாதியாட்டத்தில் யங்ஹென்றிஸ் ஆதிக்கம் இருந்தது. ஆட்டத்தின் 32வது நிமிடத்தில் யங்ஹென்றிஸ் வீரர் அனோஜன் அதிரடியான கோல் ஒன்றைப் போட ஆட்டம் சூடு பிடித்தது.

அடுத்த 43வது நிமிடத்தில் கோல் போட்டு அணியின் வெற்றியை உறுதிப்படுத்தினார் யங்ஹனெறிஸ் அணி வீரர் மகீபன். ஆட்டத்தை மாற்ற போரடியது பாடும் மீன். போட்டியின் நேர முடிவின் 59வது நிமிடத்தில் பாடும் மீன் அணியின் 12 ஆம் இலக்க வீரரின் நேர் உதைப்பு மூலம் சாந்தனால் கோல் போடப்பட்டது. இறுதி ஆட்ட நேர முடிவில் 02:01 என்ற கோல் அடிப்படையில் பாடும்மீன் அணியை வீழ்த்தி இறுதிக்குள் நுழைந்தது இளவாலை யங்ஹென்றிஸ் அணி.

# சென். அன்ரனிஸ்சை வீழ்த்தி சம்பியனாகியது சென். மேரிஸ்



யாழ். பிரதேச செயலகங்களுக்கிடையிலான உதைபந்தாட்டப் போட்டியில் அண்மையில் நடைபெற்ற இறுதிப் போட்டியில் பாசையூர் சென் அன்ரனிஸ் அணியை எதிர்த்து நாவாந்துறை சென்மேரிஸ் விளையாட்டு கழகம் மோதியது.

விறுவிறுப்பான ஆட்டத்தின் தண்ட உதை மூலம் முதல் கோலை போட்டு சென்அன்ரனிஸ்அணிமுன்னிலை பெற்றது.

முதல் பாதியில் பின்னர் இரண்டாவது பாதி விறுவிறுப்பாக நடைபெற்ற போது ஜெக்சன் சென்மேரிஸ் அணிக்கான முதல் கோலை போட்டு போட்டியை சமன் செய்தார். தொடர்ந்து நிதர்சன் வெற்றிக் கோலை போட ஆட்டம் 2:1 கோல் கணக்கில் சென் மேரிஸ் அணி வெற்றி பெற்றது.

இப்போட்டியில் ஆட்ட நாயகனாக மதிவதனன் தெரிவு செய்யப்பட்டார். (க)



ஒட்டுசுட்டான் பிரதேச செயலக விளையாட்டுப் போட்டியில் உத்தியோ கத்தர்களிற்கு இடையேயான கயிறிழுத்தல் போட்டியில் அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் அணி முதலாம் இடத்தினையும் கிராம உத்தியோகத் தர்கள் அணி இரண்டாவது இடத்தினையும் பெற்றுக்கொண்டன. (க-302)

# ஹொக்கி சங்கத்தின் கலந்துரையாடல்

(யாழ்ப்பாணம்)

யாழ். மாவட்ட பாடசாலைகளுக்கு இடையிலான ஹொக்கி சங்கத்தின் 2017 ஆம் ஆண்டிற்கான ஹொக்கி அபிவிருத்தி தொடர்பான கலந்துரையாடல் இன்று வெள்ளிக்கிழமை பிற்பகல் 1.30 மணிக்கு யாழ்ப்பாணக் கல்லூரியில் நடைபெறவுள்ளது.

இதில் அனைத்து ஹொக்கி அணி பாடசாலை ஆசிரியர்களையும் நிர்வாக உறுப்பினர்களையும் தவறாது கலந்து கொள்ளுமாறு பாடசாலை கள் ஹொக்கி சங்கத்தின் செயலாளர் ப.தர்மகுமாரன் கேட்டுள்ளார். (க)

## காணாமலாக்கப்...

வலிந்து காணாமல் போகச்செய்யப்பட்ட தமிழீழ விடுதலைப் புலிகளின் திருகோணமலை மாவட்ட அரசியல்துறைப் பொறுப்பாளர் எழிலன் எனப்படும் சின்னத்துரை சசிதரன் மற்றும் அருட்தந்தை பிரான்சிஸ் ஜோசப் அடிகளார் உள்ளிட்ட பன்னிரண்டு தமிழர்களின் ஆட்கொணர்வு மனு மீதான விசாரணை, இம்மாதம் 30ஆம் திகதிக்கு ஒத்தி வைக்கப்பட்டுள்ளது.

இந்த ஆட்கொணர்வு மனு தொடர்பிலான வழக்கு முல்லைத்தீவு நீதிவான் நீதிமன்றில் எஸ்.எம்.எஸ் சம்சுதீன் முன்னிலையில் நேற்று வியாழக்கிழமை விசாரணைக்காக எடுத்துக் கொள்ளப்பட்ட நிலையில்,

நேற்றைய தினம் இந்த வழக்கிற்கு சமுகமளிக்க வேண்டிய ஓய்வுபெற்ற மேஜர் ஜெனரல் சாணக்க குணவரத்தன நீதிமன்றில் முன்னிலையாகாத நிலையில் வழக்கு விசாரணை ஒத்தி வைக்கப்பட்டுள்ளது.

தமிழீழ விடுதலைப் புலிகளின் திருமலை அரசியல்துறைப் பொறுப்பாளர் எழிலன் சார்பில் அவரது மனைவியான வடமாகாண சபை உறுப்பினர் திருமதி அனந்தி சசிதரன் உட்பட கிருஷ்ணகுமார் ஜெயகுமாரி, விஸ்வநாதன் பாலநந்தினி, கந்தசாமி காந்தி, கந்தசாமி பொன்னம்மா உள்ளிட்ட பன்னிரண்டு பேர் தமது வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்களின் சார்பில் ஆட்கொணர்வு மனுக்களை தாக்கல் செய்திருந்தனர்.

இந்த வழக்கு, கடந்த 2016, ஆம் ஆண்டு பெப்ரவரி மாதம் நடைபெற்ற வழக்கு விசாரணையின் போது, இராணுவத்தினரிடம் சரணடைந்த தமிழீழ விடுதலைப்புலி உறுப்பினர்களின் பெயர்ப் பட்டியல் தம்மிடம் இருப்பதாகவும் அந்த ஆவணத்தை நீதிமன்றில் சமர்ப்பிப்பதாகவும் இராணுவத்தினர் தரப்பில் தெரிவித்திருந்தனர்.

எனினும் இந்த வழக்கு தொடர்பிலான விசாரணை கடந்த யூலை மாதம் 14ஆம் திகதி நடை பெற்ற நிலையில், இறுதி யுத்தத்தில் 58 ஆவது படைப்பிரிவிடம் சரணடைந்த தமிழீழ விடுதலைப்புலி உறுப்பினர்கள், புனர்வாழ்வின் பின்னர் விடுதலை செய்யப்பட்டதாகவும் அவர்களின் விபரம் மட்டுமே தங்களிடம் உள்ளதாக தெரிவித்து மேஜர் ஜெனரல் சானக்க குணவர்த்தனவால் சமர்ப்பிக்கப்பட்ட ஆவணத்தை முல்லைத்தீவு மாவட்ட நீதிவான் ஏற்றுக் கொள்ளாது நீதிமன்றம் மறுத்திருந்தது.

இதேவேளை, குறித்த அறிக்கையானது முழுமையற்ற ஒரு ஆவணமாக காணப்படுவதாக அறிவித்துள்ள நீதிபதி, அனைத்து விபரங்களும் அடங்கிய முழுமையான ஆவணத்தை நீதிமன்றத்தில் சமர்ப்பிக்குமாறு உத்தரவிட்டிருந்த நிலையில் நேற்றைய தினம் அவர் நீதிமன்றத்திற்கு சமுகமளிக்காமையால் வழக்கு ஒத்திவைக்கப்பட்டுள்ளது. (செ-15,281)

## ஐ.நாவின் கோரிக்கை...

தூய்மையான அரசியல் செயற்பாட்டுடன் அமைந்த தூய்மையான அரச நிர்வாகத்தினை ஏற்படுத்துவதே தனது குறிக்கோளாகும் என ஜனாதிபதி தெரிவித்தார்.

தூய்மையான அரசியல் செயற்பாடுகளும் தூய்மையான அரசியல் கதாபாத்திரங்களுமே நாட்டின் தற்போதைய தேவைப்பாடாகக் காணப்படுகிறது எனக் கருத்து தெரிவித்த ஜனாதிபதி, தான் ஜனாதிபதி பதவியை வகித்தாலும் வகிக்காவிட்டாலும் தூய்மையான அரசியல்செயற்பாட்டிற்கான தனது குறிக்கோளை ஒரு போதும் மாற்றிக் கொள்ளப்போவதில்லை என வலியுறுத்தினார்.

ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சியின் நிறைவேற்றுக் குழு மற்றும் அகில இலங்கை செயற்குழு என்பன நேற்று பிற்பகல் இலங்கை மன்றத்தில் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவின் தலைமையில் ஒன்றுகூடிய சந்தர்ப்பத்திலேயே ஜனாதிபதி இவ்வாறு தெரிவித்தார்.

தூய்மையான அரசியல் இயக்கமாக ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சியை வலுப்படுத்தி முன்னோக்கி கொண்டு செல்ல வேண்டும் எனவும் வலியுறுத்திய ஜனாதிபதி, எந்தவொரு இடத்திலும் எந்தவொரு சந்தர்ப்பத்திலும் ஒப்பந்தங்களின் மூலமாக கட்டுப்படாது ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சியின் கொள்கைகள்மற்றும்நோக்கங்களை முன்னோக்கி கொண்டு செல்ல உண்மையான அர்ப்பணிப்புடன் தான் செயற்படுவதாக தெரிவித்தார்.

நாட்டின் இறைமை மற்றும் ஒருமைப்பாட்டினை பாதுகாப்பதற்காக தான் தொடர்ச்சியாக முன் நிற்பதுடன் எந்தவொரு சந்தர்ப்பத்திலும் வெளிநாட்டு நீதிபதிகளை நாட்டிற்கு கொண்டு வருவதற்கு தான் தயாரில்லை எனக் குறிப்பிட்டார். மனித உரிமை மீறல்கள் தொடர்பாக முன்வைக்கப்பட்டுள்ள குற்றச்சாட்டுக்களுக்கு அமைவாக வெளிநாட்டு நீதிபதிகளை நாட்டிற்கு கொண்டுவர வேண்டும் என்ற ஆலோசனையை நடைமுறைப்படுத்த வேண்டும் என ஐக்கிய நாடுகள் சபையின் மனித உரிமைகள் ஆணையாளர் இரண்டு வாரங்களுக்கு முன்னர் தெரிவித்ததுடன், தான் ஒருபோதும் சர்வதேச நீதிபதிகளை நாட்டிற்கு வரவழைப்பதற்கு தயாராக இல்லையென அவருக்கு 24 மணித் தியா லங்களுக்குள் பதிலளித்ததாகவும் தெரிவித்தார்.

மக்களின் நலன்கருதி சுதந்திரம், ஜனநாயகம் மற்றும் நீதியான சமூகமொன்றினை கட்டியெழுப்புவதற்கு அரசினால் தற்போது பாரிய வேலைத்திட்டங்கள் நிறைவேற்றப்பட்டுள்ளதுடன், மக்கள் எதிர்பார்க்கும் மாற்றத்தை அவர்களுக்குப் பெற்றுக் கொடுப்பதற்காக மேலும் பல பணிகள் நிறைவேற்றப்படவுள்ளதாக தெரிவித்த ஜனாதிபதி, ஊழல், மோசடி மற்றும் முறைகேடுகளை இல்லாதொழித்து நாட்டைக் கட்டி யெழுப்பும் தூய்மையான அரசியல் பயணத்திற்கு ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி தலைமை வழங்க வேண்டும் எனவும் தெரிவித்தார். (செ-11)

## வெலிக்கடை சிறை...

வழக்கறிஞர் சேனக்க பெரேரா, நஷ்டஈடுகளை வழங்குவதன் மூலம் மட்டுமே பாதிக்கப்பட்டவர்களுக்கு நியாயம் வழங்க முடியாது என்று தெரிவித்தார்.

அரச பாதுகாப்பு படையினர் மேற்கொண்ட துப்பாக்கிச்சூடு காரணமாகவே சம்பந்தப்பட்ட கைதிகள் கொலை செய்யப்பட்டதாக அவர் தெரிவித்தார்.

இந்த தாக்குதலின் பின்னணியில் கடந்த ஆட்சிக் காலத்தில் பாதுகாப்பிற்கு பொறுப்பாக கடமையாற்றிய உயரதிகாரிகள் மீதும் குற்றச்சாட்டுக்கள் முன்வைக்கப்பட்டுள்ளது.

ஆனால் அது குறித்து விசாரணைகளை மேற்கொள்ள அரசாங்கம் தவிர்த்து வருவதாக அவர் குற்றஞ்சாட்டினார்.

2012ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 9 ஆம் திகதி வெலிக்கடை சிறைச்சாலைக்குள் தேடுதல் ஒன்றை மேற்கொள்ள பொலிஸார் சென்ற போது ஏற்பட்ட மோதல்களை கட்டுப்படுத்த நடத்தப்பட்ட துப்பாக்கிச்சூடு காரணமாக சம்பந்தப்பட்ட கைதிகள் உயிரிழந்தது குறிப்பிடத்தக்கது. (செ-11)

## போர்க்குற்ற...

தெரிவித்துள்ளார்.

கொழும்பில் அமைந்துள்ள சுதந்திரக் கூட்டமைப்பின் தலைமையகத்தில் நேற்று நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கருத்து வெளியிட்ட அவர், இராணுவ முகாம்கள் அமைந்துள்ள காணிகளில் பொதுமக்களை குடியேற்றுவதாக பொய்யான தகவல்கள் பரப்படுவதாகவும் அவர் குற்றம்சாட்டினார்.

இந்த ஊடகவியலாளர் சந்திப்பில் தொடர்ந்து கருத்து வெளியிட்ட அமைச்சர் மகிந்த அமரவீர தாய் நாட்டிற்காக தனது அவையவங்களை இழந்த இராணுவத்தினருக்கு எவ்வித பாதிப்பும் ஏற்படாத வகையில் இந்த அரசாங்கம் நடவடிக்கைகளை எடுக்கும். அதற்கு ஜனாதிபதியும் இந்த அரசாங்கமும் உடன்பட்டுள்ளது. மின்சார கதிரை, சர்வதேச யுத்தக்குற்ற நீதிமன்றம்? சர்வதேச விசாரணை, சர்வதேச நீதிபதி உள்ளிட்ட அபாயங்களில் இருந்து அவர்களை காப்பாற்றியுள்ளோம். ஆகவே நாட்டிற்குள்ளும் அவர்களை சிறையில் அடைக்க நாம் தயாரில்லை.

இதன்மூலம் தவறிழைத்தவர்களை காப்பாற்றுகிறோம் என அர்த்தப்படுத்தக்கூடாது. பயங்கரவாதத்திற்கு எதிரான யுத்தத்தின் போது இராணுவ அதிகாரிகள் தவறிழைத்திருந்தால் அவர் நிச்சயம் தண்டிக்கப்படுவார். அதில் நாம் பின்வாங்கப்போவது இல்லை. இதற்கு முன்னர் இவ்வாறான சம்பவங்களுக்கு தண்டனை வழங்கப்பட்டுள்ளது. அரசியல் நோக்கத்திலோ அல்லது வேறு காரணங்களுக்காகவோ யாராவது தவறிழைத்திருந்தால் தண்டனை நிச்சயம் என மகிந்த அமரவீர குறிப்பிட்டார். (செ-11)

## சிகிச்சை பலனின்றி...

தாயொருவர் உயிரிழந்துள்ளார்.

ஹெப்பிட்டிக்கொலவ பகுதியைச் சேர்ந்த 25 வயதுடைய இளம் தாயே உயிரிழந்தவராவார். பெண்ணிற்கு குழந்தை பிறந்து ஒரு கிழமை கடந்த நிலையில் பன்றிக் காய்ச்சல் நோய்க்கு உள்ளாகி தொடர்ந்தும் அதிதீவிர சிகிச்சைப் பிரிவில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்று வந்த நிலையில் சிகிச்சை பலனின்றி இத்துயர்ச் சம்பவம் இடம்பெற்றுள்ளது.

இதேவேளை, 37 வயதுடைய வவுனியா பூவரசம்குளம் பகுதியைச் சேர்ந்த பெண் ஒருவர் பன்றிக்காய்ச்சல் நோய்த் தொற்றுக்கு உள்ளான நிலையில் அதிதீவிர சிகிச்சைப்பிரிவில் வைத்து சிகிச்சையளிக்கப்பட்டு வரும் நிலையில் அவரது உடல் நிலையில் முன்னேற்றம் ஏற்பட்டுள்ளதாக வைத்தியசாலை பணிப்பாளர் தெரிவித்துள்ளார்.

இது தவிர மேலும் ஐவர் பன்றிக் காய்ச்சல் காரணமாக அனுமதிக்கப்பட்டுள்ள நிலையில், அவர்களுக்கு தொடர்ந்தும் சிகிச்சையளிக்கப்பட்டு வருவதாகவும் அவர் தெரிவித்தார். (செ-15,250)


**T.Y.M.H.A SPORTS FESTIVAL - 2017**

**திருநெல்வேலி இந்து வாலிபர் சங்கம்**

நடத்தும்

**மாபெரும் விளையாட்டு விழா**

**கரம் Carrom**

- ஒற்றையர் ஆட்டம் - ஆண்/பெண்
- இரட்டையர் ஆட்டம் - ஆண்/பெண்
- குழுநிலை போட்டி - ஆண்/பெண்

வயதுப் பிரிவினருக்கான போட்டி

- 13 வயதுப் பிரிவு - ஆண்/பெண்
- 17 வயதுப் பிரிவு - ஆண்/பெண்
- 20 வயதுப் பிரிவு - ஆண்/பெண்

**சதுரங்கம் Chess**

- 8 வயதுக்குட்பட்ட ஆண்/பெண்
- 10 வயதுக்குட்பட்ட ஆண்/பெண்
- 12 வயதுக்குட்பட்ட ஆண்/பெண்
- 14 வயதுக்குட்பட்ட ஆண்/பெண்
- 16 வயதுக்குட்பட்ட ஆண்/பெண்
- 18 வயதுக்குட்பட்ட ஆண்/பெண்

**மேசைப்பந்தாட்டம் Table Tennis**

- ஒற்றையர் ஆட்டம் ஆண்/பெண்
- இரட்டையர் ஆட்டம் ஆண்/பெண்
- குழுநிலை
- 8 வயதுக்குட்பட்ட ஆண்/பெண்
- 10 வயதுக்குட்பட்ட ஆண்/பெண்
- 12 வயதுக்குட்பட்ட ஆண்/பெண்
- 15 வயதுக்குட்பட்ட ஆண்/பெண்
- 18 வயதுக்குட்பட்ட ஆண்/பெண்
- 21 வயதுக்குட்பட்ட ஆண்/பெண்

- வயதெல்லைகள் 01.01.2017 இலிருந்து கணிக்கப்படும்.
- திறந்த வயதுப் பிரிவினருக்கும் நடைபெறும்
- விண்ணப்ப முடிவுத் திகதி 09.03.2017

தொடர்பு - 077 101 6407

**மென்பந்து துடுப்பாட்டம்**

அணிக்கு 6 பேர் கொண்ட 05 பந்துப் பரிமாற்றங்களைக் கொண்ட விலகல் முறையிலான கிரிக்கெட் சுற்றுப் போட்டி இடம் T.Y.M.H.A மைதானம் (புனிக்கர் மைதானம்)

- 1ம் இடம் 50,000 ரூபாயும் வெற்றிக் கிண்ணமும்
- 2ம் இடம் 20,000 ரூபாயும் வெற்றிக் கிண்ணமும்

விண்ணப்பப் படிவம் - 2000 ரூபாய்

- அனைத்து போட்டிகளும் விலகல் முறையில் நடைபெறு
- விண்ணப்பங்களை இந்து வாலிபர் சங்கத்தில் பெற்றுக் கொள்ள முடியும்
- விண்ணப்ப முடிவுத் திகதி 09.03.2017

தொடர்புகளுக்கு - 077 151 0454 (8090)



**சபிண்டீகரண அழைப்பு**

*அன்புடையீர்!*

கடந்த 29.01.2017 ஞாயிற்றுக்கிழமை அன்று சிவபதமடைந்த எமது குடும்பத் தலைவர்

**அமரர் வல்லிபுரம் சிவசூரியகுமாரன் (தவராசா)**



அவர்களின் ஆத்மசாந்திப் பிரார்த்தனை இன்று (03.03.2017) வெள்ளிக்கிழமை பகல் 12.00 மணியளவில் நெல்லை முருகன் திருமண மண்டபத்தில் நடைபெறவுள்ளது. இந்நிகழ்விலும் தொடர்ந்து நடைபெறும் மதிய போசனத்திலும் கலந்து சிறப்பிக்கும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.

குறிப்பு:- இவ்வழைப்பை தனிப்பட்ட அழைப்பாக ஏற்று கலந்து கொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

இலகடி வீதி,
கரவெட்டி மத்தி, கரவெட்டி.

இங்ஙனம்
குடும்பத்தினர்

(C-7710)

யாழ்ப்பாண பொது நூலகம்

## ஐ.நா மனித உரிமை...

ஐ.நா மனித உரிமை ஆணையாளர் செயிட் ராட் அல் ஹுசைனுடன், இலங்கை வெளிவிவகார அமைச்சர் மங்கள சமரவீர நேரடி பேச்சுவார்த்தை நடத்தியுள்ளார். ஜெனிவாவில் உள்ள ஐ.நா பணியகத்தில் நேற்று முன்தினம் இந்தச் சந்திப்பு இடம்பெற்றுள்ளது.

இந்த சந்திப்பின் போது, இலங்கையின் மனித உரிமைகள் நிலைமைகளில் ஏற்பட்டுள்ள முன்னேற்றங்கள் தொடர்பாக கலந்துரையாடப்பட்டதாக வெளிவிவகார அமைச்சர் மங்கள சமரவீர குறிப்பிட்டுள்ளார்.

ஐ.நா மனித உரிமைகள் பேரவையில், இலங்கை தொடர்பான விரிவான அறிக்கையை, ஐ.நா மனித உரிமை ஆணையாளர் சமர்ப்பிக்கவுள்ள நிலையிலேயே இந்தச் சந்திப்பு இடம்பெற்றுள்ளது. (செ-11)

## மறியலில் இருந்த...

படி உயிரிழந்தவராவர்.

குறித்த குடும்பஸ்தர் கடந்த 2015ஆம் ஆண்டு, குற்றச்சாட்டொன்றின் பிரகாரம் சாவகச்சேரி மதுவரி நிலைய அதிகாரிகளினால் கைது செய்யப்பட்டு நீதிமன்றில் முற்படுத்தப்பட்டார்.

விசாரணைகளின் பின் கடந்த வருட இறுதியில் சந்தேக நபரை பிணையில் செல்ல சாவகச்சேரி நீதிமன்றம் அனுமதித்திருந்த நிலையிலும் இவரை பிணையில் எடுக்கயாரும் முன்வரவில்லை. இந்த நிலையில் கடந்த 18 மாதங்களாக யாழ்ப்பாண சிறையில் விளக்கமறியலில் வைக்கப்பட்டிருந்தார்.

இவருக்கு ஆஸ்துமா, இருதய நோய், இரத்த அழுத்தம் என பல நோயினால் அவதிப்பட்ட இவர், திடீர் நெஞ்சுவலி காரணமாக நேற்றுமுன்தினம் இரவு யாழ்.போதனா வைத்தியசாலைக்கு கொண்டுவரப்பட்டிருந்தார். இவரை பரிசோதித்த வைத்தியர்கள் அவர் உயிரிழந்துள்ளதாக தெரிவித்தனர்.

பிரஸ்தாப குடும்பஸ்தரின் மரண விசாரணையை யாழ்.போதனா வைத்தியசாலையின் மரணவிசாரணை அதிகாரி நமசிவாஜம் பிறேம்குமார் மேற்கொண்ட நிலையில் பிரேத பரிசோதனையின் பின்னர் சடலம் உறவினர்களிடம் ஒப்படைக்கப்பட்டது. (செ-9)

## ஏ 35 வீதியில்...

பரந்தன் முல்லைத்தீவு ஏ35 பிரதான வீதியில் உள்ள வட்டுவாகல் பாலத்திற்கு அண்மையாகவும் மற்றும் மணற் குடியிருப்பு பாலத்திற்கு அண்மையாகவும் ஏ35, வீதயின் மையப்பகுதியில் மர்மமான தீ தணல்கள் கொட்டிய நிலையில் சுமார் அரை மணி நேரம் அவை எரிந்து புகைத்துள்ளதாக நேரில் கண்ட பொதுமக்கள் தெரிவித்துள்ளனர்.

இச் சம்பவம் நேற்று வியாழக்கிழமை முற்பகல் வேளை இடம் பெற்றுள்ளது.

மேற்படி எரிதணலின் தாக்கத்தால் அவ் வீதியால் பயணித்த வாகன சாரதிகள் மற்றும் மோட்டார் சைக்கிளில் பயணித்தவர்கள் அச்சத்துடன் பயணித்துள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

வட்டுவாகல்பாலப் பகுதியில் எரிந்த எரிதணல் நீண்ட நேரம் கற்பூரம் எரிவது போன்று எரிந்தாகவும் இதனை அருகில் காவலரனில் இருந்த இராணுவத்தினர் சற்று பர்பரப்புடன் அதனை படம் பிடித்திருந்ததாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

எனினும், குறித்தஎரிதணல்என்ன? அது எங்கிருந்து

விழ்ந்தது என்பது தொடர்பில் நேற்றிரவு வரை எதுவித உத்தியோக பூர்வமான தகவல்களும் வெளியிடப்படவில்லை. (செ-15)

## தமிழக மீனவர்...

பரப்பில் வைத்து கைது செய்யப்பட்டுள்ளதோடு அவர்கள் பயணித்த படகொன்றும் கைப்பற்றப்பட்டுள்ளது.

அத்துடன் நெடுந்தீவு கடற்பரப்பில் வைத்து படகொன்றில் பயணித்த தமிழக மீனவர்கள் நால்வர் இலங்கை கடற்படையினரால் கைது செய்யப்பட்டனர்.

இவ்வாறு கைது செய்யப்பட்டவர்கள் யாழ்ப்பாணம் நீரியல் வள திணைக்களத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ள நிலையில் அவர்களை நீதிமன்றில் முன்னிலைப்படுத்த அதிகாரிகள் நடவடிக்கை மேற்கொண்டுள்ளனர்.

இதேவேளை கடற்படையினரால் பறிமுதல் செய்யப்பட்டுள்ள தமிழக மீனவர்களின் படகுகள் விடுவிக்கப்படாது என இலங்கை அரசாங்கம் அறிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (செ-11)


வலம்புரி
விளம்பரத் தொடர்புகளுக்கு
021 221 7603, 021 567 1532

வேலைவாய்ப்பு (ஆண்/பெண்)
எமது நிறுவனத்திற்கு ஆட்கள் தேவை!
1.மேற்பார்வை முகாமையாளர்
2.கணினி திருத்துநர்
3.பயிலுநர்கள்
0779086737
50/12 Hospital Road,Jaffna.
522 Manipay Road,Jaffna.
GUNA BEST PC
கணினி திருத்தம் விற்றல் வாங்குதல்
(சி-7702)

கணினி திருத்தம்
உங்கள் வீடுகளுக்கே வந்து கணினிகள் திருத்தி தருகிறோம்! அழையுங்கள்.
GUNA BEST PC 0779086737
லப்டொப் கணினிகள்
திருத்தம் விற்றல் வாங்குதல்
LAPTOP COMPUTERS CCTV CAMERA
REPAIR SALE PURCHASE INSTALLATION
கணினி மதர்போட் சிசிரிவி திருத்தம் விற்றல் பொருத்துதல்
50/12 ஆஸ்பத்திரிவீதி யாழ்ப்பாணம். 522 மானிப்பாய் வீதி யாழ்ப்பாணம்
(சி-7702)

ACCA
K-AIMS BUSINESS SCHOOL
விண்ணப்பம் கோரல்
ACCA (Association of Chartered Certified Accountant)
March மாத புதிய பிரிவுகளுக்கான விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன
தொழில்சார் கணக்கியல் கற்கை நெறி ஒன்றை
மிக குறைந்த செலவில் பூர்த்தி செய்திட
இன்றே இணையுங்கள்
புதிய பிரிவுகள்
8th March 2017 புதன் கிழமை 10.00 மணிக்கு ஆரம்பம்
Free 3 Months English diploma
K-AIMS BUSINESS SCHOOL
T.P - 0768 268 206
0773 722 104
No 59 , Point pedro road, Ariyakulam , Jaffna
(சி-7706)

கண்ணீர் அஞ்சலி
தாமோதரம்பிள்ளை பாலச்சந்திரன்
எமது துறை விரிவுரையாளர் திரு.பா.கேதீசன் அவர்களின்
அன்புத் தந்தையார் தாமோதரம்பிள்ளை பாலச்சந்திரன்
அவர்களின் திடீர் மறைவினால் துயருற்றிருக்கும்
அன்னாரின் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த
அனுதாபங்களை தெரிவித்துக் கொள்கின்றோம்
ஓம் சாந்தி!!!
தலைவர், விரிவுரையாளர்கள், ஊழியர்கள்
கணிதமும் புள்ளிவிபரவியலும் துறை யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்
(8088)

MASTER MUSICAL ACADEMY
■ DRUMS ■ GUITAR
■ KEYBOARD ■ CONGO DRUMS
வகுப்புக்கள் ஆரம்பிக்கப்படவுள்ளன.
DRUMS மேற்கத்திய முறைப்படி பயிற்றுவிக்கப்படும்.
● முழுமையான பயிற்சி
● பாடல்களுக்கு வாசிக்கக்கூடிய குறுகிய பயிற்சி
சிறுவர்களுக்கு விசேட கவனம் செலுத்தப்படும்.
T.P:-0770041014
உயரப்புலம் ஆனைக்கோட்டை
(8096)

PSP RENT A CAR
யாழ் பல்கலைக்கழக விஞ்ஞானபீடம் முன்பாக, திருநெல்வேலி.

| Type of Car | Colour | Rent Per day |
|---|---|---|
| Premio (CAB XXXX) | White | 8000/= |
| Axio (KI XXXX) | White | 6000/= |
| NISSHAN -16 (KH XXXX) | White | 4000/= |
| NISSHAN-15 (KD XXXX) | White | 3500/= |
| TATA INDICA $V_2$ (KI XXXX) | Blue | 2500/= |
| DAWOO (18-XXXX) | Black | 2000/= |


கிழமை, மாத அடிப்படைக்கு கட்டணம் மேலும் குறைக்கப்படும்
தொடர்புகளுக்கு:-
077 3777502
0711125254
(8100)

காட் போட்கள் விலைக்கு வாங்கப்படும்
பழைய காட்போட், பழைய பேப்பர், புத்தகங்கள், கொப்பிகள், பிறிண்டிங் கழிவு பேப்பர்கள் என்பன உங்கள் இடங்களுக்கே வந்து தரமான விலைக்கு எடுக்கப்படும்.
விலை 1 Kg காட்போட் 14/=
தொடர்பு:-0767205462
(8098)

வெளிநாடுகளுக்கான துரித பொதிகள் சேவை
070 330 5500
021 221 5656
உங்கள் உறவுகளுக்கு துரிதமாகவும் நம்பிக்கையாகவும் பொதிகள் மற்றும் கடிதங்களை உலகின் முன்னணி நிறுவனங்கள் ஊடாக அனுப்பிவைத்திட
அண்ணா அன் கோ
976,கே.கே.எஸ் வீதி,நாச்சிமார் கோவிலடி யாழ்ப்பாணம்
(C-7704)
எம்முடன் இணைந்து இந் நிறுவனங்களின் முகவர்களாக விரும்புவோரும் தொடர்புகொள்ளலாம்

V2 TRAVELS
தை மாதம் தங்கம் வென்ற அதிஸ்டசாலி


அதிஸ்ட எண் -N/13JAN17/1371/152
சி.தேவராசா
கரணவாய், கரவெட்டி
இவர் 13-01-2017 அன்று எமக்கூடாக 1கிலோ பொதி ஜெர்மனிக்கு அனுப்பினார்
நீங்களும் தங்கம் மற்றும் மோட்டார் சைக்கிள் வெல்ல
வாய்ப்புக்களுக்கு: 0768226240
(சி-7707)

விரைவு பொதிகள் சேவை, விமான பயணச்சீட்டுகள் விசா சேவைகள்
● அனைத்து சேவைகளும் மிக குறைந்த கட்டணத்தில்
● மேலதிக கட்டணமின்றி பொதிகள் வீடுகளில் வந்தே பெற்றுக்கொள்ளப்படும்
● விடுமுறை நாட்களிலும் ஞாயிற்றுக்கிழமைகளிலும் அலுவலகங்கள் உண்டு
● எம்மிடம் சேவைகளை பெற்றுக்கொள்பவர்களுக்கு தங்கப்பவுண், மோட்டார் சைக்கிள்கள் வெல்லும் வாய்ப்பு

UK-550*/=Kg
மற்றும் அனைத்து நாடுகளுக்கும் குறைந்த விலையில்
DELIVERY IN 3 - 5 DAYS *(நிபந்தனைகளுக்குட்பட்டது)
V2 TRAVELS-0768226240
● யாழ்ப்பாணம் ● கிளிநொச்சி ● நெல்லியடி
● பருத்தித்துறை ● வல்வெட்டித்துறை
(சி-7707)

வெளிநாடுகளுக்கான துரித தபால்கள், பொதிகள் சேவை
● 220க்கு மேற்பட்ட நாடுகளுக்கான சேவைகள்
● உணவுப் பொருட்கள், உடைகள், அன்பளிப்புப் பொருட்கள், கடல் உணவுகள், மருந்துப் பொருட்கள் என்பன ஏற்றுக் கொள்ளப்படும்.
11kg க்கு மேற்பட்ட பொதிகளுக்கு 1kgற்கான விசேட சலுகைக் கட்டணம்
லண்டன் 500/-, ஜேர்மன் 600/-, பிரான்ஸ் 650/-, சுவிஸ் 800/-, கனடா 950/- ஏனைய நாடுகளுக்கும் விசேட சலுகைகள்
குறித்த முகவரியில் ஒப்படைக்கப்படும்

திருமுருகன் கொம்நெற் (pvt) Ltd
271A, K.K.S. வீதி, யாழ்ப்பாணம். தொ.இல. 021 222 7835, 077 755 4528
கிளைகள்
No. 46, ஆடியபாதம் றோட், திருநெல்வேலி.
No. 18, பிரதான வீதி, நெல்லியடி.
பிரதான வீதி, சங்கானை.
பிரதான வீதி, பருத்தித்துறை.
57, புகையிரத நிலைய வீதி, கிளிநொச்சி.
(8101)


இப்பத்திரிகை வலம்புரி அன்.கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 03.03.2017 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.